பதிவு இலக்கம் : 105267

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepamtv.asia

விலை 30 ரூபா • தீபம் 208 • 15.12.2019







## சர்வதேச மனித உரிமைகள் தினம் - 2019




## உரிமைக்காய் குரல் எழுப்பும் உறவுகள்..






## பிரிட்டிஷ் புதிய அரசு தமிழருக்கு உதவுமா?



## சட்டத்தை கையில் எடுக்கும் நிர்ப்பந்தத்தில் மக்கள்



## நெருக்கடிக்குள் 19ஆவது திருத்தச்சட்டம்



## தமிழர்களின் அரசியலில் இன்றைய தேவை








## உலகத்தில்..

- உலகிலேயே பெரிய எரிமலை யாது? லஸ்கார்(சிலி) 5.990 மீற்றர்
- உலகிலேயே மிக நீளமான மலை எது? அந்தீஸ் மலை
- உலகிலேயே மிகவும் பரந்த கடல் எது? தென்சீனக் கடல்
- உலகிலேயே பெரிய ஏரி எது? கஸ்பியன் (ரஷ்யா-ஈரான்)
- உலகிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சி எது? ஏஞ்சல்ஸ் (வெனிசுவெலா) 979மீற்றர்
- உலகிலேயே அதிக மக்கள் தொகையுள்ள நாடு எது? சீனா
- உலகிலேயே குறைந்த மக்கள் தொகையுள்ள நாடு எது? வத்திக்கான்
- உலகிலேயே மிக நீளமான ரயில்வே பிளாட்பாரம் எங்குள்ளது? காரக்பூர்
- உலகிலேயே மிக ஆழமான ஏரி எது? பைக்கால் ஏரி
- உலகிலேயே மிக நீளமான குகை எது? மாமத் குகை
- உலகில் உள்ள ஒரே ஒரு இந்து மத நாடு எது? நேபாளம்
- உலகிலேயே மிகப்பெரிய பூ எது? ரவல்சியா ஆர்ணல்டி



## புலிக்கு பிறந்தது பூனை ஆகுமா?

ஒரு சமயம் அரபுநாட்டு அரசர் கிருஷ்ணதேவராயருக்கு ஒரு அதிசய ரோஜா செடி ஒன்றை பரிசாக அளித்தார். அதை மன்னர் தனது தோட்டத்தில் நட்டு வைத்தார்.

சிறிது காலத்திற்கு பிறகு அந்த செடியில் இருந்து ரோஜா மலர்கள் மலர்ந்தன. அங்கு வந்த தெனாலி ராமனின் மகன் அதை பறித்து தனது தாய்க்கு பரிசாக கொடுக்க நினைத்து பூக்களை பறிக்க தொட ங்கினான். பூக்களைப் பறித்துக்கொண்டு இருக்கும் போது அரண்மனைக் காவலர்கள் பார்த்துவிட்ட னர்.

அரண்மனைக் காவலர்கள் தெனாலிராமனின் மகனை அரசர் கிருஷ்ணதேவராயரிடம் காண்பிக்க அழைத்துச் சென்றனர். செல்லும் வழியில் தெனாலி ராமன் காவலர்களை பார்த்து "என்மகனை எங்கே அழைத்துக்கொண்டு செல்கிறிர்கள்?" என்று கேட்டான்.

அவர்களோ! "உங்கள் மகன் ரோஜா பூக்களை திருடிய போது அவனை நாங்கள் பிடித்துவிட்டோம். இப்போது அவனை மன்னரின் பார்வைக்காக அழைத்துச் செல்கிறோம். வேண்டுமென்றால் அவன் கைகளில் உள்ள திருடிய ரோஜா பூக்களை பார்" என்று அவன் கைக ளை காண்பிக்கச் செய்தனர். தெனாலிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இருந் தாலும் தன் மகனை காப்பாற்ற விரும்பிய தெனாலி சிறுது நேரம் யோசித்து தான் அணிந்திருந்த மேலாடையை கழற்றி மகன் மேல் போர்த்திவிட்டான்.

இன்று வெயில் அதிகமாக உள்ளது. இந்த துணி என் மகனை காப்பாற்றும் என்று கூறிவிட்டுச் சென்றார். புலிக்கு பிறந்தது பூனை ஆகுமா? தெனாலிமகன் தந்தை கூறி யதை யோசிக்க தொடங்கினான். உடனே ஒவ்வொரு பூக்களாக சாப்பிட ஆரம்பித்தான். துண்டு முடி இருபதனால் அவன் பூக்களை சாப்பிடுவதை காவலர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை

அரண்மனைக் காவலர்கள் தெனாலி ராமனின் மகனை அரசர் கிருஷ்ணதேவராயர் முன்னால் அழைத்துச்சென்றனர். காவலர்கள் மன்னரை பார்த்து "அரசே! தெனாலி ராமனின் மகன் பூக்களை திருடிய போது அவனை நாங்கள் பிடித்துவிட்டோம். இந்த குற்றத்திற்கு நீங்கள் தண்டனை வழங்க வேண்டும்" என்று கூறினர். மன்னரும் எல்லாவற்றையும் கேட்டறிந்து. பின்னர் அரசர் காவலர்களை பார்த்து. "திருடிய பூக்கள் எங்கே?" என்று கேட்டார்.
காவலர்கள் மன்னரை பார்த்து. "பூக்கள் அனைத்தும் அவன் கைகளில் தான் அரசே உள்ளது" என்று காவலர்கள் கூறினர்.

அரசர் தெனாலி மகனை பார்த்து. "உன் கைகளை காட்டு" என்று கூறினார். அவனும் வெறும் கைகளை காண்பித்தான். அவன் கைகளில் எதுவும் இல்லை.

மன்னர் தெனாலி மகனை பார்த்து. "நீ பறித்த பூக்கள் எங்கே?" என்று கேட்டார்

அவனோ! மன்னரைப் பார்த்து, "நான் பூக்கள் எதுவும் பறிக்க வில்லை. என் தந்தைக்கு அவமானம் ஏற்படுத்தவே இந்த இரண்டு காவலர்களும் இப்படி செய்தார்கள்" என்று கூறினான்.

மன்னரும் அந்த இரண்டு காவலர்களையும் திட்டி அனுப்பிவிட்டார். தெனாலியும் அவன் மகனும் எப்படியோ தப்பித்தோம் என்று சிரித்துக் கொண்டே வீட்டிற்கு புறப்பட்டனர்.

## பசுபிக் பெருங்கடல்


நம் உலகின் பெருங்கடல்களாக பசிபிக் பெருங் கடல், அட்லாண்டிக் பெருங்கடல், இந்தியப் பெருங்கடல் ஆகியவை உள்ளன.

பெருங்கடல்களுள் மிகப் பெரியது பசிபிக் பெருங்கடல் ஆகும். இது வட அமெரிக்காவையும் தென் அமெரிக்காவையும் ஆசியாவில் இருந் தும், ஆஸ்திரேலியாவில் இருந்தும் பிரிக்கிறது. ஆயிரக்கணக்கான தீவுகள் இப்பெருங்கடலில் சிதறிக் கிடக்கின்றன.


இவை, கடலுக்கு அடியில் எரிமலை வெடித்தாலோ அல் லது பவளப் பூச்சி கள் இணைந்து சுண் ணாம்புக் கூட்டப் பாறைகளை உண்டா க்கியதாலோ ஏற்பட்டவை. பூமியின் 35.25 சதவீத பரப்பை எடுத்துக் கொண் டுள்ளது. பசிபிக் பெருங்கடல், இதன் நீளம் சுமார் 16 ஆயிரம் கி.மீ அகலம் 11, 200 கி.மீ அதிகபட்ச ஆழம், மரியானஸ் தீவுகளுக்கு அருகே உள்ள 11 ஆயிரத்து 516 மீட்டர்கள். பூமியில் இருக்கும் நிலப் பகுதி அனைத்தையும் ஒன்று சேர்த்தால் கூட, அதை விடப் பெரியது பசிபிக் பெருங் கடல், உலக வரைபடத்தை பார்க்கும் போது, அதிகமான இடத்தை ஆக்கிரமித்து இருப்பது பசிபிக் பெருங்கடல் தான்.

'பசிபிக்' என்றால் அமைதி என்று பொருள். ஆனால் பசிபிக் பெருங்கடல் அமைதியாக இருந்ததில்லை. அடிக்கடி பெரும் புயலை வீசிக் கொண்டிருக்கும். சுனாமி அதிகம் வருவது இங்குதான். இதற்கு பசிபிக் என்று பெயரிட்டவர் பெர்டினாண்ட் என்ற போர்த்துக்கீசிய மாலுமி. அவர் 1519ஆம் ஆண்டு ஐந்து கப்பல்களுடன் 237 மாலுமிகளுடன் உலகை சுற்றுப் பயணம் புறப்பட்டார். அப் போது தான் பசிபிக் கடலையும் கடந்தார். இமய மலையை தூக்கி பசிபிக் கடலில் போட்டாலும், கடலுக்குள் மூழ்கிப் போய் விடும் அளவுக்கு ஆழமானது. பசிபிக் கடலில் ஆயிரக்கணக் கான தீவுகள் இருக்கின்றன.

இவற்றில் பல எரி மலையின் மேற் பகுதியில் அமைந்துள்ளன. எரிமலைத் தீவுகள் அடிக்கடி தோன்றுகின்றன.




## நாம் வாழும் பூமி



சூரியனில் இருந்து 3 வது இடத்தில் அமைந்துள்ள கிரக மான பூமி பிரபஞ்சத்தில் உள்ள நன்கு அறியப்பட்ட உயிர் வாழ்க்கைக்கு உகந்த ஒரே கிரகமாக விளங்குகிறது என லாம். சூரியனைச் சுற்றி அமைந்துள்ள நிலப்பரப்பை உடைய நான்கு கிரகங்களிலும் (Terrestrial Planets) மிகப் பெரியதான பூமி. ஏனைய எல்லா கிரகங்களிலும் மிகவும் அடர்த்தி கூடியதுடன் ஐந்தாவது மிகப் பெரிய கிரகமாகவும் விளங்குகின்றது.

சூரிய குடும்பம் தோன்றக் காரணமாக அமைந்த சோலார் நெபுலா எனும் அடர்ந்த வாயுப் படலத்திலிருந்து இயற்கை யான திரள் வளர்ச்சி (acccretion) மூலம் சூரியனுடன் சேர் ந்து 4.54 பில்லியன் வருடங்களுக்கு முன்னர் நம் பூமி தோன்றியது.

எனினும் நம் பூமியில் உயிர் வாழ்க்கை தொடங்கி 1 பில் லியன் வருடங்களே ஆகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. பூமியின் தரைப் பரப்பை பெருமளவில் ஆக்கிரமித்துள்ள சமுத்திரங்களின் காரணமாக விண்வெளியிலிருந்து பார்க்கும் போது அழகிய நீல நிறமாகத் தென்படுவதால் "புளூ பிளானெட்" என பூமி அழைக்கப் படுகின்றது.

புவி மேற்பரப்பில் 70.8% வீதம் தண்ணீரால் மூடப் பட்டுள்ளது. மேலும் பூமியின் மேற்பரப்பில் காணப்படும் மூலகங்களின் அளவை ஒப்பிடும் போது சிலிக்கன் மிக அதிகமாக 60.2% வீதமும், அலுமினியம் 15.2% வீதமும் நீர் 1.4% வீதமும் கார்பனீரொட்சைட் 1.2% வீதமும் காணப் படுகின்றன.

பூமியின் திணிவு (5.98 % 10 இன் வலு 24) முப ஆகும். பூமியின் மொத்தத் திணிவில் அதிக பட்சமாக இரும்பும் (32.1%), அதையடுத்து ஆக்ஸிஜெனும் (30.1%) தொடர்ந்து சிலிக்கனும் (15.1%) காணப்படுகின்றன.

## வர்ணம் தீட்டுவோம்



வார இதழ்
# தீபம்
"யாமார்க்கும் குடியல்லோம்"
15.12.2019 — இதழ் - 208

gmail : newsdeepam19@gmail.com
விநியோகம் / விளம்பரம் : 021 492 7542, 077 198 9445

## பௌத்த தர்மமும் மானுடநேயமும்

நாட்டின் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அடிப்படை மதவாதிகளாலும் இனவாத மேலாதிக்கச் சிந்தனையாளர் களாலும் ஜனநாயகத்தின் ஸ்திரத் தன்மைக்குப் பெரும் அச்சுறு த்தல் ஏற்படத் தொடங்கியிருக்கிறது. இத் தன்மையானது மிகவும் பகிரங்கமான விமர்சன த்துக்கும் கண்டனத்துக்கும் வழி வகுத்துள்ளது. இத்தகைய கண்டனங்களும் விமர்சன ங்களும் சர்வதேச மட்டத்திலும் ஒலிக்கத் தொடங்கியுள்ளமை கவனத்தில் கொள்ளப்பட வேண் டியதொன்று. இது எந்த வகையிலும் புறக்கணிக்க முடியாத விடயமாகும்.

புதிய ஜனாதிபதியும்,புதிய அரசும் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது தொட்டு இன்றுவரை யான காலப்பகுதிக்குள் நடந்து வரும் சில விடயங்கள் சிறுபான்மை இனத்தவர் மத்தியில் சந்தே கங்களை ஏற்படுத்தத் தொடங்கியள்ளது. பேரினவாதிகளும், பௌத்தமத அடிப்படைவாதிகளும் கொண்டிருக்கும் அரசின் மீதான மேலாதிக்கம், மக்கள் மத்தியில் அதுவும் குறிப்பாகச் சிறுபா ன்மை இனத்தவர் மத்தியில் தமது வாழ்வியல், கலாச்சார தனித்துவ உரிமைகள் தொடர்பான எதிர்காலம் குறித்தும் சந்தேகங்களுடன் கூடிய உள்ளார்ந்த அச்ச உணர்வை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது.

பௌத்த மத அமைப்புக்கள் சிலவும், பேரினவாதச் சிந்தனையாளர்கள் சிலரும் கடந்த சில வாரங்களாகப் புதிய ஆட்சி மாற்றம் என்பது இந்த நாட்டை முழுமையான பௌத்த சிங்கள தேசமாக மாற்றப் பெரும்பான்மை இன மக்கள் வழங்கிய ஆணை எனவும், இது ஒரு பௌத்த நாடு இங்குள்ள ஆட்சியும் அதனடிப்படையிலேயே இயங்கும், சிங்கள மொழியிலே எல்லா நிகழ்ச்சி நிரலும் அமையும் எனவும் வலியுறுத்தி வருவதுடன், அதனை வெளிப்படையாகப் பிரகடனப்படுத்தி நடைமுறைப்படுத்தவும் தொடங்கியுள்ளனர். அவர்களின் இந்தச் செயற்பாடா னது ஜனநாயகத் தன்மையை வெளிப்படுத்துவதாக இல்லை. ம்றாக ஒரு புதிய வகைச் சர்வாதிகாரப் போக்கினை அறிமுகம் செய்து அதனை அமுல்படுத்தும் தீவிரத் தன்மை கொண்டதாகவே தென்படுகின்றது.

ஏற்கனவே இந்தநாட்டின் சிறுபான்மை இனத்தவர்கள் தமக்கான சுதந்திரம் மறுக்கப்பட்ட இரண்டாம் தரப் பிரஜைகளாகப் பெரும்பான்மை இனத்தவரின் அரசால் ஒதுக்கப்படுவதாக உணரத் தொடங்கி வெகுகாலம் ஆகிவிட்ட நிலையில் தற்போதைய ஆட்சியின் நகர்வுகள் அதனை மேலும் வலியுறுத்துவதாக அமைந்து வருகின்றன.

பௌத்த சிங்கள மக்கள் தங்கள் பலத்தையும் இந்தத் தேர்தலில் நிருபித்து விட்டார்கள் சிறுபான்மை இனத்தவரின் ஆதரவும் பலமின்றி பௌத்த சிங்கள மக்களின் தனித்துவ பலத்தில் ஒரு ஆட்சி பலத்துடன் உருவாக்க முடியும் என்பதை நாம் நிருபித்து விட்டோம் எனப் பொது பல சேனாவின் ஞானசார தேரர் கூறியுள்ளமையின் பின்னால் ஒலிப்பது ஒரு சாதாரண அறிக்கையல்ல. சிறுபான்மை மக்களை நோக்கிச் சவால் விடும் தன்மையுடன் கூறிய அச்சுறுத்தல் வார்த்தைகளாகவே உணரமுடிகிறது.

இத்தகைய தொனியைக் கொண்டவையே உயர் கல்விஅமைச்சர் பந்துல குணவர்தனா, அமைச்சர் தினேஸ் குணவர்த்தனா போன்ற ஆட்சி அதிகார பீடத்தின் முக்கியஸ்தர்கள் அண்மைக் காலமாகப் பேசிவரும் பேச்சுக்கள். இவர்களின் பேச்சுக்களையும் அறிக்கைகளை யும் அவர்களின் சுயாதீனமான கருத்தாக எண்ணிவிட முடியாது. இதற்கு உயர் ஆட்சி பீடத்தின ரின் மௌன அங்கீகாரம் இருப்பதாகச் சிறுபான்மைச் சமூகத்தவர் சந்தேகம் கொள்வது நியாயமே! இல்லையேல் ஜனாதிபதியோ, பிரதமரோ, இத்தகைய அறிக்கைகளுக்கும் பேச்சுக்களுக்கும் வெளிப்படையாகவே ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டியது அவர்களின் தார்மீகப் பொறுப்பாகும்.

நாட்டு மக்களிடையே இன,மத, மொழி ரீதியான முரண்பாடுகள் ஆழ வேரூன்ற விடாது பாதுகாப்பதும் அதனை முற்றாக இல்லாமல் ஆக்குவதும் மக்கள் ஆட்சியை முன்னெடுக்க முனையும் ஒரு ஜனநாயக அரசின் முதன்மைச் செயற்பாடாகும். ஒரு புதிய அரசு, மக்களது முழுமையான நம்பிக்கைக்குரிய அரசாக, நாட்டை முன்னேற்றப் பாதையில் வழி நடத்தத் திடசங்கற்பம் பூண்டிருக்குமேயாதல், அதற்குத் தடையாக இருக்கும் இன,மத,மொழி சார் அடிப்படைவாதத்தை முன்னெடுக்க முனைவோருக்குக் கடிவாளமிட வேண்டியது அவசியமாகும். மனித நேயத்தைப் புறமொதுக்கிவிட்டு ஜனநாயத்தை முன்னெடுப்பது என்பது எந்த வகையிலும் சாத்தியமில்லை.

பாரம்பரிய பண்பாட்டுச் செழுமையும் அரசியல் ரீதியாகச் சிந்திக்கும் திறனும் தார்மீகச் சிந்தனைப் பண்புகளும் கொண்ட மக்கள் சமூகத்தைக் கட்டியெழுப்பும் இலட்சியமும் கொண்ட அரசு சகல விதமான அடிப்படை வாதங்களையும், அடிப்படைவாதிகளையும் இனங்கண்டு தவிர்க்க வேண்டும். பௌத்த தர்மம் என்பது மானுட நேயத்திற்கு, ஜீவகாருண்யத்திற்கு, முக்கியத்துவம் அளிக்கும் ஒப்பற்ற வாழ்வியல் மார்க்கமாகும்.

அதனை வாழ்வியல் வழிகாட்டியாகக் கொண்டவர்கள் எனக் கூறும் பௌத்த துறவிகளும்,மக்களும்,தலைவர்களும் சிறுபான்மை இனத்தோரின் வாழ்வியல் உரிமைகளை இரண்டாம் நிலைக்குத் தள்ளியும் அவர்களுக்குச் சவால் விடும் வகையில் கருத்துக்களை முன்வைத்து அவமானப்படுத்துவதும், அச்சுறுத்துவதும் பௌத்த, சிந்தனைக்கும், தர்மத்துக்கும் எதிரானதும், அவற்றை அவமதிப்பதுமாகும். புதிய ஆட்சியாளரின் தார்மீகப் பண்பு அவர்களின் வரும் நாட்களிலான செயற்பாடுகளின் அடையாளப்படுத்தப் படவேண்டும்.

## பாரதீ...




ஆணம் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கி இவ் வையம் தழைக்குமாம்
பூணு நல்லறத் தோடிங்குப் பெண்ணுருப்
போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்
நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகள் கேட்டீரோ!

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்
அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில்
அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்
உதய கன்னி உரைப்பது கேட்டீரோ!

சாத்தி ரங்கள் பலபல கற்பாராம்
சவுரி யங்கள் பலபல செய்வராம்
மூத்த பொய்ம்மைகள் யாவும் அழிப்பராம்
மூடக் கட்டுக்கள் யாவுந் தகர்ப்பராம்
காத்து மானிடர் செய்கை யனைத்தையும்
கடவு ளர்க்கினி தாகச் சமைப்பராம்
ஏத்தி ஆண்மக்கள் போற்றிட வாழ்வராம்
இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டீரோ!

## சுந்தரச் சிரிப்பு




ஐம்பது கோடி மக்கள்
நாளாந்தம் பட்டினியுடன்
படுக்கைக்குச் செல்கின்றார்
-செய்தி



நன்றி : சிரித்திரன் சித்திரக்கொத்து

# பிரிட்டன் கொன்சாவேட்டிவ் கட்சியின் நிலைப்பாடும் இலங்கை அரசின் ஆட்சேப நடவடிக்கையும்






இலங்கையில் காணப்படுகின்ற இனப் பிரச்சினைக்கு தீர்வாக, இலங்கைக்குள் இரண்டு நாடுகள் உருவாக்கப்பட வேண்டும் என பிரிட்டன் கன்சாவேட்டிவ் கட்சியின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதானது ஈழத் தமிழர்கள் விடயத்தில் பிரிட்டன் தெளிவான பார்வையைக் கொண்டிருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய சிறுபான்மை சமூகங்களின் மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக நாம் ஐக்கிய நாடுகள் அமைப்புடன் இணைந்து செயற்படுவோம் என இந்த தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பில் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை எட்டுவதற்கு இதுவரை வந்த ஆட்சியாளர்கள் எந்தவிதமான முன்னேற்றகரமான செயற்பாடுகளும் மேற்கொள்ளாத நிலையில் இந்த அறிக்கை பிரிட்டன் நாட்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் வந்திருப்பது இலங்கைக்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

பிரிட்டனில் ஆளும் கன்சவேட்டிவ் கட்சி மற்றும் பிரதான எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி ஆகியன வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கைகளில் இலங்கை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள விடயங்கள் இலங்கையை சர்ச்சைக்குள் தள்ளியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இனங்களுக்கு இடையில் காணப்படும் பிரச்சினைக்கு "இரண்டு நாடுகளுக்கிடையிலான தீர்வு" (two-state solution) என பிரிட்டனை ஆளும் கன்சவேட்டிவ் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியுள்ளதாக உதய கம்மன்பில ஊடக சந்திப்பொன்றில் சுட்டிக்காட்டியுள்ளார். பிரிட்டனின் நாடாளுமன்றத் தேர்தல் 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ஆம் தேதி நடைபெற்றது. இந்த தேர்தலுக்காக கன்சவேட்டிவ் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை நவம்பர் மாதம் 25ஆம் தேதி வெளியிட்டது. இந்த தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தின் 53ஆவது பக்கத்தில் இலங்கையில் காணப்படுகின்ற பிரச்சினைக்கு தீர்வாக, இலங்கைக்குள் இரண்டு நாடுகள் உருவாக்கப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது" என அவர் தெரிவித்துள்ளார். இந்த விடயத்தை தெரிவித்த உதய கம்மன்பில, தேர்தல் விஞ்ஞாபனத்தின் 53ஆவது பக்கத்திலுள்ள விடயங்களை சிங்கள மொழியில் விளக்கி தெளிவூட்டினார். உலகம் முழுவதும் நல்லிணக்கம், உறுதிப்பாடு மற்றும் நியாயம் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கு சர்வதேசத்தின் ஆரம்ப அரசாங்கம் என்ற ரீதியில் நாம் ஒத்துழைப்புக்களை வழங்கவுள்ளோம். சைப்ரஸ், இலங்கை மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் தற்போது அல்லது இதற்கு முன்னர் காணப்பட்ட பிரச்சனைகளுக்கு இரண்டு நாடுகளின் ஊடாக தீர்வு என நாம் ஒத்துழைப்புக்களை வழங்கவுள்ளோம்." என தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்ட விடயத்தை உதய கம்மன்பில வாசித்து தெளிவூட்டினார்.

## உலக அரசியல்

கன்சவேட்டிவ் கட்சியின் இந்த அறிவிப்பை தொடர்ந்து, இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஆலோசனையுடன் கன்சவேட்டிவ் கட்சியின் தலைவர் ஜேம்ஸ் கிலேவர்லியிற்கு பிரிட்டனின் இலங்கை தூதரகத்தின் ஊடாக தமது எதிர்ப்பை வெளியிட்டு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு குறிப்பிடுகின்றது. இலங்கைக்கு இரண்டு நாடுகளின் தேவை கிடையாது என்பதை வெளிப்படுத்தும் வகையிலேயே தமது கருத்துக்கள் அடங்கிய கடிதத்தை பிரிட்டனிலுள்ள இலங்கை தூதரகம் வழங்கியுள்ளது. பிரிட்டனை ஆட்சி செய்த எந்தவொரு கட்சியும் இந்த நிலைப்பாட்டில் இதுவரை இருக்கவில்லை எனவும், முறையாக ஆட்சிபீடம் ஏறிய அரசாங்கங்கள் ஒருமித்த இலங்கைக்குள் சமாதானம், நல்லிணக்கத்திற்காக தொடர்ந்தும் ஒத்துழைப்புக்களை வழங்கி வந்ததாகவும் இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பிரிட்டனுற்கான இலங்கை தூதுவராலயம், கன்சவேட்டிவ் கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஒருவரை தொடர்பு கொள்ள முயற்சித்துள்ள நிலையில், அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் போல் ஸ்கலி கடந்த 27ஆம் தேதி மின்னஞ்சல் மூலம் பதில் வழங்கியுள்ளார்.

இலங்கை தொடர்பில் கன்சாவேட்டிவ் கட்சி கொண்டுள்ள நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. இரண்டு நாடுகளுக்கு இடையிலான தீர்வு என்ற விடயமானது, மத்திய கிழக்கு நாடுகளான இஸ்ரேல் - பாலஸ்தீனம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.

இலங்கை மற்றும் சைப்ரஸ் ஆகிய நாடுகளில் பிரிந்துள்ள சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கம், சமாதானம் ஆகியவற்றை கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என போல் ஸ்கலி கூறியுள்ளார்.

பிரிட்டனின் சுற்றாடல், உணவு மற்றும் கிராமிய விவகாரத்திற்கு பொறுப்பான செயலாளர் தெரேசா வில்லியர்ஸினால், கன்சவேட்டிவ் கட்சியின் நிலைப்பாட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு குறிப்பிடுகின்றது. தெரேசா வில்லியர்ஸ் சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட கருத்தை இலங்கை வெளிவிவகார அமைச்சு மேற்கோள் காட்டியுள்ளது.

**துன்னாலைச் செல்வம்**

இரண்டு நாடுகள் என்ற தீர்வுத்திட்டமானது, மத்திய கிழக்கு நாடுகளுக்கே உரித்தானது. இலங்கை மற்றும் சைப்ரஸ் ஆகிய நாடுகளுக்கு அது பொருத்தமற்றது. நான் இந்த விடயம் தொடர்பில் வெளிவிவகார செயலாளரிடம் கேட்டறிந்துக் கொண்டேன். அவர் உறுதியான நிலைப்பாட்டிலேயே உள்ளார் என பிரிட்டனின் சுற்றாடல், உணவு மற்றும் கிராமிய விவகாரத்திற்கு பொறுப்பான செயலாளர் தெரேசா வில்லியர்ஸ் தெரிவித்துள்ளார். இந்த நிலையில், பிரிட்டன் கன்சவேட்டிவ் கட்சியின் பிரதித் தலைவர் போல் ஸ்கலி டிசம்பர் 3ஆம் தேதி ட்விட்டர் ஊடாக இந்த விடயத்தை தெளிவூட்டியுள்ளார். கன்சவேட் டிவ் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் இலங்கை அரசு அமைப்பது தொடர்பில் எந்தவித கருத்தும் கூறப்படவில்லை. இரண்டு நாடுகளின் தீர்வு என்பது மத்திய கிழக்கு நாடுகளுக்கு மாத்திரமே என அவர் கூறியுள்ளார்.

எனினும், கன்சவேட்டிவ் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் 53ஆவது பக்கத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கையுடன் தொடர்புடைய சமூகங்களுக்கு இடையில் தற்போது விவாதங்கள் எழுந்துள்ளதாக அறிய முடிகின்றது. இதேவேளை, லேபர் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கை தொடர்பில் சில விடயங்கள் கூறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையில் இரு இராச்சியங்கள் என்ற கன்சாவேட்டிவ் கட்சியின் நிலைப்பாடானது ஒரு அரசியல் நாடகத்தை வெளிக்காட்டுகிறது என இராஜாங்க அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.





# அமெரிக்காவின் நடவடிக்கைகள் சீனாவின் வல்லரசு கனவை தகர்க்கிறதா?

லக்‌ஷனா பாலகுமாரன்.

அமெரிக்கா, சீனா இடையே கடந்த சில ஆண்டுகளாகவே வர்த்தகப் போர் நிலவி வருகிறது. அமெரிக்கப் பொருட்களுக்கு சீனாவும் சீனப் பொருட்களுக்கு அமெரிக்காவும் மாறி மாறி வரிவிதித்து வருகின்றன. இரு நாடுகளுக்கும் இடையே கடந்த 17 மாதங்களாக நீண்டு கொண்டு செல்லும் இந்தப் வர்த்தகப் போரால் சர்வதேச அளவில் பொருளாதார மந்த நிலை உருவாகிவிடுமோ? என்ற அச்சம் எழுந்துள்ளது. ட்ரம்ப் அமெரிக்காவின் எதிரி நாடுகளுக்கு எதிராக முன்னெடுக்கும் உத்திகள் பல்வேறு தரப்பினரால் மோசமாக விமர்சிக்கப்பட்டாலும், அடிப்படையில் அவர் ஒரு வர்த்தகர் என்பதால் நாடுகள் மீது மேற்கொண்டு வரும் பொருளாதாரத் தடைகள் மற்றும் வரிவிதிப்பு உத்திகள் எதிரி நாடுகளுக்குக் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றது என்பதை மறுக்க முடியாது. இந்தவகையில் சீனாவின் பொருளாதார வளர்ச்சிக்கு எதிரான ட்ரம்பின் சில உத்திகள் மற்றும் சீனாவின் நிலைப்பாடு தொடர்பானதாக இக்கட்டுரை அமையப் பெறுகிறது.

முதலாவது உத்தியாக இறக்குமதிப் பொருட்கள் மீதான வரிவிதிப்பினைக் குறிப்பிட முடியும். சீனாவின் முறையற்ற அறிவுசார் சொத்துத் திருட்டின் விளைவிலிருந்து அமெரிக்காவின் பொருளாதாரத்தைக் காக்கும் பொருட்டுச் சீனாவின் பொருட்களுக்கு அமெரிக்கா வரிவிதிப்பு மேற்கொண்டது. இதிலிருந்து ஆரம்பமான வர்த்தகப் போர் இரு நாடுகளுக்கும் இடையே மாறி மாறி இடம்பெற்று வருகின்றது. இதனால் சீனா அமெரிக்கா ஆகிய இரு நாடுகள் பாதிக்கப்பட்டாலும் சீனா கடுமையான பொருளாதாரச் சரிவிற்கு முகம் கொடுத்து வருகிறது. கடந்த ஆண்டு இதே கால கட்டத்துடன் ஒப்பிடும் போது, சுமார் 1.1% அளவுக்கு சீனாவின் ஏற்றுமதி குறைந்துள்ளது. குறிப்பாக கடந்த நான்கு மாதங்களாக சீனாவின் ஏற்றுமதித் தொடர் சரிவைக் கண்டு வருகிறது. கடந்த பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் அமெரிக்காவுக்கான சீன ஏற்றுமதி 23மூ அளவுக்கு குறைந்துள்ளது.

இரண்டாவது உத்தி ஹொங் ஹொங் விவகாரம். சீனாவின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியமான வகிபாகம் ஹொங் ஹொங்கிற்கு உண்டு. எனவே ஹொங் ஹொங்கில் சந்தர்ப்பம் பார்த்து அமைதியின்மையை ஏற்படுத்திச் சீனாவின் பொருளாதார வளர்ச்சிக்கு நெருக்கடி கொடுக்க அமெரிக்கா எத்தனிக்கின்றது. ஹொங் ஹொங்கில் அரசியல் சீர்திருத்தத்தை வலியுறுத்தியும், ஜனநாயக உரிமை கோரியும் ஆறு மாதங்களுக்கு மேலாகத் தொடர்ந்து போராட்டம் நடைபெற்று வருகிறது. இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலான மசோதா அமெரிக்க செனட் சபையில் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இதற்கு, சீனா கடும் கண்டனம் தெரிவித்தது. ஆனால் சீனாவின் எதிர்ப்புக்களையும் மீறி அந்த மசோதாவில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மூன்றாவதாக சீனா கடன் பெறும் நிதி நிறுவனங்களைக் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையிலான ட்ரம்பின் அறிவித்தல்களைக் குறிப்பிட முடியும். அதாவது கடந்த வெள்ளிக்கிழமை ட்ரம்ப் டிவிட்டரில் பின்வருமாறு கூறியிருந்தார். "உலக வங்கி சீனாவிற்கு ஏன் கடன் கொடுக்க வேண்டும்? அவர்களிடம் தான் ஏராளமாக பணம் இருக்கிறதே. இல்லை என்றாலும் அவர்களே உருவாக்கிக் கொள்கிறார்கள். நீங்கள் ஏன் கொடுக்க வேண்டும்? கடன் கொடுப்பதை நிறுத்துங்கள்" என்று தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில் அமெரிக்க வரிப் பணத்தைப் பயன்படுத்தி, மனித உரிமை மீறல்கள் மற்றும் பலவீனமான நாடுகளில் இராணுவ ரீதியாகவோ அல்லது பொருளாதார ரீதியாகவோ ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கும் பணக்கார நாடுகளுக்கு உலக வங்கி கடன் வழங்கக்கூடாது என்றும் வலியுறுத்தியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து உலக வங்கி சீனாவுக்கான கடன் உதவியை மேலும் குறைக்க உள்ளதாக அறிவித்துள்ளது. வளரும் நாடுகள் மற்றும் ஏழை நாடுகள் ஆகியவற்றுக்கு உலக வங்கியால் பல திட்டங்களுக்கு கடன் அளிக்கப்பட்டு வருகிறது. அதன்படி சீனாவுக்கு வளரும் நாடு என்ற முறையில் உலக வங்கி கடன் அளித்து வருகிறது. இதனிடையே ஐந்தாண்டுக்கான குறைந்த வட்டியில் கடன் திட்டத்துடன் சீனாவிற்க நிதி வழங்க உலக வங்கி சமீபத்தில் ஒப்புக் கொண்டது. இதனைத தொடர்ந்து உலக வங்கியை ட்ரம்ப் விமர்சித்துள்ளார். இந்நிலையில் சீனாவுக்கான கடன் மேலும் குறைக்கப்படும் என அமெரிக்க பொருளாதார விவகாரத்துறை முன்னாள் அதிகாரி டேவிட் மால்பாஸ் தலைமையில் செயல்படும் உலக வங்கி தெரிவித்துள்ளது. இவர் வெளியிட்ட சுருக்கமான அறிவிப்பில் "நாடுகள் செல்வத்தைப் பெருக்கிக் கொண்டே இருப்பதால் கடன் வழங்குவதைத் தவிர்க்கப்போகிறோம்." என்றார். உலக வங்கி சீனாவுக்கு அளித்து வந்த கடன் குறிப்பிடத்தக்க அளவு குறைந்துவிட்டது. அமெரிக்கா உள்ளிட்ட மற்ற உறுப்பு நாடுகளுடன் கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் தொடர்ந்து கடன் வழங்குவதைக் குறைக்கவும் இருக்கிறோம் என டேவிட் தெரிவித்தார்.

நான்காவதாக உய்குர் முஸ்லீம் விவகாரத்தினைக் குறிப்பிட முடியும். சீனா உய்குர் முஸ்லீம் சிறுபான்மையினரைத் தடுப்பு முகாம்களில் அடைத்து வைத்துக் கொடுமைப்படுத்துவதாக அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் குற்றம் சாட்டின. இந்நிலையில் உய்குர் முஸ்லீம் சிறுபான்மையினரைச் சீனா நடத்தும் விதத்திற்குக் கடுமையான பதிலடி கோரும் வகையில் அமெரிக்காவில் சட்டம் கொண்டு வரப்படுகிறது. அமெரிக்க அதிபர் ட்ரம்பிற்கு அனுப்பப்படுவதற்கு முன்னர் செனட் சபை ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட உய்குர் சட்டம் 2019க்கு அமெரிக்க பிரதிநிதிகள் சபை ஒப்புதல் அளித்திருப்பது சீனாவுக்குக் கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.


“சீனாவின் நலன்களைப் புண்படுத்த அமெரிக்கா நடவடிக்கை எடுத்தால் நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுப்போம்" என்று சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஹீவா சுனிங் கூறியுள்ளார். “எந்தவொரு தவறான சொல் மற்றும் செயல்களுக்கு உரிய விளைவுகளை சந்தித்தாக வேண்டும் என்று நான் நினைக்கிறேன்" என்றும் ஹீவா சுனிங் கூறியுள்ளார். அதனை நடைமுறைப்படுத்தவும் முடியும் என்பதற்கான முன்னோட்டச் செயல்பாடுகளைச் சீனா மேற்கொள்ளவும் ஆரம்பித்துள்ளது.

அமெரிக்காவின் நடவடிக்கைக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக முதன்முறையாக அமெரிக்கா மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பதாகச் சீனா அறிவித்துள்ளது. இதன் மூலம் அமெரிக்கப் போர்க் கப்பல்கள் சீனாவின் எல்லைக்குள் வர முடியாது எனவும் அமெரிக்காவின் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சீனாவில் செயல்படவும், தடை விதித்துள்ளது.
மேலும் அமெரிக்கா நிறுவனங்களுக்கு எதிராகச் சீனா புதிதாக 3 □ 5 □ 2 திட்டத்தைத் நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளது. சீனாவின் அனைத்து அரச அலுவலகங்கள் மற்றும் பொதுத் துறை அமைப்பு, அலுவலகங்களில் பயன்படுத்தி வரும் வெளிநாட்டு கணனி உபகரணங்கள் மற்றும் மென் பொருளைப் பயன்படுத்துவதை அடுத்த 3 வருடத்திற்குள் நிறுத்த வேண்டும். வெளிநாட்டு கணனி உபகரணங்கள் மற்றும் மென்பொருளை 30 சதவீதச் சீனத் தயாரிப்புக்களாக 2020க்குள் மாற்ற வேண்டும். இதைத் தொடர்ந்து 2021ஆம் ஆண்டுக்குள் 50 சதவீதமும், 2022 ஆம் ஆண்டிற்குள் 20 சதவீதம் என மூன்று வருடத்திற்குள் மொத்த அமெரிக்க கருவிகள் மற்றும் சேவைகளையும் மாற்ற வேண்டும் எனச் சீன அரசு உத்தரவிட்டுள்ளது. இத் திட்டத்தைத் தான் 3 - 5 - 2 திட்டம் என அழைக்கிறது. ஏறத்தாழ முப்பது மில்லியன் அமெரிக்க கருவிகள் இத்திட்டத்திற்குள் உள்ளது.

இந்த மாற்றம் அரச அலுவலகங்களில் மட்டுமே அறிவிக்கப்பட்டு உள்ள நிலையில் விரைவில் இது மக்கள் மத்தியிலான பயன்பாட்டிற்கும் கொண்டு வரப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. சீன அரசின் இந்த அறிவிப்பால் அமெரிக்க நிறுவனங்களான ஹெச்பி, டெல், மைக்ரோ சொப்ட் ஆகிய நிறுவனங்களுக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

அமெரிக்க அரசு சீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டாம் என அறிவித்ததைப் போல் சீனாவும் அமெரிக்காவிற்கு எதிராக அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தகப் போர் இதனால் தொழில்நுட்ப போராகப் பரிமாணம் அடைந்துள்ளது. எனவே அமெரிக்காவின் உத்திகள் சீனாவை நெருக்கடிக்குள்ளாகினாலும் முற்று முழுதான வீழ்ச்சியை சாத்தியமாக்காது. காரணம் இன்றைய பொருளாதாரம் வளர்ச்சியடைந்த மற்றும் வளர்ச்சியடைந்து வரும் ஒவ்வொரு நாடுகளின் கைகளிலும் தங்கியுள்ளது.



- சிலம்பு -

# தமிழ் மக்களுக்கான அரசியல் பாதை..!?

சனாதிபதித் தேர்தல் முடிவடைந் ததை அடுத்து நாடாளுமன்றத் தேர்தலை நோக்கி நாடு நகர்ந்து கொண்டிருக்கிறது. மக்களை ஈர்க்கும் வகையில் ஆட்சியாளர்கள் பல அறிவிப்புகளை விடுத்துக் கொண்டிருக்கி றார்கள். சனாதிபதி கோத்தபாயாவின் அறிவிப்புகள் மக்களை ஈர்ப்பனவாகவே உள்ளது. ஆடம்பரங்களைக் குறைத்தல் பொருள்களின் விலைக் குறைப்புப் போன்ற அறிவிப்புகள் மக்களின் மனங்களைக் கவர்ந்துள்ளன என்பது மறுக்க முடியாத அறிவிப்புகளாகும்.

எப்படியும் நாடாளுமன்றத் தேர்தலில் பெரிய வெற்றியை அடைந்து விட வேண்டும் என்ற பொதுசன பெரமுனவின் நகர்வு சரியான வழியில் செல்வது போல் தான் தெரிகிறது. எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி இன்னமும் தனது குழப்ப நிலையில் இருந்து மீளவில்லை என்பதும் ஆளும் கட்சிக்கு ஒரு சாதகமான நிலைமையையே கொடுத்துள்ளது.

இதே நேரம் தமிழர் தரப்பு அரசியலும் ஒரு தெளிவான பாதையில் பயணிக்கவில்லை என்றே சொல்லலாம். புதிய ஆட்சியாளர்களின் தமிழினம் சார்ந்த அறிவிப்புகள் உரிமைகள் பற்றிய அறிவிப்புகள் தெளிவாகத் தெரிந்து விட்டது. இதன் பின்னரும் தமிழ் மக்களுக்கான தீர்வு எப்படி அமைய வேண்டும் ,எவ்வாறு அதற்கான நகர்வை மேற்கொள்ள வேண்டும் என்ற ஆழ்ந்த சிந்தனை இல்லாமல் தான் அரசியல்கள் தலைமை நடந்து வருகிறது

## கையறு நிலையில் சம்பந்தன்.

2015 இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு விட்டது புதிய அரசியல் யாப்பு வருகிறது தமிழ் மக்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும் என்று கூறிக் கூறிக் காலத்தைக் கடத்தி வந்தது கூட்டமைப்பு.ஆனால் எதோ திட்ட வரைவு என்று தயாரித்து நாடாளுமன்றத்திலும் வைத்தனர்.அதில் அதி உச்ச அதிகாரப் பகிர்வு தமிழ் மக்களுக்கு உண்டென்றும் கூறி வந்தனர். ஆனால் கைகூடாமல் போய் விட்டது. உண்மையில் அதில் அதிகாரப் பகிர்வு இருந்ததா என்றால் அதற்கான விடை புதிராகவே இருந்தது.ஒருமித்த நாட்டுக்குள்

அதிகாரப்பகிர்வு அது ஒற்றை ஆட்சி அல்ல எக்கியராஜ்ஜே என்று கூறினார் சுமந்திரன். அப்படியான அதிகாரங்கள் எத்தகைய அமைப்பினூடாகத் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட இருந்தது. என்பது தெளிவாகக் கூறப்படவில்லை.. தமிழ் மக்களின் தாயகம் வடக்குக் கிழக்கு இணைப்பு ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் தாயகத்திற்கு என்று தனியான ஓர் ஆட்சி அதிகார அமைப்பு இல்லாத நிலையில் எவ்வாறு தமிழ் மக்களுக்கு அதிகாரம் பகிர்ந்து அளிக்கப்படும். அப்படியானால் அது மாகாணசபையாகத் தானே இருக்க முடியும்.இதை அவர்கள் வெளியே கூறாமல் பிளவுபடாத பிரிக்கப்பட முடியாத ஒருமித்த நாட்டிற்குள் அதி உச்ச அதிகாரப்பகிர்வு என்று கூறிக் கூறியே காலத்தைக் கழித்தனர்.தற்பொழுது சம்பந்தன் இந்தியாவைப் பகைத்தால் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படும் என்று சனாதிபதியை எச்சரிக்கிறார்.

தன்னால் எதுவும் செய்ய முடியாத கையறு நிலையில் இருப்பதைக் கூறாமல் கூறி இந்தியாவைப் பகைக்க வேண்டாம் என்று கூறுகிறார். இவரின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதே. இனத்திற்கு வழி காட்ட வேண்டியவர் தமிழ் இனத்தின் தலைவர் என்று கூறிக்கொள்பவர் மாகாணசபையே போதும் என்ற நிலைக்கு வந்துள்ளார். ஏனெனில் இந்தியா பதின்மூன்றை நடைமுறைப்படுத்துமாறு கோரியுள்ளது. எனவே தான் அதை நடைமுறைப்படுத்தா விட்டால் இந்தியாவைப் பகைத்ததாகக் கருதப்படும் என்று சம்பந்தன் கூறியுள்ளார். தங்களால் எந்தத் தீர்வையும் பெற்றுத் தர முடியாத கையறு நிலையில் தாங்கள்

## சுமந்திரனின் பரிதாப நிலைமை.

இருப்பதைச் சம்பந்தன் இவ்வாறு கூறியதன் மூலம் அம்பலமாகி உள்ளார்.
புதிய அரசியல் யாப்பு வருகிறது அது வராவிட்டால் பதவியைத் துறந்து விடுவேன் என்று கூறிய சுமந்திரனிடம் செய்தியாளர்கள் அதை நினைவு படுத்தியபொழுது அரசியல் யாப்பின் வரைவு இன்னமும் நாடாளுமன்றத்தில் உயிருடன் இருக்கிறது என்று கூறியுள்ளார். அதாவது முன்னைய ஆட்சியில் தயாரித்த எக்கியராஜ்ஜே யாப்பின் வரைவு சேடம் இழுத்துக் கொண்டு இன்னமும் உயிருடன் இருக்கிறது. கோத்தபாயாவின் ஆட்சி தொடர்ந்து நீடிக்குமா. முன்பும் 2010. இல் வெற்றிபெற்றவர்கள் ஐந்து ஆண்டுகளில் தோற்கவில்லையா.. 2015 இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது போல் அடுத்த தேர்தலில் மாற்றம் ஏற்படலாம் எதுவும் நிரந்தரமில்லை என்று கூறித் தப்பிக்க முனைந்துள்ளார். பரிதாபத்துக்குரிய சுமந்திரன் அவர்கள்.

சம்பந்தன் கூறியது போல் சுமந்திரனும் பதின்மூன்றை நடைமுறைப்படுத்துவதாக முன்னர் எழுத்தில் இந்தியாவிற்கு உறுதி கொடுத்தவர்கள் அதை நிறைவேற்ற வேண்டும் என்றும் கூறியுள்ளார். இந்தியா மாகாணசபைகளுக்கு அதிகாரம் முழுமையாக வழங்குமாறு கேட்டுள்ளது எனவே அதை ஆட்சியாளர் நிறைவேற்ற வேண்டும் என்று தான் சுமந்திரனும் கூறி வருகிறார்

> **இதே நேரம் தமிழர் தரப்பு அரசியலும் ஒரு தெளிவான பாதையில் பயணிக்கவில்லை என்றே சொல்லலாம். புதிய ஆட்சியாளர்களின் தமிழினம் சார்ந்த அறிவிப்புகள் உரிமைகள் பற்றிய அறிவிப்புகள் தெளிவாகத் தெரிந்து விட்டது. இதன் பின்னரும் தமிழ் மக்களுக்கான தீர்வு எப்படி அமைய வேண்டும் ,எவ்வாறு அதற்கான நகர்வை மேற்கொள்ள வேண்டும் என்ற ஆழ்ந்த சிந்தனை இல்லாமல் தான் அரசியல்கள் தலைமை நடந்து வருகிறது**

அதிகாரப் பகிர்வுக்குரிய அமைப்பு எது?
பிளவுபடாத பிரிக்கப்படாத ஒருமிந்த இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வு என்றால் அந்த அதிகாரம் எவை? அவை யாருக்கு வழங்கப்படும் என்பது தெளிவாக இல்லையே. தமிழ் மக்களுக்கான அதிகாரப்பகிர்வு என்றால் மாநிலத்துக்கான ஆட்சி அதிகார சபை ஏதாவது உருவாக்கப்படுமா என்றால் அப்படி எதுவும் கிடையாது. தாயகமும் இல்லை வடக்கும் கிழக்கும் இணைக்கப்படப் போவதில்லை..

இந்நிலையில் தமிழ் மக்களுக்கு எவ்வாறு அதி உச்ச அதிகாரம் வழங்கப்படும் என்று யாரும் கூறவில்லையே. அப்படியானால் மாகாணசபைகளுக்கே அதிகாரம் வழங்கப்படும் என்றாவது கூறியிருக்கலாமே. அதைக் கூறாது தமிழ் மக்களுக்கு அதி உச்ச அதிகாரப் பகிர்வு என்று கூறுவதன் உள் நோக்கம் தான் என்ன. மாகாணசபைகளுக்கு அதிகாரம் பகிர்வது தான் ஐநாவின் அதிகாரப்பகிர்வு என்று சிவிகே சிவஞானம் கூறியுள்ளதை நோக்கும் பொழுது இவர்கள் மாகா ணசபையையே மனதில் வைத்திருந்தார்கள் என்பது தெளிவாகிறது. அதனாற்றான் இந்தியாவிடம் பதின்மூன்றை நடைமுறைப்படுத்துமாறு கேட்கின்றனரோ தெரியவில்லை.


மாகாணசபைகளுக்கு காணி காவற்றுறை அதிகாரங்கள் வழங்கப்பட மாட்டாது என்று இந்தியாவில் வைத்தே கோத்தபாய அறிவித்துவிட்டுத் தான் நாடு திரும்பியுள்ளார். இந்நிலையில் தான் சம்பந்தன் இந்தியாவை எதிர்த்தால் விரும்பத்தகாத விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று கடும் தொனியில் சனாதிப தியை எச்சரித்துள்ளார். இந்தியா வே கோத்தபாய கூறியவற்றைப் பெரிதாக எடுக்காதபொழுது சம்பந்தன் செய்தித் தாள்களில் எச்சரிக்கை விடுவது மக்களை ஏமாற்றும் தொடர் அரசியல் நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியே ஆகும் அமெரிக்காவுக்கு இடித்துரைத்தார். சனாதிபதியை எச்சரித்தார் என்று ஏடுகளில் செய்தி வருவதில் மகிழ்ச்சி அடைகிறார் சம்பந்தன். ஆனால் மிகவும் இருண்ட எதிர்காலத்தை நோக்கிய தமிழினத்தின் நிலையைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாமல் அரசியல் பதவிகளைப் பெறுவதிலேயே அதிக அக்கறை கொண்டு உள்ளனர் கூட்டமைப்பினர்.


இதற்குச் சான்றாகச் சுமந்திரன் கூறியதை இங்கு நினைவுபடுத்துதல் சிறப்பாகும். கூட்டமைப்பினர் அமைச் சர்களாக வர வேண்டும் என்பது தானாம் தமிழ் மக்களின் விருப்பம் ஆனால் தாங்கள் தான் தீர்வு வரும் வரை அமைச்சர்களாவ தில்லை என்ற முடிவுக்கு அமைவாக அமைச்சுப் பொறுப்புகளை ஏற்காமல் இருப் பதாகக் கூறியுள்ளார் சுமந்திரன்..

பொதுத் தேர்தல் வரை இவர்களுக்கு அமைச்சுப் பதவிகளைச் சனாதிபதி எக்காரணம் கொண்டும் வழங்கப்போவதில்லை அப்படி அவற்றை வழங்கினால் சிங்கள மக்களின் நம்பிக்கையை இழந்து விடுவார்கள். அவர்கள் எப்படியாவது மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற வேண்டும் என்று குறி வைத்துத் தான் தேர்தலைச் சந்திக்க உள்ளார்கள். இந்நேரம் தேவையில்லாத ஒன்றை கையில் எடுத்து சிங்கள மக்களின் நம்பிக்கையை இழக்க மாட்டார்கள். ஆனபடியால் தான் இருபது பேரையாவது கூட்டமைப்பில் நாடாளுமன்றம் அனுப்புங்கோ சாதிச்சுக் காட்டுகிறோம் என்று கூட்டமைப்பினர் கோருகிறார்கள் .

அரசுக்கு மூன்றில் இரண்டு பங்கு குறைவாக இருந்தால் தாங்கள் அதை அரசுக்கு கொடுத்து தீர்வு என்று எதையாவது பெற்று அதைக் கூறி தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு வருகிறது எனவே அமைச்சர்களாகப் பதவி பெற்று அபிவிருத்தி. செய்வதுடன் வேலையின்மை போன்றவற்றையும் இல்லாமல் செய்யலாம் என்ற கனவோடு மக்களை இருபது தாருங்கள் சாதிச்சுக் காட்டுகிறோம் என்று கூறி வருகிறார்கள்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு பெறுவதற்கான ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடாமல் அதை வைத்தே அரசியல் செய்து பதவிகளைப் பெறுவதிலேயே அரசியல் வாதிகள் பலரும் முனைந்துள்ளனர். இதிலிருந்து மீளத் தமிழனம் என்ன செய்யவேண்டும் என்று ஆழமாகச் சிந்திக்க வேண்டிய காலத்தில் மக்கள் உள்ளனர்.







# கொள்கை, சமத்துவம், அமைப்புப் பொறிமுறை கொண்ட ஐக்கிய முன்னணியே இன்றைய தேவை

**- சி. அ. யோதிலிங்கம் -**

முன்னாள் முதலமைச்சர் சி.விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, அனந்தியின் ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகம், ஜங்கரநேசனின் தேசியப்பசுமை இயக்கம் என்பன இணைந்து மாற்று அணியை உருவாக்கவுள்ளன. புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றும் தயாரிக்கப்பட்டு பரிசீலிக்கப்படவுள்ளன. பொது அமைப்புகளிற்கு பிரதிநிதித்துவம் என்பது கொள்கையளவில் ஏற்கப்பட்டுள்ளது.

தேசிய இன ஒடுக்குமுறை என்பது புறத்தேயிருந்து வரும் ஒடுக்குமுறை என்பதால் அனைத்து தரப்பினரும் இணைந்து முகம் கொடுப்பதற்கு பலமான ஐக்கிய முன்னணி அவசியம். இவ் ஐக்கிய முன்னணி கொள்கை, சமத்துவம், அமைப்புப் பொறிமுறை என்பவற்றை வலுவாகக் கொண்டிருக்கும் போதே வெற்றிகளைப் பெறுவது சாத்தியமாக இருக்கும்.

தமிழ் மக்களின் வரலாற்றினைப் பொறுத்தவரை ஐக்கிய முன்னணித் தந்திரோபாயம் தோல்விகளையே தழுவியுள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழத்தேசிய விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் பேரவை என அனைத்தும் தோல்விகளையே தழுவியுள்ளன. கொள்கை உறுதிப்பாடின்மை, சமத்துவமின்மை, வலுவான அமைப்புப் பொறிமுறையின்மை என்பனவே தோல்விக்கு காரணங்களாக அமைந்திருந்தன.

தமிழ் அரசியல் வரலாற்றில் உருவாக்கப்பட்ட ஐக்கிய முன்னணி தோல்விகளைத் தழுவினாலும் அதன் வரலாற்றுப் பங்களிப்பை மறுக்க முடியாது. தமிழர் விடுதலைக் கூட்டணி 1972 ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதனை உருவாக்குவதற்காக தந்தை செல்வா தனது அரசியல் எதிரியான ஜீ.ஜீ. பொன்னம்பலத்திடம் வீடு தேடிச் சென்று தமிழ் மக்களுக்கு பெரும் ஆபத்து ஏற்பட்ட நிலையில் இணைந்து செயற்பட வருமாறு அழைப்பு விடுத்தார். ஜீ.ஜீ. பொன்னம்பலமும் அந்த அழைப்பை நிராகரிக்கவில்லை. உடனடியாகவே ஏற்றுக் கொண்டார். 1972 ம் ஆண்டு உருவாக்கப்பட்ட முதலாவது குடியரசு அரசியல் யாப்பு அரச அதிகாரக் கட்டமைப்பிலிருந்து தமிழ் மக்களை முழுமையாகத் தூக்கி வீசிய போது ஐக்கியப்பட்டு செயற்படுவதைத் தவிர வேறு தெரிவு எவருக்கும் இருக்கவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணியே 1976 ம் ஆண்டு புகழ் பெற்ற வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு காரணமாகியது. இலங்கை அதிகாரக் கட்டமைப்புக்குள் தமிழ் மக்களுக்கு இடமில்லை. தமிழீழம் தான் ஒரே தீர்வு என வட்டுக்கோட்டைப் பிரகடனம் கூறியது. 1977 ம் ஆண்டு தேர்தல் தமிழீழத்திற்கான சர்வஜன வாக்கெடுப்பாக பிரகடனப்படுத்தப்பட்டது. தேர்தலில் கல்குடா தேர்தல் தொகுதியைத் தவிர அனைத்திலும் தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றி பெற்றது. கல்குடாத் தொகுதியில் 545 வாக்குகளினால் தோல்வியடைந்தது.

தமிழீழக் கோரிக்கையின் தர்க்க ரீதியான வளர்ச்சி ஆயுதப் போராட்டமாக இருந்ததினால் தமிழர் விடுதலைக் கூட்டணி முன்னே செல்ல முடியவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் இடத்தை ஆயுத இயக்கங்கள் நிரப்பின. 1977ம் ஆண்டு இன அழிப்பு, 1983ம் ஆண்டு இன அழிப்பு என்பன ஆயுதப் போராட்டம் வளர்வதற்கு உந்து சக்திகளாக அமைந்தன. 1983 ம் ஆண்டு இந்தியா தன்னுடைய நலன்களில் நின்று ஆயுதங்களும் பயிற்சியும் வழங்கியதோடு பின்தள வசதிகளையும் செய்து கொடுத்ததினால் ஆயுதப் போராட்டம்அபரிதமாக வளர்ந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் கொள்கையும் இருந்தது. அமைப்பும் பொறிமுறையும் இருந்தது. சமத்துவம் இருக்கவில்லை. தமிழரசுக் கட்சியின் மேலாதிக்கமே இருந்தது. குமார் பொன்னம்பலத்திற்கு உரிய இடம் கொடுக்காததினால் வழக்காடி அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியை தனதாக்கிக் கொண்டார் எனினும் தமிழரசுக் கட்சி வழி வந்த அமிர்தலிங்கத்திற்கும் காங்கிரஸ் வழிவந்த சிவசிதம்பரத்திற்குமிடையே நல்ல புரிந்துணர்வு இருந்தது.

1984 ம் ஆண்டு நான்கு விடுதலை இயக்கங்கள் இணைக்கப்பட்டு ஈழத்தேசிய விடுதலை முன்னணி உருவாக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE), தமிழீழ விடுதலை இயக்கம் (TELO), ஈழமக்கள் புரட்சி விடுதலை முன்னணி (EPRLF), ஈழப்புரட்சி அமைப்பு (EROS) என்பனவே அவ் நான்குமாகும். பேச்சு வார்த்தையின் போது ஒருமித்த கருத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காகவே இது தோற்றுவிக்கப்பட்டது. புகழ் பெற்ற திம்புக் கோரிக்கைக்கு ஈழத் தேசிய விடுதலை முன்னணியே காரணமாகியது. இதுவே பின்னர் திம்புப் பிரகடனம் என அழைக்கப்பட்டது. அப்பிரகடனத்தில் நான்கு விடயங்கள் உள்ளடங்கியிருந்தன. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம், வடகிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள், தமிழ் மக்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டு, அனைத்து மக்களுக்கு பிரஜாவுரிமை என்பனவே அந்த நான்குமாகும். தமிழ்த் தேசிய அரசியலுக்கு வலுவான கோட்பாட்டு பின்னணியைக் கொடுத்தது இத் திம்புப் பிரகடனம் தான்.

திம்புப் பிரகடனம் இந்தியாவிற்கு ஏற்றதாக இருக்கவில்லை. இந்தியா இயக்கங்கள் மீது பலத்த அழுத்தத்தைக் கொடுத்தது. விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்கள் அழுத்தங்களுக்கு பணிந்து போயின. ஈழத்தேசிய விடுதலை முன்னணி சிதைந்து போனது. ஈழத் தேசிய விடுதலை முன்னணியில் அரசியல் நிலைப்பாடு, சமத்துவம் என்பன வலுவாக இருந்தன. ஆனால் அமைப்புப் பொறிமுறை வலுவாக இருந்தது எனக் கூற முடியாது.

1990 களின் இறுதிக்காலத்தில் தமிழர்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை குறிப்பாக கிழக்கில் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக கிழக்கிலங்கை ஊடகவியலாளர்களின் முயற்சியினால் தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் அதற்கான அங்கீகாரத்தை வழங்கியமையால் தமிழ்தேசியக் கூட்டமைப்பு நிரந்தரமாகியது. தமிழ்தேசியக் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சி அங்கம் வகிக்கவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியே அங்கம் வகித்தது. 1972 ம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பிக்கப்பட்ட பின் தமிழரசுக் கட்சியோ அதன் சின்னமான வீட்டுச் சின்னமோ முன்னணிக்கு வரவில்லை. 1977ம் ஆண்டு தேர்தலில் மட்டக்களப்பில் செ.இராசதுரை, காசி ஆனந்தன், என இரு தமிழர்கள் போட்டியிட்டதால் காசி ஆனந்தனுக்கு வீட்டுச் சின்னம் வழங்கப்பட்டது. மற்றும்படி கட்சியை முன்னிலைக்கு கொண்டு வருகின்ற எந்த செயற்பாடும் இடம் பெறவில்லை.

2004 ம் ஆண்டு தேர்தலின் போது உதயசூரியன் சின்னத்தை வழங்க ஆனந்தசங்கரி மறுத்ததினாலேயே தமிழரசுக்கட்சியும் வீட்டுச்சின்னமும் முன்னிலைக்கு வந்தன. தமிழரசுக்கட்சிக்கு புத்துயிர் கொடுக்கும் போக்கு முன்னிலைக்கு வந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழரசுக்கட்சியின் பெரியண்ணன் பாணி ஆதிக்கம் அனைவரும் அறிந்ததே.

2015 இல் தமிழ் மக்கள் பேரவை மூலம் ஒரு ஐக்கிய முன்னணி உருவாக்கப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஈழமக்கள் புரட்சிகர விடுதலை, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழரசுக்கட்சியின் அதிர்ப்திக் குழு என்பன அதில் அங்கம் வகித்தன. இந்த ஐக்கிய முன்னணியின் முயற்சியினால் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் இரண்டு "எழுக தமிழ்" ஆர்ப்பாட்டங்களை நடத்தியதோடு அரசியல் தீர்வு யோசனை ஒன்றும் தயாரித்து முன்வைக்கப்பட்டது.

எனினும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டதோடு ஐக்கிய முன்னணி சிதைவுற்றது. இந்த சிதைவுக்கு சம்பந்தப்பட்ட கட்சிகள் மட்டுமல்ல தமிழ் மக்கள் பேரவையும் பொறுப்புக் கூற வேண்டும். சமத்துவம் இருந்த போதும் கொள்கை நிலைப்பாட்டில் உறுதியும், வலுவான அமைப்பும் பொறிமுறையும் இல்லாததினால் ஐக்கிய முன்னணி தோல்வியடைந்தது. இத் தோல்வி தமிழ் மக்கள் பேரவையையும் மோசமாகப் பாதித்தது. அப்பாதிப்பிலிருந்து தமிழ் மக்கள் பேரவை இன்னமும் மீண்டெழவில்லை.

எனவே விக்கினேஸ்வரன் தலைமையில் புதிய கூட்டணியை உருவாக்கும் போது கடந்த கால ஐக்கிய முன்னணிகள் ஏன் தோல்வியில் முடிவடைந்தன என்பதை கவனத்தில் எடுத்து ஒரு முன்மாதிரியான ஐக்கிய முன்னணியை உருவாக்குவது அவசியமானது. குறிப்பாக ,கொள்கை நிலைப்பாடு, சமத்துவம், அமைப்புப் பொறிமுறை என்பவற்றில் அதிக கவனம் எடுப்பது அவசியமானது. விக்கினேஸ்வரன் இதற்கான அமைப்பு விதிகள் கொண்ட ஆவணத்தை தயாரித்து தருமாறு புலமையாளர் குழுவைக் கேட்டிருக்கின்றார். சம பங்காளிகள் என்ற அந்தஸ்தை கட்சிகளுக்கு கொடுப்பது தொடர்பாக கருத்து வேறுபாடு இருப்பது போலத் தெரிகின்றது. விக்கினேஸ்வரனின் கூட்டணியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இணையாதது துரதிஸ்டவசமானது. மாற்று அணியை உருவாக்குவதில் ▶

கஜேந்திரகுமாரின் பங்களிப்பு அளப்பரியது என்பதை மறுப்பதற்கில்லை. 2009ம் ஆண்டு ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதுவரை காலம் பின்பற்றிய தமிழ்த்தேசிய அரசியலை ஏதோ ஒரு வகையில் முன்கொண்டு செல்வதா? அல்லது அவற்றைக் கைவிட்டு இணக்க அரசியலுக்கு செல்வதா? என்ற இரண்டு அணுகுமுறைகள் முன்னிலைக்கு வந்தன.

இந்நிலையில் சம்பந்தன் தலைமை இரண்டாவது அணுகுமுறையைத் தேர்ந்தெடுக்க கஜேந்திரகுமார் அணி முதலாவது அணுகுமுறையைத் தேர்ந்தெடுத்தது. கஜேந்திரகுமார் தனது அரசியல் நிலைப்பாட்டிற்காக தனது அரசியல் வாழ்வையே விலையாகக் கொடுத்தார். மிகவும் சிரமப்பட்டு அந்த அரசியல் நிலைப்பாட்டை வளர்த்தெடுத்தார். இருதேசக் கோட்பாடு, சுயநிர்ணயமுடைய சமஸ்டி, இடைக்கால நிர்வாகம், பூகோள அரசியல் போன்ற கோட்பாடுகளும் அவரால் முன்வைக்கப்பட்டன. சிறு சிறு அடையாளப் போராட்டங்களையும் நெருக்கடிக் காலங்களில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி முன்னெடுத்தது.

ஆனால் மாற்று அரசியல் நிலைப்பாட்டை மக்கள் மயப்படுத்த தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியால் முடியவில்லை. அதற்கான வெகுஜனக் கவர்ச்சிப்பலம் அதனிடம் இருக்கவில்லை. இந்நிலையில் இப்போதாமையை நீக்கும் முகமாகத்தான் தமிழ் மக்கள் பேரவை முன்னிலைக்கு வந்தது. விக்னேஸ்வரன் முன்னிலைக்கு வந்தார். தமிழ் மக்கள் பேரவை மூன்று எழுக தமிழ் நிகழ்வினை வெற்றிகரமாக நடாத்தியதோடு தீர்வு யோசனைத்திட்டம் ஒன்றையும் வெளியிட்டது. தீர்வு யோசனையை உருவாக்குவதிலும் இரண்டு எழுக தமிழ் நிகழ்வுகளிலும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பங்களிப்பு அளப்பரியதாக இருந்தது.

உள்ளூராட்சிசபைத் தேர்தல் வந்தது. அத்தேர்தலின் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. முன்னர் கூறியது போல இந்த முரண்பாடு தமிழ் மக்கள் பேரவையை வெகுவாகப் பலவீனப்படுத்தியதோடு அதன் வழி மாற்று அணியையும் பலவீனப்படுத்தியது. இதன் மிகப் பெரும்பாதிப்பு தமிழ் மக்கள் பேரவையையும், விக்னேஸ்வரனையும் கொண்டு முன்னெடுக்கவேண்டியிருந்த மாற்று அணியின் இரண்டாம் கட்டப்பணி முழுமையாக நிறைவேற்றப்படாமைதான். இது விடயத்தில் மூலோபாய அணுகு முறையில் சிறப்பாக விளங்கிய தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தந்திரோபாய அணுகுமுறையில் கோட்டை விட்டது. என்றே கூற வேண்டும்.


ஐக்கியப் படுத்துவதற்காக முயன்றவர்கள் படுதோல்விகளைத் தழுவி தமது முயற்சிகளைக் கைவிட்டனர். ஒரு சிறிய நெகிழ்ச்சி கூட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிடம் இருக்கவில்லை. விரைவிலேயே கதவுகளை மூடுவதால் நடுநிலையாளர்களினாலும் எதுவும் செய்ய முடியதில்லை. மாற்று அணி பலமாக இருந்திருந்தால் கோத்தபாய ராஜபக்ச ஜனாதிபதியாக வந்த நிலையில் உறுதியாக முகம் கொடுத்திருக்க முடியும்.

மாற்று அணியில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி இணையக் கூடிய எந்த வாய்ப்புகளும் இல்லை. தனிப் பெட்டிக்கடையை வைத்திருக்கத்தான் அது விரும்புகின்றது. அதனை அதன் போக்கில் விடுவதைத்தவிர வேறு தெரிவு தற்போதைக்கு இல்லை. ஏனைய கட்சிகள் தவறு விடும் போது கடுமையான விமர்சனங்களை அதனால் முன் வைக்க முடியும். தனித்து செயற்பட்டாலும் தேர்தல் முடிந்த பின்னர் பொது வேலைத் திட்டத்தில் அவர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும். கட்சி சார்பற்ற பொது அமைப்பு பொது வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் போதே அதனைச் சாத்தியமாக்க முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளையும் கூட்டமைப்புடன் இணையுமாறு அழைப்பு விடுத்திருக்கிறார். தேர்தல் பயம்தான் இதற்கு காரணம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 33%வாக்குகளையே கூட்டமைப்பு பெற்றிருந்தது. வரப்போகின்ற பாராளுமன்றத் தேர்தலில் இது மேலும் குறையலாம். யாழ் மாவட்டத்தில் மூன்று உறுப்பினர்களுக்கு மேல் பெறக் கூடிய நிலமை இல்லை எனலாம். விக்னேஸ்வரனின் கூட்டணி வலுவாக்கப்படுமானால் இப்போக்கில் மேலும் சரிவு ஏற்படலாம். அம்முன்னணி வலுவாக எழுச்சியடையுமானால் கூட்டமைப்பிலுள்ள ரெலோ போன்ற கட்சிகளும் அதனுடன் இணையலாம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு வலுவான ஐக்கிய முன்னணியாக இல்லை என்பது அனைவரும் அறிந்ததே! அங்கு தமிழரசு கட்சிகளின் பெரியண்ணன் ஆதிக்கம் உள்ளது. ஐக்கிய முன்னணிக்கு அவசியமான "சமத்துவம்" என்ற விடயம் அங்கு மருந்துக்குக் கூட கிடையாது. எனவே தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைவதன் மூலம் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை ஆனால் விக்னேஸ்வரனின் கூட்டணி தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் ஐக்கிய முன்னணி ஒன்றை அமைப்பதைப் பற்றி யோசிக்கலாம். அந்த ஐக்கிய முன்னணி கொள்கை, சமத்துவம், அமைப்புப் பொறிமுறை என்பவற்றில் உறுதியாக இருத்தல் வேண்டும். இரண்டு தரப்புக்குமுடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படல் வேண்டும்.புதிய பெயர், புதிய சின்னமும் உருவாக்கப்படல் வேண்டும். தமிழ் தேசியக் கட்சிகள் தனித்தனியாக போட்டியிடுவது யாழ் மாவட்டத்தில் பெரிய பிரச்சனை எவற்றையும் தராது.

ஆனால் வன்னியிலும் கிழக்கு மாகாணத்திலும் நெருக்கடிகளை உருவாக்கப் பார்க்கும். எனவே ஐக்கிய முன்னணி சரிவராவிட்டால் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் ஒரே சின்னத்தில் அனைவரும் போட்டியிடுவது பற்றி யோசிப்பது நல்லது. அவ்வாறு போட்டியிடாவிட்டால் வன்னியில் ஒரு ஆசனத்தையும், திருகோணமலையில் ஒரு ஆசனத்தையும், மட்டக்களப்பில் ஒரு ஆசனத்தையும் தமிழ்தரப்பு இழக்க வேண்டி நேரிடும். திருகோணமலையில் தமிழ் தரப்பு ஐக்கியமாகப் போட்டியிட்டு முதலாவது நிலைக்கு வந்தால் இரண்டு ஆசனங்களை பெறக்கூடிய நிலை ஏற்படும். அம்பாறையில் இருக்கின்ற ஒரு ஆசனத்தையும் இழக்க வேண்டி ஏற்படலாம். இதன் வளர்ச்சிப் போக்கில் அரசியல் கட்சிகளையும் பொது அமைப்புக்களையும் இணைத்த தமிழ்த்தேசிய கவுன்சில், ஒன்றை உருவாக்குவது பற்றியும் யோசிக்கலாம்.




## வாழ்க்கையின் விளையாட்டுத் திடல்

ஒரு மணி நேரம்
அன்புடனும், அழகுடனும் காலத்தைக் கழிப்பது -
பயந்த பலவீனர்களால், பலசாலிகளுக்குக்
கொடுக்கப்படும்
முழுமையான ஒரு நூற்றாண்டுப் பெருமைக்குச் சமம்.

அந்த ஒரு மணி நேரத்தில்தான்
மனிதனின் உண்மை வெளிப்படுகிறது.
அந்த ஒரு நூற்றாண்டுக் காலத்தில், உண்மை,
அமைதி குலைந்த கனவுகளின்
நிம்மதியற்ற கரங்களுக்கிடையில்
உறங்கிப்போய் விடுகிறது.

அந்த ஒரு மணி நேரத்தில்தான்
ஆத்மாவின் சுயதரிசனம் நிகழ்கிறது
தானே இயற்கையின் விதி
என்பதைத் தெரிந்து கொள்கிறது
அந்த நூற்றாண்டுக் காலத்தில் தான்
அது தன்னை, மனிதனின் சட்டத்திற்குப் பின்னால்
சிறைப்படுத்திக் கொள்கிறது.
அடக்குமுறையின் இரும்புச் சங்கிலிகளையும்
கால்களில் மாட்டிக் கொள்கிறது.

அந்த ஒருமணி நேரமே
சாலமோனின் உன்னதப்பாட்டின் உற்சாகம்.
அந்த ஒரு நூற்றாண்டுக் காலம் தான்
பால்பெக் ஆலயத்தை இடித்துத் தகர்த்த
கண் அவிந்த சக்தி.

அந்த ஒரு மணி நேரமே
“மலைப் பிரசங்கம்“
அந்த ஒரு நூற்றாண்டுக் காலம் தான்
பால்மைரா, பாபிலோன் கோட்டைகளை
இடித்துத் தகர்த்தது.

அந்த ஒரு மணிநேரமே
முகம்மதின் ஹிஜிரா.
அந்த நூற்றாண்டு மறந்துவிட்டது
அல்லாவை, கொல்கோதாவை, சினாய் மலையை,
மேலியவரின் சமத்துவத்தைத் திருடியவர்கள்
அதற்காக துக்கமும், வருத்தமும் அடையும்
ஒரு மணிநேரம்,
பேராசையால் தகாத வழியில்
செல்வம் சேர்த்தல் நிறைந்த
ஒரு நூற்றாண்டுக் காலத்தைவிடப்
பெருமை மிக்கது.

அந்த ஒரு மணி நேரத்தில்தான்
பற்றி எரியும் துன்ப நெருப்பில்
இதயம் தூய்மையாகிறது
அன்புச் சுடரால் ஒளியூட்டப்படுகிறது.

அந்த ஒரு நூற்றாண்டுக் காலத்தில்
உண்மை தேடல்
பூமியின் நெஞ்சில் புதைக்கப்படுகிறது.

அந்த ஒரு மணிநேரம், வளர வேண்டிய வேர்.
அந்த ஒரு மணிநேரம், ஆழ்ந்த சிந்தனை.
அந்த ஒரு மணிநேரம், தியானம்.
வழிபாட்டின் நேரம்,
புதிய யுகத்தின் நன்மை.
அந்த ஒரு மணி நேரம்,
பூமியின் பொருளெடுத்து
சொந்த முதலாய்ச் செலவழித்த
நீரோவின் வாழ்க்கை

இதுதான் வாழ்க்கை
யுகங்களாய் மேடையில் சித்தரிக்கப்பட்டது.
நூற்றாண்டுகளாய் பூமியில் பதிவு செய்யப்பட்டது
பலப்பல ஆண்டுகளாய் விநோதமாய் வாழ்ந்தது
பல நாட்களாய் தேவகீதம் பாடியது

மேலான ஒரு மணி நேரம் தான்.
ஆனால், அந்த ஒரு மணி நேரம்,
முடிவற்ற காலத்தால்
விலையுயர்ந்த வைரமணியாய்ப்
போற்றிப் பாதுகாக்கப்பட்டது.

கலீல் ஜிப்ரான்
தமிழில் கவிஞர் புவியரசு

# வவுனியா வடக்கில் அழிவடைந்து வரும் தமிழ்க் கிராமங்கள்



## ஒரே ஒரு மனிதன் மட்டுமே வாழும் கிராமம்..

உள்நாட்டு யுத்த காலத்திலும் சரி அதன் பின்னரும் வாழ்ந்து சிறந்த தமிழ் கிராமங்களும், குடிகளும் தேய்ந்து மறைந்து போய் உள்ளது. குறிப்பாக வவுனியா வடக்கில் போரின் காரணமக உள்நாட்டு, வெளிநாட்டு இடம்பெயர்வும் அதனால் ஏற்பட்ட பாரிய அழிவுகளும் நடந்து முடிந்து தற்போது சிங்கள ஆக்கிரப்பும் கடுமையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக வவுனியா வடக்கில் ததமிழர்களின் பாரம்பரிய இடமாக அமையப்பெற்ற வெடிவைத்தகல், புதுவிளாங்குளம் என்பன தமிழர்களின் குடியிருப்புக்கள் இன்றி தற்போது காடுகளாக மாறிபோய்யுள்ளது. வெடிவைத்தகல் கிராமம் நெடுங்கேணியில் இருந்து 20 கிலோமீற்றர் தூரத்திலும் ஒமந்தையில் இருந்து மாற்று பாதையின் ஊடாக





24 கிலோமீற்றர் தொலைவிலும் அமையப்பெற்றுள்ளது. இக்கிராமமானது எல்லைக் கிராமமாக உள்ளதுடன் இக்கிராமத்தின் பின்பகுதியில் ஜானகபுரம் எனும் சிங்கள கிராமம் அமையப்பெற்றுள்ளது. குறிப்பாக 1958, 1978 1987ம் ஆண்டு காலப்பகுதியில் ஈழத்தமிழர்களுக்கு முக்கியமான ஒரு ஆண்டாகும். குறிப்பாக அழிவையும், இழப்பையும் சுமந்த ஒர் ஆண்டாக இருப்பதோடு 1985ம் ஆண்டு இராணுவ அடாவடிக்கும் தாக்குதலுக்கும் முகம் கொடுக்க முடியாமல் வெடிவைத்தகல்லில் வாழ்ந்த தமிழ் குடிகள் தமது வாழ்விடங்களை விட்டு வவுனியா நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் தஞ்சம் புகுந்தனர். இடம்பெயர்வுக்கு முன்னர் 50 குடும்பங்களை கொண்ட 200க்கு மேற்பட்ட மக்கள் வாழந்திருந்த பேதும் இடம்பெயர்வுகளுக்கு முகம் கொடுக்காமல் இருந்திருந்தால் தற்போது பன்னூறு குடிகளாகளாயிருப்பர். என்றாலும் தற்பேது இக்கிராமத்தில் ஒருவர் மட்டுமே வாழ்ந்து வருகின்றார் என்பது வேதனைக்குரிய விடயமகும்.

மீண்டும் இக்கிராமத்திற்கு வர துடிப்பவர்களை தடுப்பது அங்கு வாழ்வதற்கான எந்த அடிப்படை வசதியற்ற நிலைதான். குறிப்பாக இக்கிராமம் யுத்தம் முடிவடைந்து இலங்கை அரசினால் மீள்குடியேற்றல் செயற்பாட்டின் போது இந்திய அரசினால் பாடசாலை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இருந்த போதும் மாணவர்கள் இல்லாத நிலையில் தற்போது இப்பாடசாலை நெல் களஞ்சியப்படுத்தும் இடமாக மாறியுள்ளது. மேலும் இக்கிராமத்தில் மக்கள் இல்லாவிட்டாலும் யானைகள் உலாவும் பிரதேசமாக உள்ளதுடன் விவசாய செய்கையினை மேற்கொள்வதற்கும் இவை இடையூறாக உள்ளது.

இங்கு மீண்டும் குடியேறுவதற்கு விரும்பினாலும் கூட வீதி, போக்குவரத்து, கல்வி, பயிர் செய்கை மற்றும் யானைகளிடம் இருந்து பாதுகாப்பு போன்ற முக்கிய காரணங்களினால் இங்கு மீள குடியேற இம்மக்கள் விரும்புவதில்லை என்பதே நிதர்சனம். மேலும் இக்கிராமத்தில் ஒருவர் மட்டுமே வாழ்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இதேநிலையில் இன்னொரு கிராமமும் காணப்படுகின்றது. 1990ம் ஆண்டு இடம்பெற்ற கடுமையான ஆயுத மோதல்களினால் 200 வருடங்களுக்கு மேல் பழமையான புதுவிளாங்குளம் கிராமம் தற்போது அழிவடைந்து மக்கள் வாழ்ந்த இடம் என்ற நிலையில் இருந்து மறைந்து செல்லும் நிலையில் உள்ளது. வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மன்னகுளம் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள இக்கிராமம் ஒரு பரம்பரைக்குரிய 25 குடும்பங்கள் ஆரம்பத்தில் வாழ்ந்து வந்தனர். வரலாற்றுச் சிறப்புமிக்க புதூர் ஆலயத்தை அண்டியதாக உள்ளதுடன் வவுனியா நகரில் இருந்து 28 கிலோ மமீற்றர் தூரத்தில் அமையப்பெற்றுள்ளது.

முன்னர் பாடசாலை, சிவன் ஆலயம், சனசமூகநிலையம், அழகான கல்வீடுகள், விளைச்சல் தரும் வயல்கள் என்பவற்றைக் கொண்டு கம்பீரமாக காட்சியளித்த இந்தக் கிராமம் தற்போது பற்றைக்காடாகவும், போரின் சாட்சியாகவும் கண்முன்னே நிற்கின்றது. சேதமடைந்த சிவன் ஆலயமும், சிதைவடைந்த கட்டடம் ஒன்றின் இடிபாடும் மட்டுமே இப்பகுதியில் மக்கள் வாழ்ந்தமைக்கான ஒரே சாட்சி. ஏனைய கட்டடங்களின் அத்திவாரங்களை கூட தேடி கண்டுபிடிக்க முடியாத நிலையில் போரின் அவலத்தை இப்பிரதேசம் நேரடியாக சந்தித்துள்ளது.

2002ம் ஆண்டு சாமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போது 5 வருடங்களின் பின் இம் மக்கள் மீண்டும் சொந்த இடம் வந்து குடியேறியிருந்தனர். இருந்த போதும் இறுதி யுத்தம் காரணமாக இப்பகுதி மக்களும் இடம்பெயர்ந்து முள்ளியவாய்கால் வரை சென்று மீண்டும் வவுனியாவில் தாங்சமடைந்திருந்தனர். இதன்போது அவர்களது வாழிடங்கள் பற்றைக்காடுகளாக மாறியிருந்ததுடன், அப்பகுதியில் மக்கள் வாழ்வதற்கான அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை. இதன் காரணமாக அங்கு சென்று குடியேறுவதை தவிர்த்த இக் கிராம மக்கள் தற்போது கனகராயன்குளம், மன்னகுளம், வவுனியா உள்ளிட்ட பல பகுதிகளில் வேறு காணிகளைப் பெற்றும், உறவினர்கள், நண்பர்கள் காணிகளிலும் வசித்து வருகின்றனர். இதன் காரணமாக இந்த கிராமம் தற்போது அழிந்து போகும் நிலையில் உள்ளது.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் இப்பகுதி விடுதலைப்புலிகளினதும், இராணுவத்தினரதும் முன்னரங்க காவல் நிலைகளாக இருந்தது. இதன்போது முன்னரங்க காவல் நிலைகள் மக்களது வீடுகள், வயல் நிலங்களை ஊடறுத்து அமைக்கப்பட்டிருந்தது. அவை கூட இன்று வரை முழுமையாக அகற்றப்படாத நிலையிலேயே உள்ளது. இப்பகுதியில் வசித்த குடும்பங்கள் மீள்குடியயேறுவதாக இருந்தால் சிறுவர்கள் கல்வி கற்பதற்காக பாடசாலை தேவை. ஆனால் முன்னர் தரம் 5 வரை இருந்த பாடசாலை கூட தற்போது இருந்த இடம் தெரியாது இருக்கின்றது. அத்துடன் இப் பகுதிக்கான போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலை காணப்படுவதுடன் வீதிகள் கூட சீராக இல்லை. இதனால் தமது பிள்ளைகளின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் அடிப்படை வசதிகள் என்பவற்றை கவனத்தில் கொண்டு இக் கிராமத்தில் மக்கள் சென்று குடியேறுவதை தவிர்த்து வருகின்றனர்.

இக்கிராமத்திற்கு செழிப்பை ஊட்டும் வகையில் புதுவிளாங்குளம் குளம் உள்ளதுடன் அதன் கீழ் சுமார் 200 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலங்களும் காணப்படுகின்றது. 2005 ஆம் ஆண்டு நியாப் திட்டத்தின் கீழ் இக்குளம் புனரமைக்கப்பட்டிருந்தது.

**கோகுலன்**

கடந்த 2010 ஆம் ஆண்டு வடக்கின் வசந்தம் திட்த்தின் கீழ் புனரமைப்பு பணிகள் இடம்பெற்றிருந்தது. ஒப்பந்தகாரர் சீராக வேலை செய்யாமையால் அதிக நீரை தேக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்ததுடன், குளத்தின் வான்பகுதி, கட்டுப்பகுதி என்பனவும் மீண்டும் புனரமைக்கப்பட வேண்டி நிலையில் இருந்தது. இதன்பின் குளத்தில் சிறிய ளவில் திருத்த வேலைகள் இடம்பெற்று ஏறத்தாழ 150 ஏக்கரில் பெரும்போகமும், 50 ஏக்கரில் சிறுபோகமும் செய்கை பண்ணப்படுகின்றது. இக்குளத்தை சரியான வகையில் புனரமைத்து பராமரித்தால் தரிசு நிலமாக உள்ள சில நிலப்பகுதிகளையும் விவசாயத்திற்கு பயன்படுத்த முடியும் என இக் கிராம முக்கள் தெரிவிக்கின்றனர்.


இதே நிலைமைகளே தற்போது வெடிவைத்தகல், கோவில்புளியங்குளம், காஞ்சிரமோட்டை போன்ற கிராமங்களிற்கும் ஏற்பட்டு வருகின்றமையால் இங்கு வாழ்கின்ற மக்களும் தம் கிராமங்களை விட்டு வேறு இடம் செல்லும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. காலம் காலமாக வாழ்ந்த இத்தமிழ் கிராமங்களில் மீண்டும் தாம் மீள்குடியேறுவதற்கான செயற்பாடுகளை அரச அதிகாரிகளும், வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களும் முன்னெடுக்க வேண்டும் என்பதே இம்மக்களின் கோரிக்கையாக உள்ளது.

# பத்தொன்பதாவது திருத்தமும் ஆட்சி அதிகாரப் போட்டியும்

- மாசிலான் -







விடுதலை பெற்றதாகக் கூறப்படும் நாற்பத்தெட்டில் இருந்து இலங்கைத் தீவு இதுவரை மூன்று அரசியல் யாப்பை கண்டுள்ளது. முதலாவது யாப்பு தமிழ் மக்களுக்குக் கொஞ்சம் பாதுகாப்பான இருபத்தொன்பதாவது விதியைக் கொண்டிருந்தது. எண்ணிக்கையில் மொழி, மதம் என்பனவற்றால் சிறுபான்மையினராக இருப்பவர்களுக்கு எதிரான சட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தடையாக இந்த விதி இருபத்தொன்பது இருந்து வந்தது. 1956 இல் கொண்டுவரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டம் கூட சிறுபான்மையினரான தமிழ் மக்களுக்கு எதிரான சட்டமே என்று நீதிமன்றமே தீர்ப்பளித்திருந்தது. இவ்வாறான தீர்ப்பு சிங்கள அரசியவாதிகளைத் திகைப்படைய வைத்தது. எனவே தான் சிறிமாவோ பண்டார நாயக்கா எழுபது தேர்தலில் தமது கட்சி ஆட்சிக்கு வந்தால் புதிய அரசியல் யாப்பைக் கொண்டுவருவதாக மக்களுக்கு கூறி வாக்குக் கேட்டார். சிங்கள மக்கள் அதற்கு ஆதரவான ஒரு தீர்ப்பைத் தேர்தல் மூலம் கொடுத்தனர். ஆனால் தமிழ் மக்கள் அவ்வாறு ஆதரவு கொடுக்கவில்லை. ஆனாலும் தங்களின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வைத்து எழுபத்திரண்டு மே இருபத்திரண்டில் இலங்கைத் தீவை ஒரு சிங்கள பௌத்த குடியரசாக புதிய அரசியல் யாப்பை நிறைவேற்றியதன் மூலம் அறிவித்தனர். சட்ட வலுவற்றதாக இருந்த சிங்கள மொழிச் சட்டம் புதிய அரசியல் அரசியல் யாப்பில் இடம்பெற்று சட்ட வலுவுள்ளதாகியது. புத்த மதம் நாட்டின் மதமாகியது..

முன்பு இருந்த யாப்புகள் இரண்டும் நாடாளுமன்றமே அதி உச்ச அதிகாரம் கொண்டது என்பதை உறுதி செய்திருந்தன. ஆனால் முதலில் இருந்த சோல்பரி அரசியல் யாப்புத் தமிழ் இனத்திற்கு ஓரளவு பாதுகாப்பைக் கொடுத்தது மாறாக பின்னர் நிறைவேற்றப்பட்ட குடியரசு யாப்பு அந்தப் பாதுகாப்பையுமில்லாமல் செய்து விட்டிருந்தது. இதன் பின்னர் ஜேஆர் ஜெயவர்த்தனா எழுபதாம் ஆண்டு அரசியல் யாப்பைத் தூக்கி வீசிவிட்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி ஆட்சி அமைப்பைக் கொண்ட அரசியல் யாப்பை எழுபத்தெட்டாம் ஆண்டு கொண்டுவந்து நிறைவேற்றினார். நாடாளுமன்றத்தின் அதிகாரம் குறைக்கப்பட்டது. சனாதிபதிக்கு மிக அதிக அதிகாரங்களை அவ்வரசியல் யாப்புக் கொடுத்திருந்தது. மிகப் பெரிய வல்லரசான அமெரிக்காவின் சனாதிபதிக்குக் கூட இல்லாத அளவு அதிகாரம் இங்கு சனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்தது. ஒரு பெண்ணை ஆணென்றும் ஆணைப் பெண்ணென்றும் மாற்றும் அதிகாரம் தவிர அனைத்து அதிகாரங்களும் சனாதிபதிக்கு இருப்பதாகக் கூறுவார்கள்..

இவ்வளவு அதிகாரங்களைக் கொண்டுள்ள சனாதிபதியின் அதிகாரங்களை, நாடாளுமன்றத்திற்கே இல்லாத அதிகாரங்களை சனாதிபதி மாகாண சபைகளுக்கு எவ்வாறு வழங்க முடியும். ஆனால் நமது அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்படும் உரிமைகள் கிடைக்கும் என்று பொய்யான உறுதிமொழிகளைக் கூறி மக்களிடம் தேர்தலில் வாக்குக் கேட்பது தான் இங்கு நடக்கும் ஆச்சரியமாகும்.

சனாதிபதியின் அளவுக்கு மீறிய இவ்வதிகாரத்தைக் குறைப்போம் நாடாளுமன்றத்திடம் அதிகாரங்களை வழங்குவோம் என்று எதிர்தரப்பினர் கூறி சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார்கள். ஆனால் வெற்றி பெற்ற பின் அவர்களும் ஆட்சி அதிகார மோகத்தினால் அதை நிறைவேற்ற மாட்டார்கள். சந்திரிகா இவ்வாறுதான் நிறைவேற்று அதிகாரச் சனாதிபதி முறையை தான் ஒழிப்பதாகக் கூறிப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். ஆனால் அவர் சிறிதள வேனும் அதில் நாட்டம் கொள்ளவில்லை. ஒருமுறை இருந்தவர் இரண்டாம் முறையும் பதவிக்கு வந்து அதிகாரத்தில் தான் இருந்து விட்டுச் சென்றார். அவரைத் தொடர்ந்து வந்த மகிந்த ராஜபக்சவும் இவ்வாறே கூறி வந்தார். வந்தவர் அந்தப் பதவியின் சுவையில் தனது ஆட்சிக்காலத்தை நீட்டிக்க விரும்பி சனாதிபதியின் பதவிக்காலம் இரண்டு என்றிருந்த சட்டவிதிகளை மாற்றி மூன்றாவது முறையாகவும் பதவி வகிக்கலாம் என்று அரசியல் யாப்பில் திருத்தங்களைக் கொண்டு வந்தார். இது தான் பதினெட்டாவது அரசியல் யாப்புத் திருத்தமாகும்.

ஜே.ஆர் எழுபத்தெட்டில் அரசியல் யாப்பைக் கொண்டுவந்தபொழுது ஒருவர் சனாதிபதியாக இருதடவைகள் மட்டுமே பதவி வகிக்க முடியும் என்று யாப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. சனாதிபதியாக இருந்த ஒருவர் கௌரவமாக வாழ்வதற்காக ஓய்வூதியம், குடியிருக்க வீடு என்பன போன்ற பல வசதிகளை வழங்கவும் ஏற்பாடுகளை செய்திருந்தனர். இதன் கருத்து சனாதிபதியாகி ஓய்வுபெற்றவர் மீண்டும் அரசியல் வாழ்க்கைக்குள் வருவதில் கௌரவக்குறைச்சல் இருக்கக் கூடாது என்பதாகும். ஆனால் இங்கு அவ்வாறு இல்லை. இருதடவைகளின் பின்னரும் பதவியில் தொடர மகிந்த அரசியல் யாப்புத் திருத்தத்தை செய்தார். அதன் பின்னர் தேர்தலில் தோற்றுப்போன பின்னரும் நாடாளுமன்ற உறுப்பினராக வந்து அரசியலில் தொடர்கின்றார். நாட்டின் அதி உச்சப் பதவியில் இருந்தவர் பின்னர் சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பது எத்தகைய மன நிலை அவர்களுடையது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள முடியும். சந்திரிகாவும் பதவி அரசியலில் இல்லாத போதும் கட்சி அரசியலுக்குள் இருப்பது நோக்குதற்குரியதே.

பதினெட்டு ஆண்டுகள் அதிகாரத்தில் இருக்க ஆசைப்பட்டு யாப்பில் திருத்தம் கொண்டு வந்து மீண்டும் தேர்தலில் போட்டியிட்ட மகிந்த பதினெட்டு ஆண்டு ஆசைகளை இழந்தது மட்டுமல்ல தனது பன்னிரண்டு ஆண்டு முழு ஆட்சிக்காலத்தையும் பறிகொடுத்து பத்தாண்டுகளில் பதவியை இழந்து சென்றார். இதனால் தானோ என்னவோ தொடர்ந்தும் பதவி அரசியலில் இருக்க ஆசைப்பட்டு தொடர்கிறார். இவருக்கு அடுத்ததாக வந்த மைத்திரிபால சிறிசேனாவும் தான் மீண்டும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று வாக்குறுதி அளித்துத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன் போட்டியிட்டு மகிந்தவைத் தோற்கடித்துச் சனாதிபதியானார். இவரது காலத்தில் தான் அரசியல் யாப்புக்கு பத்தொன்பதாவது திருத்தம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது இத்திருத்தத்தின் படி மீண்டும் சனாதிபதியாக ஒருவர் இருமுறை மட்டுமே பதவி வகிக்க முடியும் என்று திருத்தம் கொண்டு வரப்பட்டது. சில அதிகாரங்கள் குறைக்கப்பட்டு பிரதமருக்கும் சபாநாயகருக்கும் வழங்கப்பட்டன. சனாதிபதி அமைச்சுகள் எதனையும் வைத்திருக்க முடியாது என்றும் கூறப்பட்டிருந்தது. இத்திருத்தங்கள் வந்தபொழுது ஐதேகவுக்கும் மைத்திரிக்கு நல்ல உறவு இருந்தது. ரணில் விக்கிரமசிங்கவை திருப்திப்படுத்த வேண்டியிருந்தத்தால் இவற்றுக்கு மைத்திரி ஒப்புக்கொண்டிருந்தார். ஆனால் தேன்நிலவு முடிந்ததும் தான் தவறாக முடிவெடுத்து விட்டதாகவும் ஏமாற்றப்பட்டு விட்டதாகவும் பின்னர் மைத்திரி கூறியிருந்தார். அவருக்கு மீண்டும் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற ஆசை வந்தது.அதற்காகன முயற்சிகளிலும் இறங்கினார். அது சரிப்பட்டு வரவில்லை. தேர்தலின் பின்னர் நாடாளுமன்றம் செல்லலாம் என்றும் பார்த்தார் அதுவும் சரிவரவில்லை. இந்நிலையில் எப்படியும் ஏதாவது செய்து தொடர்ந்தும் பொது வாழ்வில் தொடரப்போவதாக அவர் அறிவித்தள்ளார்.

இவை எல்லாம் என்னத்தைக் காட்டுகின்றன என்றால் அரசியவாதிகள் எல்லாரும் தொடர்ந்தும் பதவியில் இருப்பதையே ஓர் இலட்சியமாகக் கொண்டுள்ளார்கள். பதவி ஆசையே அவர்களுக்கு இருக்கும் இலட்சிய வெறி என்பதாகும். சனாதிபதித் தேர்தல் முடிந்த கையேடு பத்தின்பதாவது திருத்தம் பற்றிய பேச்சுத் தான் எங்கும் காணப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாகத் தம்பியும் நாட்டின் பிரதமராக அவரது தமையனும் இருப்பதே ஆகம். பதவிகளின் மேல் மீகவும் பற்றுக்கொண்ட அண்ணனும் தம்பியும் இருபெரும் பதவிகளில் இருக்கிறார்கள். சனாதிபதியாக இருப்பவர் தனது அதிகாரத்தை வலுப்படுத்த பத்தொன்பதாவது திருத்தத்தால் குறைக்கப்பட்ட அதிகாரத்தைப் பெற விழைகின்றார். ஆனால் இவ்வாறு பிரதமரின் அதிகாரங்கள் குறைக்கப்படால் பெயருக்கு மட்டும் எந்த அதிகாரமும் இல்லாத பிரதமராக எவ்வாறு இருப்பது என்பது அண்ணனின் நினைப்பாக இருக்கிறது. எனவே தான் மகிந்தவின் விசுவாசிகள் பத்தொன்பதாவது அரசியல் யாப்புத் திருத்தத்தில் சில திருத்தங்களை மட்டும் மேற்கொள்வதே நல்லது என்று பகிரங்கமாகவே கூறுகின்றனர். அமைச்சரவைக்குத் தலைமை தாங்கும் சனாதிபதியிடம் எந்த ஒரு அமைச்சும் இல்லாவிடில் அதன் பொருள் தான் என்ன? நாடாளுமன்றத்தை முன்பு தேர்தல் நடந்த இரண்டு ஆண்டுகளில் கலைக்க முடியும், பிரதமரையும் மாற்ற முடியும் என்றெல்லாம் இருந்தது. தற்பொழுது நான்கரை ஆண்டுகளுக்கு நாடாளுமன்றத்தை கலைக்க முடியாது பிரதமர் தானாகப் பதவி விலகினால் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் மூலம் நீக்கப்பட்டாலே அவரை மாற்ற முடியும் என்று பல விதிகள் உள. இலஞ்ச ஆணைக்குழு, போலிஸ் ஆணைக்குழு என்றவாறு ஆணைக்குழுக்களே நியமனங்கள் பதவி உயர்வுகள் என்பனவற்றுக்குப் பொறுப்பாக இருப்பது போன்ற விதிகளை நீக்கினாலே சனாதிபதியின் கையில் அதிகாரங்கள் மீண்டும் வந்து சேரும். சில அமைச்சுகளைக் குறிப்பாக உள்நாட்டுப் பாதுகாப்பு வெளிநாட்டுப் பாதுகாப்பு என்பனவற்றைத் தனது கையில் வைத்திருக்கவே சனாதிபதி விரும்புவார். இவை இல்லாவிடில் அது ஒரு பெரும் குறையாகவே இருக்கும். எனவே பத்தொன்பதாவது திருத்தத்தை நீக்கவே சனாதிபதி கோத்தபாய விரும்புவார். அப்படிச் செய்யும்பொழுது அதிகாரமெதுவும் இல்லாத பிரதமராக தொடர்வதற்கு மகிந்த விரும்பமாட்டார். ஆக ஒரே ஒரு அனுகூலம் தான் ஏற்படும் அது தான் இரண்டு தடவைக்கு மேலும் சனாதிபதவிக்குப் போட்டியிடலாம் என்ற நன்மை. ஆனால் இவ்வாறு போட்டியிட கோத்தபாய மகிந்தவை அனுமதிப்பாரா. ஏனெனில் அதிகாரங்கள் கைகளுக்கு வந்தால் அவற்றை விட்டுக்கொடுக்க எவருக்கும் மனது வராது. எனவே எப்படிப் பார்த்தாலும் பிரதமருக்கும் சனாதிபதிக்கும் இந்தப் பத்தொன்ப்தாவது திருத்தம் என்பது சுமுக நிலையைக் கொடுக்காது என்பது தான் உண்மையாகும். அதே நேரம் அரசியல் யாப்புத் திருத்தம் செய்வதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. அதைப் பெறுவதில் கவனம்செலுத்துமாறு கோத்தபாய ஏற்கனவே அறிவித்துள்ளார்.

அதுமட்டுமல்ல தன்னைச் சுற்றிப் பலமான அணியை அவர் உருவாக்குகிறார். முக்கிய பதவிகளில் எல்லாம் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளையும் தற்போதுள்ள இராணுவ அதிகாரிகளையும் அவர் பதவிகளில் நியமித்து வருகிறார். எனவே அவர் இரண்டாம் முறைக்கு மேலும் சனாதிபதியாக ஒருவர் வரலாம் என்று திருத்தம் கொண்டு வந்தாலும் தான் சுவைத்துக் கொண்டிருக்கும் பதவியை வேறு யாருக்கும் விட்டுக்கொடுக்க மாட்டார் என்பது தெளிவாகிறது. ஆகவே அண்ணன் தம்பி என்பது எப்படிப் போய் முடிவடையும் என்பது கொஞ்சம் சிக்கலாகவே உள்ளது. நாடு சனநாயகத்திலிருந்து விலகிச் செல்லக்கூடிய வாய்ப்புக்களும் உள்ளதாக நோக்கர்கள் கருதுகின்றனர்.

### உயர் அழுத்த அரசியலால் கொள்ளையர்களுக்குப் பாதுகாப்பு..!

# சட்டத்தைக் கையிலெடுக்க நிர்பந்திக்கப்படுகின்றனரா பொது மக்கள்?



மக்களின் நலன்களைப் பாதுகாக்கிறோம். அவர்கள் வளமான வாழ்வே எமது குறிக்கோள் என சூழுரைத்தவர்கள் மௌனமாக இருக்க, தமது பாதுகாப்பைத் தாமே தேடிக்கொள்ள வேண்டுமென முடிவை எட்டியவர்களாக மக்கள் செயற்படத் தொடங்கி இருக்கின்றனர். கடந்த வாரம் நடைபெற்ற பல சம்பவங்கள் இதனை உணர்த்தி நிற்கின்றன. மக்களின் நலன்களைப் பாதுகாக்க வென இருக்கின்ற அரசியல் கட்சிகளோ அல்லது பிற பொது நிறுவனங்களோ கண்ணை மூடிக்கொண்டிருக்கின்றனர். பொது நியாயத்தைக் கேட்க யாரும் இல்லை என்பதுபோல தனியார் சிலரும், நிறுவனங்கள் சிலவும் அத்து மீறிச் செயற்படுவதாகவே எண்ணலாம்.

முதலாவது சம்பவமாக மணற் கொள்ளையில் ஈடுபடுபவர்களைச் சொல்லலாம். மணல் ஏற்ற அனுமதி அவசியம் இல்லை என்று தெரிவித்த நாள் தொட்டு டிப்பர் வாகன உரிமையாளர்கள் ஈன இரக்கம் பாராது மண்ணேற்றத் தொடங்கி இருக்கின்றனர். அவர்கள் இரவு பலலென்றும் பாராது நாட்டின் வளத்தை சூறையாடத் தொடங்கியதும் கோபம் கொண்ட மக்கள் அவர்களது ட்ராக்டர் வாகனங்களை எரியூட்டிய சம்பவம் நடைபெற்று நீதிமன்றம் வரை போய் சம்பந்தப்பட்டவர்கள் பிணையில் வெளியே வந்திருக்கின்றனர்.

இதற்கிடையில் மணல் அகழ்வில் ஈடுபடுவோரை உடன் கைது செய்து முற்படுத்துக எனவும், உயர் மட்ட அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணிய வேண்டாம் என்றும், பொலிஸாருக்கு ஊர்காவற்றுறை நீதிபதி யூட்சன் உத்தரவிட்டிருப்பதாகப் பத்திரிகைச் செய்தி ஒன்றும் உண்டு. நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய ஆறு இளைஞர்க ளையும் பிணையில் விடுவித்த நீதிபதி "இன்று முதல் தீவகத்தின் எந்தப் பகுதியிலும் மண் அகழ்வு நடவடிக்கை யில் எவரேனும் ஈடுபட முடியாதவாறு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தீவகம் வடக்கு, தெற்கு பிதேச செயலாளர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அடுத்ததாக மறவன் புலவுப் பிரதேசத்தில் காற்றாலைகள் அமைக்கும் பணி தொடர்பாக அவ்வூர் மக்களுக்கும், காற்றாலை நிர்மாணப் பணிகளுக்காக வந்த அது சார்ந்த நிறுவன ஊழியர்களுக்கும் இடையே நடைபெற்ற கைகலப்பைச் சொல்லலாம். இது இன்று நேற்றுத் தொடங்கிய சர்ச்சை அல்ல. நீண்ட காலமாகவே இது நடைபெற்றுவரும் பிரச்சினைக்குரிய விடயம் எனச் சொல்லப்படுகிறது. மறவன் புலவு மக்கள் பல முறை இதற்கு எதிராகப் போராடி இருக்கின்றனர். காற்றாலை அமைக்கப்பட்டால் அதன் உயரம் காரணமாக மழை முகில் கூட்டங்கள் கலைந்துவிடும். அதனால் தமக்கு மழை வீழ்ச்சியில் கணிசமான மாற்றங்கள் வர வாய்ப்பிருப்பதாக அந்த ஊர் மக்கள் நம்புகின்றனர். ஆனால் இது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படாத தொரு நம்பிக்கை என்கின்றனர் பொறியியலாளர்கள்.

**- சர்வன் -**





முன்பு வடக்கு மாகாணசபை இயங்கிய காலத்தில் அப்போது விவசாய அமைச்சராகப் பதவி வகித்த திரு.பொ.ஐங்கரநேசன் அவர்கள் பளைப் பகுதியில் இவ்வாறான காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைக்க இணங்கியிருந்தார் எனவும் மக்கள் அச்சப்படுவதைப்போல அதில் ஒரு பாதிப்பும் வரப்போவதில்லை எனத் தெரிவித்ததாகவும் செய்திகள் உண்டு. இது தொடர்பில் பல சர்ச்சைகள் இருந்தாலும் சுற்றுச் சூழலியலுக்கு முக்கியத்துவம் அளித்து ஒரு பசுமை இயக்கத்தையே நடத்திவரும் திரு.ஐங்கரநேசன் மேற்கண்டவாறு தெரிவித்திருப்பது கவனிக்கப்பட வேண்டியதொன்று.

இதில் என்ன அரசியல் பின்னணி இருக்கிறதோ தெரியவில்லை. இந்தத் திட்டம் அமையப்போகின்ற பகுதியிலுள்ள ஊராட்சி சபைகளிடம் இதுவரை எந்தவித எழுத்தினாலான ஒப்புதலும் எடுக்கவில்லை என்றும் இத் திட்ட ஒப்பந்தத்தில் இத் திட்டம் அமையப்பெறும் இடத்து ஊராட்சிச் சபையான சாவகச்சேரிப் பிரதேச சபைக்கு 20சதவீத லாபப் பங்கு வழங்க இணக்கம் காணப்பட்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காற்றாலை அமைப்பதற்கான அனுமதி தொடர்பில் ஒரு இழுபறி நிலை காணப்படுவதைப் பொருட்படுத்தாத அது சார்ந்த நிறுவனம், தற் துணிவுடன் அதற்கான இராட்சத குழாய்களை 106 சில்லுகள் பொருத்தப்பட்ட வண்டிகள் மூலம் எடுத்து வந்திருக்கின்றன. "அந்த இராட்சத குழாய்களைப் பார்த்தாலே பயமாக இருக்கிறது" என அவ்வூர் வாசி ஒருவர் தெரிவிக்கிறார். அமையப்போகும் ஒவ்வொரு காற்றாடியினதும் உயரம் 350 அடி ஆகும் எனச் சொல்லப்படுகிறது. எனவே மக்கள் பயப்படுவதில் நியாயமிருப்பதாகச் சொல்லலாம்.

மக்களுக்கு அபிவிருத்திகள் அவசியம். ஆனால், சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தில் கழிவு ஓயிலால் பாதிக்கப்பட்ட மக்கள் இதிலும் இவ்வாறு சந்தேகிப்பதில் நியாயம் உண்டு. இது அவ்வகைப் பாதிப்பை ஏற்படுத்தாவிட்டாலும் வேறு வழிகளில் பாதிப்பை உண்டாக்கலாம் என்று மக்கள் நம்புகின்றனர். முன்பு போலல்லாது மக்கள் பல வழிகளிலும் சிந்திக்கத் தெரிந்தவர்கள். எனவே இது போன்ற விடயங்களை நடைமுறைப்படுத்த முன்பு அது தொடர்பான நிறுவனங்களும், அரச அதிகார சபைகளும், அதிகாரிகளும் மக்கள் சந்திப்பை ஏற்படுத்தி அவர்களோடு கலந்துரையாடி அவர்கள் சந்தேகங்கள் தீர்க்கப்பட்டு ஒரு திறந்த மனதோடு முன்னெடுக்கலாமே? இப்படித் திருடர்கள் போலத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முயலுவதேன்? மக்கள் சந்தேகிக்கப்படுவதில் நியாயமுண்டு என்றுதானே அர்த்தம்!

- சிறுகதை -

- பெனடிக்ரா -



# தண்ணி... தண்ணி...

குடும்பத்தில் அவன் மட்டுமே எஞ்சியது அவனது மனதை மகிழ்ச்சிப் படுத்தவில்லை. தனிமையும் தன் கண்ணெதிரே தன் பெற்றவர்களும் சகோதரர்களும் கொலை செய்யபட்டதும் அவனது மனதில் ஆழமான வடுவை ஏற்படுத்தியிருந்தது.

"அக்கா எல்லாம் சரி. நிகழ்வை ஆரம்பிக்கலாம். குத்து விளக்குக் கொளுத்துறது ஆர்?"
"அந்தா நீலச் சாறியோட நிக்கிற அக்காவக் கொளுத்தச் சொல்லுங்கோ".
"அக்கா! அக்கா! என்று கூப்பிட்டபடி யாரோ தன்னைத் தட்டுவதை உணர்ந்த பூரணி திரும்பிப் பார்க்கிறாள்.
"அக்கா குத்துவிளக்கைக் கொளுத்துங்கோ" என்று கூறியபடி சகோதரி ஒருவர் தீப்பெட்டியை நீட்டுகிறாள்.
"நானோ!" என்று கேட்டபடி பூரணி தயங்கிநிற்கிறாள்.
"அக்கா நீங்கள் தான் கொளுத்துங்கோ" என்று ஓர் அழுத்தமான குரல் பூரணியின் காதுகளில் விழுகிறது.
பூரணி தீக்குச்சியை உரசி, திரியில் சுடரேற்றுகிறாள். பிரகாசமாக சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்த ஒளி மீது அவள் பார்வை பதிகிறது.
"யார் ஏற்றினாலும் சுடர் ஒளிரும் அக்கா" என்றவள் பூரணியின் தோள்களில் மெதுவாய் தட்டிக்கொடுத்துவிட்டு நகர்ந்து விடுகிறாள். பூரணியின் நினைவுகளோ பின்னோக்கி நகரத் தொடங்கின.

"ராசா மாமா, காயப்பட்டிற்றார்" அது அண்ணாவின் சின்ன மகனின் குரல். கையில் கழுவி எடுத்த பாத்திரங்களை அப்படியே போட்டுவிட்ட பூரணி, குரல் வந்த திசையை நோக்கி ஓடினாள். ராசாவுக்கு உடனடியாக காவல்துறையினர் முதலுதலிச் சிகிச்சையை வழங்கினர். அதன்பின் அண்ணனின் மோட்டார் சைக்கிளில் ஏற்றிச்சென்றனர். முள்ளிவாய்க்காலில் இயங்கிக் கொண்டிருந்த, மாஞ்சோலை வைத்தியசாலையில் ராசாவைச் சேர்த்தார்கள். அங்கே தறப்பாள்க் கொட்டிலுக்குள் கிடந்த காயக்காரரோடு ராசாவும் சேர்த்துக் கொள்ளப்பட்டார். விலாப் பகுதியைத் துளைத்துக் கொண்டு உள்ளே சென்ற எறிகணையின் சிறிய துண்டொன்று, ராசாவின் சிறுகுடலைச் சிதைத்து விட்டதாம். வலியைத் தாங்க முடியாமல் ராசா துடிதுடித்துக் கொண்டிருந்தார்.,

நாலாபுறமும் இருந்து சீறிக்கொண்டு வந்த துப்பாக்கி ரவைகளும், ரொக்கேற் குண்டுகளும், எறிகணைகளும், கொத்துக் குண்டுகளும் ககோன்களும் வைத்தியசாலை வளாகம் எங்கும் மழை போல் பொழிந்து கொண்டிருந்தன. ஒருபுறம் வலி தாங்க முடியாமல் துடிக்கும் காயக்காரர்களின் கதறல்களும் அவர்களின் பரிதாப நிலை கண்டு பதைபதைக்கு உறவுகளும், மறுபுறம் உறவுகளை இழந்து ஓலமிடும் உறவுகளும் மனம் தேலித்த நிலைமைகளும். இத்தனைக்கும் மத்தியில் தம் உயிர்களைத் துச்சமென மதித்து, மனந் தளராமல் உயிர்களை எப்படியும் காப்பாற்றி விடவேண்டுமென்று சுறுசுறுப்பாகப் போராடிக் கொண்டிருந்தனர் வைத்தியர்களும், தாதியர்களும், ஊழியர்களும். பாதுகாப்பற்ற நிலையில் தான் அந்த வைத்தியசாலை இயங்கிக் கொண்டிருந்தாலும் அறுவைச் சிகிச்சை முதற்கொண்டு அத்தனை சிகிச்சைகளும் நடந்து கொண்டே இருந்தன.

தன் கவணன் காயப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்டதும் எல்லாவற்றையும் அப்படியே போட்டு விட்டு ஓடிவந்த பூரணியின் உள்ளம் கடல்போல, குமுறிக் கொண்டிருந்தது. காரணம் தனது பார்வையற்ற இரண்டு சகோதரிகளும் பத்து வயதும் ஏழு வயதும் நிரம்பிய இரண்டு பையன்களையும் வைத்துக் கொண்டு என்ன செய்யுதுகளோ? நாங்க இருந்தாலே சொல்லுக் கேக்க மாட்டாங்கள். இப்ப என்ன செய்யிறாங்களோ? என்று பூரணியின் மனம் தத்தளித்துக் கொண்டிருந்தது.

"அக்காவும் அவாட பிள்ளைகளும் அதுகளப் பார்த்துக் கொள்ளாமலா விடுவார்கள்." என்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

போரின் கொடிய பாதையிலேயே ஓடியோடிக் களைத்துப் போன பூரணியின் குடும்பமும் கடற்கரையில் இருந்து புறப்பட்டது. சனங்களோடு சனங்களாக முள்ளிவாய்க்காலில் பனங்கூடல் நிறைந்த பகுதிக்கு வந்து சேர்ந்தனர்.

வழக்கம் போல் ராசா தறப்பாள் ஒன்றினால் கொட்டில் போட்டார். ஆறு பேரும் இருக்கக் கூடியவாறு பதுங்கு குழி வெட்டினார். தற்காலிக மலசலகூடத்தையும் அமைத்தார்.

தண்ணீருக்கு ஏற்பட்ட தேவைகள் மக்களுக்குள் மனக் கசப்புகளையும் ஏற்படுத்தத் தவறவில்லை.

"இனி யாரிட்டயும் நான் தண்ணிக்குப் போக மாட்டன்" என்று முகத்தைக் கோணிக்கொண்டு வந்து நின்ற பூரணியைப் பார்க்க பாவமாக இருந்தது. இடப்பெயர்வின் காலம் முழுவதும் அவளும் அவளது கணவர் ராசாவுமாகப் பட்ட பாடுகள் கொஞ்சமல்ல. பார்வையற்ற இரண்டு சகோதரிகளையும் சிறுபிள்ளைகள் இருவரையும் அவர்களே முழுதுமாய்ப் பராமரிக்க வேண்டியவர்களாய் இருந்தார்கள். ராசா அன்றே நிலத்தைக் கிண்டி சிறிய கிணறு ஒன்றை அமைத்தார்.

காலையிலிருந்தே அத்தனை வேலைகளையும் தன்னந் தனியாகவே செய்து முடித்த ராசா இரவு ஒன்பது மணியளவில் தான் தலைக்குக் குளித்தார். இரவு தன் பிள்ளைகளோடு கதைத்துச் சிரிக்கவும் தவறவில்லை.

"வாங்க சாப்பிடுவம்" என்று பூரணி அழைக்க, ஐவரும் பக்கத்தில் வந்து இருந்தார்கள். சாப்பாட்டைக் கையில் வாங்கிய ராசா, சிரித்துக் கொண்டார்.

"இந்த மாங்காய எவ்வளவுக்கு வாங்கினீங்க?"

"அத ஏன் கேக்கிறீங்க? நானூர்வா. சின்னோண்டு மாங்கா தான். ஆனா நானூர்வா." ஏன்றாள் பூரணி.

அஞ்சாறு செத்தலையும் கொப்பராத் தேங்காய்த் துண்டையும் வைத்து அரைத்த சம்பல். சோற்றுக் கோப்பைகளை அனைவரிடமும் நீட்டினாள்.

"பாருங்களன் ரெண்டுபேரிட முகங்களையும்" என்று பூரணி பிள்ளைகளைச் சுட்டிக் காட்டினாள்.

"நாங்க எங்கட வீட்டுக்குப் போய் மாங்காய் பிடுங்கிக் கொண்டு வந்து ஆயிரம் ரூபாக்குக் குடுப்பம்" என்று ராசா மகன்மாருக்குச் சொன்னார்.

"அப்பா! நாங்க எப்ப அப்பா வீட்டுக்குப் போறது? அங்க போனா நல்லா விளையாடலாம். அப்பா! நாங்க வீட்ட போகேக்குள்ள அண்ணா, அம்மா அன்ரியாக்கடேளாட ரைக்டரில சாமான்கள ஏத்திக்கொண்டு வரட்டும். நீங்க சைக்கிளில தானே வருவீங்க. அப்ப நானும் என்ர சின்னச் சைக்கினில உங்களுக்குப் பின்னால் வருவன் என்னப்பா" என்று சின்ன மகன் சாரு சொன்னான். அவனின் கதையக்கேட்டு, மூத்தவன் சர்மிலன் உட்பட எல்லோரும் சிரித்தனர். கதைத்துக் கொண்டிருந்தவாறே சிறியவர்கள் இருவரும் தூங்கி விட்டனர். மற்றவர்களையும் தூக்கம் அழைத்தது. அந்தந்த இடத்தில் சுருண்டு கொண்டனர். ராசா மட்டும் தூங்கவே இல்லை. குண்டுச் சத்தங்களும் சனங்களின் கூக்குரல்களும் இரவிரவாக ஓயவே இல்லை.

காலை விடிந்ததும் பதுங்கு குழியின் வாசலுக்கு மண் போட்டுக் கொண்டிருந்தார் ராசா.

"வீட்டில இனி ஒரு சாமானும் இல்ல. டோக்கனுக்குச் சாமான் எடுக்கப் போகவும் பயமாயிருக்கு. நேற்றுக் கூட, சாமான் எடுக்க வரிசையில நிக்கேக்க செல் விழுந்து, நம்மட மூத்தவன்ர வயத ஒத்த பொடியன் செத்திட்டான். கனக்கப்பேர் அதிலயே செத்திட்டாங்க. எனக்குப் பயமாயிருக்கு" என்று தேத்தண்ணியைக் கொடுத்தபடி பூரணி சொன்னாள்.

"சரி நான் போய் ஏதாவது கிடந்தால் பாத்து வாங்கிக் கொண்டு வாறன்" என்றார் ராசா.

மன்னாரின் வயல்கள் விளையும் இடமாகிய கன்னாட்டியில் இருந்து புறப்படுத்போதே கொஞ்சம் தாராளமாக அரிசியோடு புறப்பட்டதால் நீண்ட நாட்களாக அந்த அரிசி தாக்குப் பிடித்தது. கடைசியாகக் கிடந்த அரிசியில் தான் இரவு சோறு காய்ச்சியிருந்தாள் பூரணி. அந்தச் சோற்றின் மிச்சத்தில் தண்ணீரை ஊற்றி வைத்திருந்தாள். அந்த நல்ல பழஞ் சோற்றை மேலும் தண்ணீர் விட்டுக் கரைத்துக் கொடுத்தாள். பழங்கஞ்சியை ஊர்ர்ரென்று உறிஞ்சிக் குடித்துவிட்டே ராசா புறப்பட்டார்.

அண்ணனின் சின்ன மகனும், பெரியக்காவின்

கணவரும் ராசாவும் புறப்பட்டுப் போய், சில நிமிடங்களே ஆகியிருந்தன. கடல் பக்கமாக இருந்து வந்த ஒரேயொரு எறிகணை, இவர்கள் சென்ற பக்கம் விழுந்து வெடித்தது. எறிகணை கூவிக்கொண்டு வர, பக்கத்திலிருந்த குழிக்குள் விழுந்தார் ராசா. குடும்பத்தினரிடமே திரும்பிவிட நினைத்த அவர் எழும்பி ஓடிவர எத்தனித்த போது தான் அந்தத் துர்ப்பாக்கிய சம்பவம் நிகழ்ந்தது. ராசாவும் ஒழுந்து ஓட முயற்சிக்க அடுத்து வெடித்த எறிகணையின் சிதறு துண்டு அவரின் வயிற்றைக் கிழித்தது.

மாஞ்சோலை வைத்தியசாலை தொடர்ந்து அந்த இடத்தில் இயங்க முடியாததால் முள்ளிவாய்க்காலின் இன்னொரு பகுதிக்கு மாற்றப்பட்டது. அங்கே மு □ குருதி ஏற்றப்பட்டு ராசாவுக்கு சத்திர சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கிடையில் பெரியக்கா குடும்பத்தின் உதவியோடு, பார்வையற்ற சகோதரிகள் இருவரும் பிள்ளைகளையும் கூட்டிக் கொண்ட முள்ளிவாய்க்காலின் இன்னொரு பகுதிக்குப் போனார்கள். அதற்கு அருகில் தான் வைத்தியசாலையும் இருந்தது. மறுநாள் மாலை பெரிக்காவும் கடைசித் தங்கச்சியும் மூத்த மகனையும் கூட்டிக் கொண்டு வைத்தியசாலைக்குச் சென்றார்கள். அவர்களைக் கண்டதும் ராசா கவலையுடன் கூறினார்.

"நாங்க கப்பலில போகப் போறம். எப்பிடியாவது நீங்க எங்களோட வந்து சேந்திருவீங்களா?" என்று பார்வையற்ற இரண்டு மச்சாள்மாரையும் விட்டுவிட்டுச் செல்வது குறித்து மிகவும் வருந்தனார்.

"ஓ நீங்க எங்க இருந்தாலும் உங்களோட வந்து சேந்திருவம்" என்று தங்கச்சியும் சொன்னாள்.

"தம்பி! அப்பாவுக்குக் குடிக்க கொஞ்சம் தண்ணி தாடா?" என்று மகனிடம் கெஞ்சினார். ஆனால் பூரணியோ ஒரு சொட்டு நீரையும் குடிக்க விடவில்லை.

"தண்ணி தாங்க! தண்ணி தாங்க" என்று யாரைக் கண்டாலும் கெஞ்சிக் கொண்டே இருந்தார். வயிற்றில் சத்திர சிகிச்சை நடந்திருந்தால் தண்ணீர் குடிக்க வேண்டாம் என்று மருத்துவர் கூறியிருந்தார். கொடுத்தால் உயிருக்கு ஆபத்து என்று வைத்தியர் சொல்லி இருந்தால் தன் கணவனை எப்படியாவது காப்பாற்றி விடவேண்டுமென்று தான் பூரணி தண்ணீர் கொடுக்கவில்லை. அவ்வாறு நடந்துகொண்டாள். கடவுளிடம் மன்றாடியபடி, வைத்தியரின் ஆலோசனைப்படி, கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்டிருந்தாள் பூரணி. தாகத்தால் துடித்த ராசாவுக்கு தண்ணீர் கொடுக்க அவள் யாரையும் அனுமதிக்கவில்லை. மறுநாள் காலையில் பூரணி குடும்பம் கப்பலில் போக இருந்ததால் சகோதரிகள் இரவிரவாக அவர்களுக்கான உடைகளை மடித்து வைத்தார்கள். பிரிவைப் பற்றி வருந்துவதா பாதிக் குடும்பமாவது கப்பலில் போய்ச்சேரட்டும் என்று மகிழ்வதா என்று தெரியாமல் அன்றிரவு பெரும் மனப் போராட்டத்துடன் கழிந்தது.

"ஐயோ எங்களை எல்லாம் விட்டிற்றுப் போயிற்றாரே" என்ற பூரணியின் அழுகுரலோடு காலைப் பொழுது விடிந்தது. எல்லோரும் கூடி அழுதார்கள். "அப்பா! அப்பா" என்று பிள்ளைகளும் அழுதார்கள். யாருக்கு யார் ஆறுதல் சொல்வதென்றே தெரியவில்லை. எல்லோரும் வைத்தியசாலைக்குச் சென்றார்கள். அங்கே ஒரு தறப்பால் கொட்டிலுக்குள் கிடந்த சடலங்களோடு ராசாவின் கடலமும் கிடந்தது.

"தண்ணி தண்ணி எண்டு கேட்டுக் கொண்டே இருந்தார். இரவு பன்னெண்டு போல என்னப் போய்க் கொஞ்ச நேரம் படுக்கச் சொன்னார். நான் போகாம அங்கேயே நிண்டன். நான் சத்தம் போட மாட்டன். நீங்க கொஞ்ச நேரம் படுங்க எண்டு சொல்லிக் கொண்டே இருந்தார். சரி எண்டு நானும் படுப்பம் எண்டு நினைச்சன். மேசை ஒண்டில இருந்த தண்ணியை எட்டி எடுத்தாலுமெண்டு நேசிட்டக் குடுத்துப்போட்டுத்தான் போனன். கொஞ்சம் தள்ளிப்போய் நிலத்தில இருந்தன். அப்ப தான் அவர் கட்டிலால எழும்பிக் கீழ விழுந்திட்டார். சத்தம் கேட்டு ஓடிப் போக ஆள் சரி. கட்டிலில தூக்கி வளத்திப் போட்டு, நான் வெளியிலயே, விடிய விடிய இருந்தன். ஒரே ரவுண்ஸ் வந்து கொண்டே இருந்திது. நான் தப்பி வருவனெண்டே நினைக்கேல்ல" என்று நடந்தவற்றைப் பூரணி சொல்லிச் சொல்லிப் புலம்பினாள்.

"எல்லோரும் கெதியாப் போங்க கெதியாப் போங்க" என்று காவல்துறையினர் மக்களை வைத்தியசாலையில் இருந்து அப்புறப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதனால் பூரணியும் பிள்ளைகளையும் சகோதரிகளையும் கூட்டிக் கொண்டு வைத்தியசாலையிலிருந்து வெளியேறினாள். பத்து ஆண்டுகளாகக் கூடவே இருந்த கணவனைப் பறி கொடுத்துவிட்டு, நல்லடக்கங்கூடச் செய்ய முடியாதவளாய் பரிதவித்தபடி நகர்ந்தாள்.

"என்னப்பா! தள்ளாடில மன்னாரில எல்லாம் இருந்து அடிக்கிற ஆட்லறி செல், மழை போல அடம்பனச் சுத்தி விழுகுது. கன்னாட்டிக்குள்ளையும் விழத் தொடங்கீற்றுது. சின்னாக்களையும், அக்காவையும், தங்கச்சியையும் வச்சுக் கொண்டு ஒரு அவசரம் எண்டா என்ன செய்யிறது? அவங்களுக்குக் கண் தெரியிற தெண்டாப் பறவால்ல." என்று பூரணி சொன்னாள்.


"அதத்தான் நானும் யோசிக்கிறன். இவங்கள் ரெண்டு பேரும் சரியான குழப்படி. சொல்லும் கேக்க மாட்டாங்கள். என்ன செய்யிறண்டே தெரியேல்ல. சனங்கள் தங்கட தங்கட வீடுகளப் பிரிச்சுக் கொண்டு சாமான்களையும் ஏத்திக் கொண்டு வடக்கால போகுதுகள். ரோட்டு முழுக்க ஒரே சனங்களும் வாகனங்களுமாகத் தான் இருக்குது. நாங்களும் ரைக்ரர் ஒண்டப் புடிச்சு எல்லாத்தையும் ஏத்திக்கொண்டு போவம்." என்று சொல்லி கிராமத்தில் இருந்து புறப்பட்டதுதான் பூரணியின் குடும்பம். 2007 ஆவணி நடுப்பகுதியில் கன்னாட்டியிலிருந்து புறப்பட்ட ராசா குடும்பத்தின் பயணம் முள்ளிவாய்க்கால் வரை தொடர்ந்தது. 2009 மே 4 ஆம் திகதி குடும்பத் தலைவனான ராசா காயப்பட்டு 6ஆம் திகதி உயிரிழந்தார்.


ராசா சிறுவனனாக இருந்தபோது ஒரு நாள் அடம்பனைச் சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவம் ராசாவின் நான்கு சகோதரர்களையும் பெற்றோரையும் அவர்களது வீட்டுக்குள் வைத்தே சுட்டுக் கொள்றது. அந்த நேரம் ராசாவும் அவர்களோடு தான் இருந்தான். கதவு மூலைக்குள் ஒளிந்துகொண்டு நின்றதால் தப்பித்துக் கொண்டான். நீண்டகாலம் உறவுகளற்று தனியாகவே வாழ்ந்தான். குடும்பத்தில் அவன் மட்டுமே எஞ்சியது அவனது மனதை மகிழ்ச்சிப்படுத்தவில்லை. தனிமையும் தன் கண்ணெதிரே தன் பெற்றவர்களும் சகோதரர்களும் கொலை செய்யப்பட்டதும் அவனது மனதில் ஆழமான வடுவை ஏற்படுத்தியிருந்தது.

பூரணியைத் திருமணம் செய்தபின் தான் மனைவி, பிள்ளைகளென்று அவனது வாழ்வு மகிழ்ச்சியாக இருந்தது. அதுவும் பத்தே ஆண்டுகளில் முடிந்து போனது. கணவனை இழந்த பின் பூரணி எந்தவொரு நிகழ்விலும் முன்னுக்குச் செல்வதில்லை. சமூகமும் அதற்கு இடம் கொடுப்பதில்லை. திடீரென்று விளக்குச் சுடரை ஏற்றச் சொன்னதால் அவளுக்குள் திகைப்பு. ஆனாலும் இனம் புரியாத மகிழ்ச்சி.

"என்னக்கா! அப்பிடியே ஒதுங்கி நிற்கிறீங்க? ஆக்கள் வந்து கொண்டிருக்கிறாங்க. எல்லோருக்கும் பொட்டு எடுத்து வையுங்க" என்று சொன்னாள் நிகழ்வை ஒழுங்கு செய்தவள். வுந்தவர்களை எல்லாம் சிரித்த முகத்துடன் ஓடியோடி வரவேற்கத் தொடங்கினாள் பூரணி.

**நன்றி வானம்பாடி**






**இரண்டு ஜென் துறவிகள் கொட்டும் மழையில் சேறும் சகதியுமான சாலையில் போய்க்கொண்டிருந்தார்கள்.**

**நாற்சந்தி ஒன்றில் பட்டாடை அணிந்த அழகிய இளம் பெண்ணொருத்தி நின்றிருந்தாள். உடை சேறாகி விடுமென்கிற தயக்கத்தில் சாலையைக் கடக்காமல் நின்று கொண்டிருந்தாள்.**

**இதைப் பார்த்த துறவிகளில் ஒருவர், "வா பெண்ணே" என்று அவளைத் தோளில் தூக்கிக்கொண்டு போய் சாலையின் மறுபுறம் இறக்கிவிட்டார்.**

**இதை இன்னொரு துறவி வாயடைத்துப் போய் பார்த்தார்.**

**இருவரும் எதுவும் பேசாமல் நடந்தாலும் இன்னொருத்தருக்கு மனசு உறுத்திக்கொண்டே இருந்தது.**

**கோயிலருகே போனதும் அடக்க மாட்டாமல் கேட்டார்:**

**"நம் மாதிரித் துறவிகள் பெண்களைத் தொடக்கூடாது. அதிலும் அழகான இளம் பெண்ணென்றால் கிட்டே நெருங்கவே கூடாது" என்றார்.**


**"நான் அவளை அங்கேயே இறக்கிவைத்து விட்டேன். நீதான் இன்னும் சுமந்து கொண்டிருக்கிறாய்" என்றார் மற்றவர்.**

**இது ரொம்பப் பிரபலமான கதை. அடிக்கடிக் கேட்டிருப்பீர்கள்.**

**கே. பாலச்சந்தரின் ரயில் சிநேகம் சீரியலில் ஒரு ஜோக் வரும்.**

**"யாரைச் சொல்றே... எப்பவும் காட்டன் சாரி கட்டிக்கிட்டு, தலையைப் பின்னாம கட்டிக்கிட்டு, செவப்பா, ஒசரமா இருப்பாங்களே, சிரிச்சாகூட கன்னத்தில குழி விழுமே? அவங்களையா? என்னம்மா இது, பொம்பளைங்களை நிமிர்ந்து கூட நான் பார்க்கிறதில்லைன்னு உனக்குத் தெரியாதா?"**

**பெண்களோடு சாதாரணமாகப் பேசிப் பழகுறி ஆண்களை விட அவர்களிடமிருந்து விலகி இருப்பதாகக் காட்டிக்கொள்கிற ஆண்கள் மனத்தில் விகாரம் அதிகமாக இருக்கும்.**



ஜி. சரவணன்

# மனக்கோட்டம் தீர்க்கும் நூல்

உலக இலக்கியமேதை ஷேக்ஸ்பியர் நினைவைப் போற்றும் விதமாக அவரது நினைவு நாளான ஏப்ரல் 23 ஆம் நாள் உலக புத்தகதினமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது அன்றைய தினம் புதிய நூல்களின் வெளியீட்டு விழாக்கள், நூல் விமர்சனங்கள், கருத்தரங்கங்கள், நூல் வாசிப்புநிகழ்வுகள், நூல்கள் குறித்த கருத்துரைகள் என வெவ்வேறு வடிவங்களில் புத்தக தினங்கள் உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றன

உலகளவில் புத்தக தினம் அனுசரிக்கப்படுவதற்கும் நம் மண்ணின் புத்தக தினத்திற்கும் ஏராளமான வித்தியாசங்கள் உண்டு இத்தினத்தில் அனைத்துத் தரப்பினரையும் புத்தகங்களை வாசிக்க வைப்பதற்கான விழிப்புணர்வு இயக்கங்கள் தமிழகம் எங்கும் பல்வேறு பகுதிகளில் செயல்பட்டு வருவதைப் பார்க்கையில் ஒருவிஷயம் தோன்றுகிறது. ஒவ்வொரு தனிமனிதருக்கும் தன்னியல்பில் புத்தகங்கள் வாசிக்கும் பழக்கம் உருவாகாமல் இப்படியான பயிற்சியின் வாயிலாகப் புத்தகங்களைப் படிக்கவைக்க இயக்கம் நடத்த நேர்வது துரதிர்ஷடமானது இல்லையா? ஆயின் தமிழர்களுக்கு வாசிப்புப் பழக்கம் பெருமளவில் குறைந்துகொண்டே வரும் காலச் சூழலில் புத்தக வாசிப்பை முன்வைத்து தான் புத்தக தினத்தை அணுக வேண்டியிருக்கிறது. தமிழ் சூழலில் வெகுசில எழுத்தாளர்களின் நூல்கள் பிரதிகளைத் தாண்டுவதே பெரும்பாடாக உள்ளது. விதிவிலக்காகச் சில புத்தகங்கள் மறு பதிப்பு அந்தஸ்து பெற்றுத் தொடர்ந்து வெளிவருகின்றன.

மற்றமொழி நூல்கள் விற்பனையின் ஒப்பீட்டளவில் தமிழில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. உலகளவில் பதிப்புத் தரத்திலும், படைப்புத் தரத்திலும் வலுவான சாதனைக ளைக் கொண்டுள்ள போதும் தமிழ் சூழலில் பரந்துபட்ட வாசிப்பு நிகழாமல் போனதற்கான காரணம் என்ன? விற்ப னைக் குறைவாக இருப்பது எதனால்? முன்னை விடவும் நூலகங்களின் பயன்பாடு அளவு குறைந்து போன தன் பின்னணியில் உள்ள காரணி எது என்பதைச் சற்றே ஆராயலாம்.

தமிழகத்தில் 80 ளில் பல்கிப் பெருகத் தொடங்கிய ஆங்கில பள்ளிகளின் கல்வி கற்றல் முறையிலிருந்தே இந்த பின்னடைவு நிகழத் தொடங்கியது 90களில் கல்வி கற்கத் தொடங்கியவர்கள் பெரும்பாலும் ஆங்கில வழிக் கல்வியையே அதிகமாக நாடினஉ இன்றைய தலைமுறை யினர் கலை இலக்கிய அரசியல் சமூகம் என்ற பொதுத்தளங்களில் அதிகம் நாட்டமில்லாது போனதற்கான அக்கறையின்மையின் விதை அக் காலத்திலே தான் வீர்யத்தோடு விதைக்கப்பட்டது அப் பின்புலத்திலிருந்தே இந்த வாசிப்பு பின்னடைவுக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அந்நாட்களில் பள்ளிப் பாட நூல்களைத் தவிர மற்ற எதனையும் வாசிக்கவே கூடாது என்றும் வார இதழ்கள் மற்றும் மாத சஞ்சிகைகளைப் படித்தால் தண்டனை என்றும் கண்டித் தும் தண்டித்தும் வளர்க்கும் சூழ்நிலையே ஆங்கிலப் பள்ளி மற்றும் அம்மாணவர்களின் குடும்பங்களிலும் தீவிரமடையத் தொடங்கியது.

இந் நூற்றாண்டு தொடக்கத்திலிருந்து உலக மயமாக்கலின் தொடர்ச்சியாகத் திட்டமிட்டு வளர்தெடுக்கப்பட்ட வேலைக்கான கல்விகள் படித்துக் கொண்டிருக்கும் போதே வேலை படித்து முடித்தவுடன் வேலை என்ற தொழிற் கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வி முறைப்படி கடந்து மாணவர்கள் வேலையை நோக்கி விரையும் எந்திர பொம்மைகளாக மாறிக் கொண்டிருந்தனர். அவர்களின் கல்விசார்ந்த வேலைக் கனவு நூலகத்திற்கு செல்வதைத் தடுத்து கலை இலக்கியம் அரசியல் நூல்களை வாசிப்பதற்கான வாசல்களை இழுத்து மூடியது.

பள்ளி மற்றும் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களும் முழுமூச்சாக பாடங்கள் படித்து மதிப்பெண்களைக் குவிக்கும் எந்திரங்களாக மாணவர்களை மாற்றி அவர்களை ஏதாவது நிறுவனத்தின் பணியாளராக்கி அந்தப் பின்னணியில் தங்கள் கல்வி நிறுவனத்திற்குப் புதிய மாணவர்களைச் சேர்ப்பதில் முனைப்புக் காட்டினர். கலை இலக்கியச் சமூகத் தொடர்பிலிருந்து அவஉகளை முற்றிலுமாக அகற்றி வைப்பதில் இக்காலத் தலைமுறை ஆசிரியர்களுடன் கல்வி நிறுவனங்களும் கவனமாகச் செயல்பட்டன. இதன் விளைவு நமது அரசு நடத்தும் அரசு வேலைக்கான போட்டித் தேர்வுகளில் அதிகமாக வெற்றி பெற்று அரசுப் பணியில் சேர்பவர்கள் ஆங்கில வழிக்கற்றவர்களை விடவும் தமிழ் வழிக் கல்வி கற்றவர்களே அதிகம் என ஒரு புள்ளி விபரம் தெரிவிக்கிறது. தனியார் பள்ளிக் கல்லூரிகளில் பயின்றலட்சக்கணக்கான மாணவர்கள் அரசு நடத்தும் வேலை வாய்ப்புக்கான பொதுத்தேர்வுகளில் கலந்துகொள்ள இயலாதவர்களாக இருப்பதற்குப் பொது அறிவுத் துறையில் போதிய தெளிவில்லாததே காரணமாகும் அப்படி கலந்து கொள்பவர்களில் மிக சொற்பமான அளவிலேயே வேலைக்குத் தெரிவு செய்யப்படுவதாகவும் அவ்வாய்வு மேலும் தெரிவிக்கின்றது

ஆனால் இச்சூழலில் படித்து வளர்ந்தவர்கள் தொழில் நுட்பத் தறைகளில் பணியாற்றி நிறைய வருமானம் ஈட்டுபவர்களாக இருப்பதைக் கவனத்தில் கொள்வதில்லையா என்ற கேள்வி எழலாம் உண்மை தான். நிறயைப் பணம் சம்பாதிக்கும் அவர்களின் இருப்பைக் கவனத்தில் கொண்டால் ஒரு உண்மை புலப்படும். சமூகத்திற்கு முற்றிலும் தொடர்பற்று தனது சொந்தக் குடும்பத்திலிருந்தும் அந்நியப் பட்டுத்தான் தனது மனைவி குடும்பம் என்று சுருங்கி வாழ்வதோடு பெற்றோர்களை முதியோர் இல்லங்களில் கொண்டு சேர்க்கும் சுய நலவாழ் நிலைக்கான அடிப்படை மனநிலை இக்கற்றல் முறையிலருந்தே தொடங்குகிறது பொது அறிவுப் போதாமையைத் தந்த பள்ளிப் படிப்பும் சமூக மதிப்பீடுகளையும் அதன் விழுமியங்களையும் சொல்லி தராத கல்வி முறையுமே இச்சீரழிவிற்கான அடிப்படை காரணிகளாகும். இவ்விடம் தமிழ் இலக்கியத்திருந்து ஒன்றை நினைவு படுத்திக் கொள்ளல் நலம்.

மரத்தின்
கனக்கோட்டம் தீர்க்கும் நூல் அஃதேபோல் மாந்தர்
மனக் கோட்டம் தீர்க்கும் நூல் மாண்பு
என்கிறது நன்னூல் சூத்திரம்

ஒருமரத்தின் வளைவு நெளிவு கனபரிமாணத்தைக் கண்டறிவதற்கு மரவேலை செய்யும் தச்சர் பயன்பத்தும் கருவி நூல் என்பதாகும். மரத்தின் வளைவை கண்டறிந்து அதனைச் சீர்செய்வதற்கு நூலைப் பயன்படுத்துவது போல ஒரு மனிதனின் மனதில் உண்டாகும் வளைவு நெளிவுகளைக் கண்டறிந்து அம்மனநிலையை ஒழுங்குபடுத்தும் கருவியாக நூல் செயலாற்றும் என்று நன்னூல் விளக்குகிறது

இவ்வுண்மையைப் பலரும் புரிந்துகொள்ளாத காரணத்தாலேயே புத்தக வாசிப்பின் மீதான தமிழ் மக்களது நாட்டமும் குறைந்து போனதைக் கண்டுணர முடியும். ஆக மிகுந்த இழிவானதொரு பாதையில் தமிழ் சமூகம் பயணித்துக் கொண்டிருக்கும் வேளையில் புத்தகங்களின் தேவையும் ஆற்றலும் இன்றியமையாததாகின்றது.
புத்தகங்கள் ஆற்றுகின்ற செயல்களில் முக்கியமானது மனதிலுள்ள கேடுகளை அகற்றுவது இப்புவியில் நிகழும் அத்துணை தீங்குகளுக்கும் குணக்கேடுகள் தான் காரணம். அடிப்படையில் மனதில் உண்டாகும் அழுக்குகளை குறைபாடுகளைப் புத்தகங்கள் களைந்த கற்றுகின்றன தீமைகளில்லாத உலகத்திற்கு இட்டுச் செல்லும் புத்தகங்களை அனைத்துத் தரப்பினரும் வாசிப்பதற்கான சூழலை வலியுறுத்துவது அவசியமாகும் சென்ற நூற்றாண்டின் இறுதிக் காலத்திலிருந்து அச்சுப் புத்தகங்களின் காலம் முடிந்துவிட்டது என்பதானதொரு குரல் பரவலாக எழத் தொடங்கி வருகிறது.

ஆனாலும் இணையம் மற்றும் பல் வேறு ஊடகங்களில் புத்தக வடிவில் நூல்கள் வெளிவரப் பெற்றாலும் அதன் எல்லைகள் வரையறுக்கப்பட்டவை. எக்காலத்திலும் அச்சு நூல்களே வாசிப்பவவருக்கு மிகவும் அணுக்கமானவை அன்பு அறம் நேர்மைப் பண்பு சமூக அக்கறை போன்ற நற்பண்புகளைப் புத்தகங்களிடமிரு ந்தே ஒருவர் பெறமுடியும் நல்ல புத்தகங்கள் நல்ல மனித ர்களை உருவாக்கி செம்மைப்படுத்துகின்றன.

படிப்பதற்கு நேரமில்லை என்று கூறிப் புத்தகங்களைத் தட்டிக் கழிக்கும் பலரும் ஜவகர்லால் நேருவின் கூற்றை நன்கு கவனிக்க வேண்டும் பரபரப்பான பிரதமராக செயல்பட்டுக் கொண்டிருக்கும் போதே அவரிடம் உங்களால் எப்படிப் புத்தகங்களை வாசிக்க முடிகிறது? அதற்கு உங்களுக்கு நேரம் கிடைக்கிறதா? என்று கேட்ட போது அதற்கு நேரு எனக்கான புத்தக வாசிப்புக்காக நேரத்தை எனது உறக்கத்திலிருந்து திருடிக் கொள்கிறேன் என்று பதிலுரைத்தாராம்.

இந்தநேரத்தில் தான் புத்தகம் வாசிக்க வேண்டும் என்று திட்டமிட்டுக் காத்திரமால் கிடைக்கிற நேரங்களில் புத்தகம் வாசிக்கின்ற பழக்கத்தை உண்டாக்கிக் கொள்வதுடன் மற்றவர்களுக்கும் அப்பழக்கத்தைக் கைமாற்றி அவர்களையும் வாசிக்கச் செய்து தமிழ் சமுதாயம் தழைக்க முன்னெடுப்போம். அறிவை விரிவுசெய்து அகண்டமாக்க ஒவ்வொருவரும் நூல்களைப் பயில வேண்டும் பிறரையும் பழக்க வைக்க வேண்டும் அறிவிற் செறிந்த தலைமுறையை வாசிக்கும் பண்பால் வளர்தெடுக்க வேண்டும் ஏனெனில் மனிதர்களை விட ரொம்பவும் மும்மரமாகப் புத்தகங்கள் செயலாற்ற வேண்டிய காலமிது.

## குடும்பப் பெண்கள்

# கு.ப. சேது அம்மாளின் குலவதி

# எழுதும் பெண்களும் எழுதப்படும் பெண்களும் – 23

அ. இராமசாமி



1947 ஆகஸ்டு 15 விடுதலையைத் தேச விடுதலை நாள் எனக் குறிக்கின்றோம். அதற்காக நடந்த போராட்டத்திற்கு 1857 சிப்பாய் கலகத்தைத் தொடக்கமாகச் சொல்கின்றன வரலாற்று நூல்கள். இவ்விரு ஆண்டுகளுக்கும் இடையிலான 90 ஆண்டு கால இந்தியப் போராட்ட வரலாறு வெறும் தேச விடுதலைக்கான வரலாறு மட்டுமல்ல. ஐரோப்பாவிலிருந்து வந்த ஆங்கிலேயர்கள் நம்மை ஆள்கிறார்கள் அவர்கள் விரட்டப்பட வேண்டும் என்பது முதன்மை நோக்கமாக இருந்தபோதிலும் வேறு சில காரணங்களுக்காகவும் பல்வேறு போராட்டங்கள் தேசிய அளவிலும் மாநிலங்கள் அளவிலும் மாவட்டங்கள் அளவிலும் நடந்தன. போராட்டங்களின் அடையாளங்களாக நிலவியல் பிரிவுகள் மட்டுமே இருந்தன என்பதற்கும் மேலாகச் சமூகக் குழுக்களின் பிரிவுகளும் பால், இன, மொழி போன்ற அடையாளங்களும் இருந்தன.

சுதந்திரத்திற்குப் போராட்ட காலத்தில் விடுதலைக்காகப் போராடிய அரசியல் ஆளமைகளை விடவும் சமூகத்தில் நடக்கவேண்டிய மாற்றங்களுக்காகவும் பேசிய பன்முக ஆளுமைகளே இன்றளவும் நினைக்கப்படுகின்றனர், கொண்டாடப்படுகின்றனர் என்பதைக் கவனித்தால், இந்திய விடுதலைப் போராட்டத்தின் பன்முகத்தன்மை புரியலாம். இந்தியாவின் தந்தையாக விடுதலைப் போராட்டத்தின் முகமாக அறியப்படும் மோகன் தாஸ் கரம்சந்த் காந்தி, தேசவிடுதலையோடு பெண்களின் நிலையில், தீண்டத் தகாதவர்களாக அறியப்பட்ட ஒடுக்கப்பட்ட மனிதர்களின் நிலையில், முழு உடலையும் மறைப்பதற்கான ஆடைகள் இல்லாமல் காடுகளிலும் வயல்களிலும் தோட்டங்களிலும் உழைக்கும் விவசாயிகளின் நிலையில் அக்கறை கொண்டவராக இருந்தார். அந்த வகையில் அவர் சாதியமைப்புக்கெதிராக அம்பேத்கரை உள்வாங்க முயன்றார். பொதுவுடைமைக் கட்சிகளின் இடத்தைத் தனதாக்கினார். கைம்பெண் நிலை, பால்யவிவாகம், பெண்களுக்குக் கல்வி போன்றவற்றைச் சொல்லாடலாக்கிய ராஜாராம் மோகன் ராயை உள்வாங்கிக் கொண்டார்.

தேசியத்தை உள்வாங்கிப் பாடிய பாரதியிடம் கூட இந்தப் பன்முக அடையாளத்தைப் பார்க்கமுடியும். காந்தி, பாரதி போன்ற பன்முக வெளிப்பாட்டு ஆளுமைகள் தேசவிடுதலை என்னும் முதன்மையான இலக்குக்குப் பின்னர் எந்தவிதச் சிக்கலும் இல்லாமல் சாதியவேறுபாடு, மொழிப்பிரச்சினைகள், பெண்களின் விடுதலை போன்றன சாத்தியமாகி விடும் என்று நம்பினர். அந்த நம்பிக்கை பொய்த்துப் போன நிலையில்தான் ஒவ்வொரு மொழியிலும் தோன்றிய புதுவகை எழுத்துகள் தொடர்ந்து அவ்வகையான சிக்கல்களைப் பேசுவதைத் தொடர்ந்தன. பேசும் முறையில் விதம்விதமான பார்வைகளை முன்வைத்தன. இலக்கிய வகையின் வெளிப்பாட்டு நிலைக்கும் நோக்கத்திற்கும் ஏற்பப் பேச நினைத்ததைக் கவனப்படுத்தின. இந்திய விடுதலைப்போராட்ட காலத்தில் ராஜாராம் மோகன்ராய், சகோதரி நிவேதிதா போன்றவர்களால் முன்னெடுக்கப்பட்ட பெண்கள் உரிமைகள் மற்றும் விடுதலைக்கான குரல்கள் ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு விதமாக வெளிப்பட்டன. தமிழ்க்கவிதையின் அதன் ஆகப்பெரும் வெடிப்பு பாரதியின் பெண் விடுதலைக் கவிதைகள். அவரைத் தொடர்ந்து பாரதிதாசனின் பெண்ணுலகு. கவிதை வடிவம் பேச நினைப்பதை உணர்ச்சியின் வடிகாலாய்ப் பட்டென்று சொல்லி வெடித்து விடும் வடிவம். ஆனால் புனைகதை வடிவம் அப்படியானதல்ல. பேச நினைக்கும் விவாதிக்கும் உரிப்பொருளுக்குக் காலமும் வெளியும் உருவாக்கித் தர்க்கங்களை அடுக்கிக் காட்ட வேண்டிய வடிவம். அவ்வடிவம் கைவரப்பெற்ற பல ஆண்கள், வ.வே.சு. அய்யர் தொடங்கி வ.ரா, சி.என். அண்ணாதுரை, புதுமைப்பித்தன், போன்ற பலரும் பெண்களை எழுதிக்காட்டினார்கள். தங்களின் புனைகதைகளில் பெண்களை ஆண்களின் பாணியிலிருந்தும் நிலையிலிருந்தும் மாறுபட விரும்பிய பெண்கள் தன்னுணர் வுடன் பெண்களை எழுதினார்கள். அப்படி எழுதிய பெண் புனைகதையாளர்களின் முக்கியமானவர் கு.ப. சேது அம்மாள். தமிழ்ப்புனைகதை வரலாற்றில் பெண்ணெழுத்து என்ற வகைப்பாட்டை உருவாக்கிப் பேசும் ஒரு நூலில் கட்டாயம் இடம்பெற வேண்டிய பெயர் இது. நாவல்கள், திரைப்படத்திற்கு வசனம் எழுதுதல் எனச் செயல்பட்ட கு.ப.சேது அம்மாளின் சிறுகதைகள் வடிவச் செம்மையும் தூக்கலாக எதையும் முன்வைக்காமல் உரையாடல்கள் வழி நடப்பதைக் காட்டிவிட்டு ஒதுங்கிக் கொள்ளும் உத்தியையும் கொண்டவை. இந்தப் போக்கு அவரது சகோதரரான கு.ப.ராஜகோபாலனிடமும் வெளிப்படும் ஒன்று.

பெண்களை எழுதுதல் என்ற தன்னுணர்வு பெற்ற பெண்ணெழுத்தாளர்கள் வரிசையில் கு.ப.சேது அம்மாளின் குலவதி என்னும் கதையை வாசிப்பதின் வழியாக அவரது முன்வைப்புகளின் அழுத்தத்தையும் நிதானத்தையும் நாம் வாசிக்க முடியும். கதையை இரண்டு தோழிகளை அறிமுகப்படுத்தும் விதமாகக் கதையை இப்படித் தொடங்கு கிறார்: புக்ககம் போன பெண் முதல்முறையாக பிறந்தகம் வருவதை மறுவீடு என்று குறிப்பிட்டு வழங்குவது சம்பிரதாயங்களில் ஒன்று.

அந்தச் சம்பிரதாயப்படி இன்று சுந்தா பிறந்தகம் வந்திருக்கிறாள். கமலா அவளுடைய பிராண சிநேகிதை. அவளுடைய புக்கக அனுபவங்களை அறிய ஆவலுள்ளவளாய் அவளைக் காண்பதற்காக வந்தாள். இருவரும் என்ன பேசினார்கள் என்ன நடந்தது என விவரித்துவிட்டுக் கதையை ஒரு கேள்வியோடு முடிக்கிறார்

தொடரும்..



# வைரமுத்து வாத்தியார் பேசுகிறார்

அராஜகம் கூடுவது அழிவினை எட்டுவதற்குத்தான் என்று படித்திருக்கிறேன். எனவே ஒரு மனிதன் நல்ல விடயத்தில் உச்சத்தைத் தொடுவானாகில் அது அவன் பெருமையை இன்னும் உயர்வுக்கு இட்டுச் செல்லும். ஆனால் பிறர் மனம் நோவதற்காகப் பேசுபவதும், இழிவுபடுத்துவதற்காகச் சொல்வதும் அவ்வளவு நல்ல அறிகுறியாக எனக்குத் தெரியவில்லை. கெட்ட வார்த்தைகளைப் பேசும் ஒரு குழந்தையிடம் "அப்படிப் பேசாதே" என்று சொல்லிப் பாருங்கள், நல்லா வருபவன் கேட்பான். மூர்க்கத்தனமாக வருபவன் கேட்கமாட்டான்.திரும்பத் திரும்ப கெட்டதைப் பேசி கெட்ட வழி சென்று மூர்க்கனாக வளர்ந்து அழிவைத் தேடிக் கொள்வான்.

தற்போது அமைந்துள்ள புதிய அரசில் .பலர் "நாங்கள் மூர்க்கர்களாகத்தான் வருவோம்" என்று அடம் பிடிப்பதைப் போல பேசிக் கொள்கிறார்கள். உயர் கல்வி அமைச்சர் பல்கலைக் கழக நிர்வாகத்தினரை அழைத்துப் பேசும்போது அப்படித்தான் பேசினார். கல்வி அமைச்சரும் அப்படித்தான் பேசினார். இப்போது பாதுகாப்பு செயலர் யாழ்ப்பாணத்தில் வந்து இங்கிருக்கும் இராணுவ வீரர்கள் மத்தியில் பேசும் போது அதையே பேசிவிட்டுப் போயிருக்கிறார்.

ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பச் சொல்லுகின்ற போது அது உண்மை என்பது போலத் தோன்றுமாம். ஆனால் அது ஒரு தோல்வியின் வாசலில் நிற்கின்றபோது இருக்கின்ற அற்ப சொற்ப உண்மையும் பொய்த்து அழிந்து போய் விடுமாம். அதுவே இயல்பு என்கிறார்கள். ஆனால் இதையெல்லாம் காதில் வாங்கிக் கொண்டு நாம் எமது சுயத்தை இழக்காது பார்த்துக் கொள்வதுதான் முக்கியம்.

நாம் மூர்க்கர்கள் மத்தியில் இருக்கிறோம் என்பதை ஒருபோதும் மறக்கக் கூடாது.அதனூடாகப் பயணித்து வெற்றி பெறுவதென்பதுதான் எமது குறிக்கோளாக இருக்க வேண்டும்.

வாயால் பேசுவதற்குக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. எப்படியும் நாவைப் பிரட்டிப் பிரட்டிப் பேசலாம். அப்படிப் பேசுவதால் உண்மை அற்றுப் போய்விடும் என்பது அர்த்தமல்ல. அப்போது தான் உண்மை இன்னும் வலுப்படும். உண்மையை ஆதாரத்தோடு தேடுகின்ற முயற்சி மேலும் மேலும் எம்மத்தியில் வளரும்.

இதில் எனது தகப்பனார் சொல்வதுதான் எனது ஞாபகத்துக்கு வருகிறது.துட்டனைக் கண்டால் தூர விலகு என்பார். ஒருவன் துட்டன் என்று கண்டால் அவனையும், அவன் சொல்வதையும் நாம் சட்டை செய்யக் கூடாது. ஒரு பைத்தியக்காரன் தெருவிலே பேசிக் கொண்டு போகிறான். எம்மில் யாரா்வது நின்று அவன் பேச்சைக் கேட்கிறோமா? இல்லையே! அது போலவும் சில விடயங்களைக் கடந்து செல்ல வேண்டும்.

அதைப் பெரிது படுத்தாமல் விட்டோமானால் அவர்கள் நாளடைவில் சொல்வதை நிறுத்தி விடுவார்கள்.நாம் இன்னும் ஆதாரங்களை ஆவணப்படுத்தி உயர வழிபார்க்கலாம். எனது தகப்பனார் சொல்லும் இன்னும் ஒரு விடயம். அப்பத்தின் மா புளித்தால் அப்பத்துக்கு நல்லதல்ல. அதனைச் சுட்டு விற்பவனுக்குத்தான் ஆதாயம் பெருகுமாம். எனவே மா நன்றாகப் புளிக்கட்டும். சுடும் போது பார்க்கலாம்

# தூய்மையும் சுகாதாரமும், ஜப்பானின் கலாசாரப் பண்பு






ஜப்பானில் குப்பைத் தொட்டிகளோ அல்லது தெருக்களை சுத்தம் செய்யும் துப்புரவுப் பணியாளர்களோ இல்லை, ஆனால் எப்படி அவ்வளவு சுத்தமாக இருக்கிறது? அன்றைய நாளின் வகுப்புகள் முடிந்து வீட்டுக்குப் புறப்படுவதற்காக மாணவ, மாணவிகள் புத்தகப் பைகளுடன் அமர்ந்திருக்கிறார்கள். நாளைய வகுப்பு அட்டவணை பற்றி அவர்களுடைய ஆசிரியர் சில அறிவிப்புகள் செய்யும் நிலையில் அவர்கள் பொறுமையாகக் கவனிக்கின்றனர். பிறகு, மற்ற நாட்களைப் போல, ஆசிரியரின் இறுதி வார்த்தைகள் வருகின்றன: ஓ.கே. எல்லோரும் கவனியுங்கள். இன்றைய தூய்மைப் பணி பட்டியல். முதலாவது மற்றும் இரண்டாவது வரிசையினர் வகுப்பறையை சுத்தம் செய்வார்கள். மூன்று மற்றும் நான்காவது வரிசையினர் வெளியில் உள்ள வராந்தா மற்றும் படிக்கட்டுகளை சுத்தம் செய்ய வேண்டும். ஐந்தாவது வரிசையினர் கழிப்பறையை சுத்தம் செய்ய வேண்டும்.

ஐந்தாவது வரிசையில் இருந்து சில முனகல்கள் கேட்கின்றன. ஆனால் சிறுவர்கள் எழுந்து, வகுப்பறையின் பின்னால் அலுமாரியில் இருந்து துடைப்பம், துணிகள் மற்றும் பக்கெட்களை எடுத்துக் கொண்டு கழிப்பறைகளை நோக்கிச் செல்கின்றனர். நாடு முழுக்க பள்ளிக்கூடங்களில் இதே காட்சிகள் நிகழ்கின்றன. பொதுவாக ஜப்பானுக்கு முதன்முறையாக வருவோர்கள் பொது இடங்களில் குப்பைத் தொட்டிகள் இல்லாததைக் கவனிக்கிறார்கள். தெருக்களை சுத்தம் செய்யும் பணியாளர்களும் கிடையாது. எனவே அவர்களுக்குள் எழும் கேள்வி, ஜப்பான் எப்படி அவ்வளவு சுத்தமாக இருக்கிறது? என்பதுதான். குடியிருப்போர் தாங்களாகவே சுத்தம் செய்து அவ்வாறு பராமரிக்கிறார்கள் என்பதுதான் இதற்கான பதில்.

தொடக்கப் பள்ளியில் இருந்து உயர்நிலைப் பள்ளி வரையில் 12 ஆண்டு கால பள்ளிக்கூட வாழ்க்கையில், சுத்தம் செய்யும் நேரம் என்பது மாணவர்களின் அன்றாட வாழ்வின் பகுதியாகி விடுகிறது என்று ஹிரோஷிமா ப்ரிபெக்ட்சுரல் அரசு அதிகாரி மாய்கோ அவானே கூறுகிறார். வீட்டு வாழ்க்கையிலும்கூட, நமக்கான இடத்தையும் பொருட்களையும் சுத்தமாக வைத்துக் கொள்ளத் தவறுவது மோசமான பழக்கம் என்று பெற்றோர்கள் கற்பிக்கின்றனர். பள்ளிக் கல்வித் திட்டத்தில் இதுபோன்ற சமூக விழிப்புணர்வு அம்சத்தை சேர்ப்பதால், தங்கள் சுற்றுப்புறம் குறித்து குழந்தைகள் விழிப்புணர்வு பெறுவதுடன், பெருமை கொள்ளவும் முடிகிறது. சில நேரங்களில் பள்ளிக்கூடத்தை சுத்தம் செய்ய நான் விரும்பியதில்லை என்று பகுதிநேர மொழி பெயர்ப்பாளர் சிக்கா ஹயாஷி நினைவுகூருகிறார். பள்ளிக்கூடத்தை சுத்தம் செய்வது மிகவும் நல்லது என்று நான் நினைக்கிறேன். ஏனெனில் நாம் பயன்படுத்தும் பொருட்கள் மற்றும் இடங்களை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பை ஏற்க வேண்டும் என கற்றுக் கொள்வது முக்கியமானதாக உள்ளது.

பள்ளிக்கூடத்துக்கு வந்து சேர்ந்ததும் மாணவர்கள் தங்கள் சப்பாத்துகளை கழற்றி லாக்கர்களில் வைத்துவிட்டு, சாதாரண காலணிகளை அணிகின்றனர். வீடுகளிலும்கூட, தெருவில் அணிந்து வந்த காலணிகளை நுழைவாயிலில் விட்டுவிடுகின்றனர். வீட்டில் வேலை செய்யும் பணியாளர்களும் கூட, தங்கள் சப்பாத்துகளை வெளியில் விட்டுவிடுகின்றனர். பள்ளிக் குழந்தைகள் வளரும் போது, அங்கு கற்றுக் கொள்ளும் விஷயங்கள் வகுப்பறையைத் தாண்டி தாங்கள் வாழும் பகுதி, தங்கள் நகரம், தங்கள் நாடு என விரிவடைகிறது. சுத்தம் குறித்த ஜப்பானியர்களின் அக்கறையைக் காட்டும் சில உதாரணங்கள் வைரலாகி உள்ளன. ஏழே நிமிடங்களில் ஷின்கன்சென் ரயிலை சுத்தம் செய்யும் ஊழிர்கள் குறித்த வீடியோ சுற்றுலாப் பயணிகளை தனக்கே உரிய வகையில் ஈர்க்கும் அம்சமாக மாறியது.

ஜப்பானின் கால்பந்து ரசிகர்களும் கூட சுத்தம் பற்றி அக்கறை காட்டுபவர்களாக உள்ளனர். பிரேசில் (2014) மற்றும் ரஷிய (2018) உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகளின் போது, தங்கள் நாட்டு அணியின் ரசிகர்கள், ஆட்டம் முடிந்ததும் காத்திருந்து விளையாட்டு அரங்கை சுத்தம் செய்த காட்சிகள் உலகின் கவனத்தை ஈர்த்தன. விளையாட்டு வீரர்களும் கூட, தங்களின் உடை மாற்றும் அறைகளை சுத்தமாக வைத்துவிட்டு தான் வெளியேறினர். புற்கள் பசுமையாக உள்ளன. சுத்தமாகவும் உள்ளன அனைத்து அணிகளுக்கும் எப்படிப்பட்ட எடுத்துக்காட்டு இது!" என்று சர்வதேச கால்பந்து சங்கங்களின் சம்மேளனத்தின் பொது ஒருங்கிணைப்பாளர் பிரிசில் லா ஜன்ஸென்ஸ் ட்விட்டரில் இது பற்றி வியப்புடன் பதிவிட்டார். மற்றவர்களின் பார்வையில் எங்களைப் பற்றிய மரியாதை எப்படி இருக்க வேண்டும் என்பதில், ஜப்பானியர்களான நாங்கள் மிகவும் கவனமாக இருக்கிறோம் என்று மாய்கோ அவானே கூறுகிறார். போதிய கல்வி கற்காதவர்கள் என்றோ, சுத்த மாக வைத்துக் கொள்ளும் பழக்கம் கற்பிக்கப் படாத மோசமானவர்கள் என்றோ மற்றவர்கள் எங்களைப் பற்றி நினைத்துவிடக் கூடாது. ஜப்பானின் மிகப் பெரிய மற்றும் பழமை யான இசை விழாவாகக் கருதப்படும் பியூஜி ராக் இசை விழாவில், ரசிகர்கள் தங்களின் குப்பைகளை கைகளிலேயே வைத்திருந்த னர். குப்பைத் தொட்டியைப் பார்த்து அதில் போடும் வரைகைகளில் வைத்திருந்தனர். புகைபிடிப்பவர்கள், அதன் சாம்பலை போடுவதற்கு கைகளிலேயே ஆஷ்டிரே எடுத்து வருமாறு அறிவுறுத்த ப்பட்டிருந்தனர். மற்றவர்களைப் பாதிக்கும் இடங்களில் புகைபிடிக்காமல் தவிர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருந்தது என்று இசை விழாவின் இணையத்தளம் தெரிவிக்கிறது.

1969ல் பெருமளவு குப்பைகளுக்கு நடுவே நடைபெற்ற உட்ஸ்டாக் நிகழ்ச்சியில் இருந்து எந்த அளவுக்கு மாறுபட்டதாக இப்போது உள்ளது. தினசரி வாழ்விலும் கூட சமூக விழிப்புணர்வின் உதாரணங்களைக் காண முடிகிறது. உதாரணமாக, காலை 8 மணிக்கு, அலுவலக பணியாளர்களும், கடைகளின் பணியாளர்களும் தாங்கள் வேலை பார்க்கும் இடத்தைச் சுற்றியுள்ள தெருக்களை சுத்தம் செய்கின்றனர். மாதந்தோறும் தூய்மைப் பணியில் ஈடுபடும் சிறுவர்கள், தங்கள் பள்ளிக்கூடத்துக்கு அருகில் உள்ள தெருக்களில் உள்ள குப்பைகளை சேகரிக்கின்றனர். குடியிருப்போரும் அவ்வப்போது தெருக்களை சுத்தம் செய்யும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றனர். மக்கள் ஏற்கெனவே குப்பைகளை வீடுகளுக்குக் கொண்டு சென்றுவிடுகிறார்கள் என்பதால், தெருக்களில் அவ்வளவாக குப்பைகள் சேர்வதில்லை. கண்ணுக்குத் தெரியாத தூசிகள் - கிருமிகள் மற்றுழ் பாக்டீரியாக்கள் - கவலையை ஏற்படுத்தும் மற்றொரு பிரச்சினையாக உள்ளன. யாருக்காவது சளி அல்லது ஃப்ளூ பாதிப்பு ஏற்ப ட்டால், மற்றவர்களுக்கு அது பரவிடாமல் தவிர்க்க, தாங்கள் முகத்துக்கு துணி (மாஸ்க்) அணிந்து கொள்கின்றனர். மற்றவர்கள் குறித்த அக்கறையில் மேற்கொள்ளும் இந்த சாதாரண அணுகுமுறையால், வைரஸ் பரவும் வாய்ப்பு குறைகிறது. அதன் தொடர்ச்சியாக பணி நாட்கள் இழப்பு ஏற்படுவதும், மருத்துவச் செலவுகளும் குறைகின்றன. ஜப்பானியர்கள் எப்படி இந்த அளவுக்கு தூய்மையில் அக்கறை கொண்டவர்களாக மாறினர்? நிச்சயமாக இது புதியது அல்ல என்று வில்லியம் ஆடம்ஸ் என்ற கடலோடி குறிப்பிடுகிறார். 1600 களில் ஜப்பானில் பயணம் மேற்கொண்டவரவர். ஜப்பானில் காலடி வைத்த முதலாவது ஆங்கிலேயராகவும் அவரே இருந்தார். மனித் குல வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவு சுற்றுச்சூழல் அழிவு மிகுந்த கவனத்துடன் தூய்மையைப் பராமரிப்பது பெருமைக்குரிய விஷயமாக உள்ளது என்று ஆடம்ஸ் சாமுராய் வில்ஸியமின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய கிலைஸ் மில்ட்டன் குறிப்பிட்டுள்ளார். தூய்மையான தெருக்கள் மற்றும் கழிப்பறைகள் இருந்தன என்று அவர் கூறியுள்ளார். இங்கிலாந்தின் தெருக்களில் அடிக்கடி கழிவுகள் வழிந்தோடும் காலத்தில் சென்ட் வாசனையுடன் கூடிய நீராவிக் குளியல் வசதிகள் இருந்தன என்றும் அவர் எழுதியுள்ளார்.

தனிநபர் தூய்மை குறித்து ஐரோப்பியர்கள் கவலைப்படாமல் இருப்பது குறித்து ஜப்பானியர்கள் மிகவும் வருத்தமடைந்தனர் என்றும் கூறியுள்ளார். இந்த முன் யோசனையான செயல்பாடுகள் நடைமுறையில் ஏற்படும் பிரச்சினைகளால் உருவாகி இருக்கலாம். ஜப்பான் போன்ற வெப்பமான, ஈரப்பதம் மிக்க சூழ்நிலையில், உணவு சீக்கிரம் அதன் இயல்பு தன்மையை இழந்து விடுகிறது. பாக்டீரியரக்கள் உருவாகி விடுகின்றன, சிறு பூச்சிகள் உருவாகின்றன.

எனவே, நல்ல தூய் மை என்பது நல்ல ஆரோக்கியம். ஆனால், அதைவிட ஆழமாக இது செல்கிறது. சீனா மற்றும் கொரியாவில் இருந்து 6 மற்றும் 8ம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் வந்த புத்த மதத்தின் மையக் கருத்தாக தூய் மை விஷயம் இருக்கிறது. உண்மையில், 12 மற்றும் 13வது நூற்றாண்டுகளுக்கு இடைப் பட்ட காலத்தில் ஜப்பானுக்கு வந்த ஜென் புத்த மதத்தில் சுத்தம் செய்வது மற்றும் சமையல் செய்யும் தினசரி பணிகள் ஆன்மிகப் பயிற்சிகளின் அங்கமாகக் கருதப்படுகின்றன. இவை தியானத்தில் இருந்து மாறுபட்டவை அல்ல என்று குறிப்பிடப்படுகிறது. ஜென் தத்துவத்தைப் பொருத்த வரையில், சாப்பிடுவது மற்றும் நமது இடத்தை சுத்தம் செய்வது போன்ற அன்றாட செயல்பாடுகளும் புத்தமதப் பயிற்சிக்கான வாய்ப்புகளாகக் கருதப்பட வேண்டும் என்று புகுயமாவில் உள்ள ஷின்ஷோஜி ஆலயத்தின் நிர்வாகி எரிக்கோ குவகாக்கி கூறுகிறார்.

தினசரி வாழ்வில் உடல் ரீதியிலும், ஆன்மிக ரீதியிலும் அழுக்கை சுத்தம் செய்வது முக்கிய பணிகளாகக் கருதப்படுகின்றன. இருந்தாலும் அனைத்து பௌத்த நாடுகளிலும் ஜப்பான் போன்ற தூய்மை இல்லாதது ஏன்? நல்லது. புத்த மதம் வருவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னதாகவே, ஜப்பானில் - ஷின்டோ - என்ற மதம் இருந்தது (ஷின்டோ என்றால் கடவுள்களின் வழி என்று பொருள்). ஷின்டோவின் முக்கிய விஷயமாக தூய்மை கருதப்படுகிறது. ஜப்பானியர்கள் ஏற்கெனவே கடைபிடித்து வந்த பழக்கத்தை மேலும் வலியுறுத்துவதாக பௌத்தம் அமைந்தது. ஷின்

▶


டோவின் முக்கியமான கோட்பாடு கெகாரே (தூய்மையின்மை அல்லது அழுக்கு) என்பதாக, தூய்மைக்கு எதிரானதாக இருந்தது. மரணம் மற்றும் நோய் என்பதில் தொடங்கி, ஏற்பில்லாத அனைத்து விஷயங்களும் தூய்மையற்றவை என கருதப்பட்டன. தூய்மையின்மையை விட்டுவதற்கு, அடிக்கடி தூய்மை சடங்குகள் அவசியமானதாக உள்ளது. தனி நபர் ஒருவர் தூய்மையின்மையால் பாதிக்கப்பட்டால், அது ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று ஹிரோஷிமாவின் கன்டா வழிபாட்டுத் தலத்தில் உதவி ஷின்டோ மதகுருவான நோரியக்கி இகேடா கூறுகிறார்.

ஷிண்டோ புனித தளத்திற்குள் வருவதற்கு முன் நுழைவு வாயிலில் வைத்துள்ள தண் ணீரில் தங்களின் வாயையும் கையையும் சுத்தம் செய்து கொள்கின்றனர் எனவே, தூய்மையை கடைபிடிப்பது முக்கியமானது. அது உங்களை தூய்மைப்படுத்துகிறது. சமூகத் திற்கு பெரிய பாதிப்பு ஏற்படாமல் தடுக்க உதவு கிறது. அதனால்தான் ஜப்பான் மிகவும் சுத்தமான நாடாக இருக்கிறது. தொற்று நோய்களைப் பொறுத்த வரையில், மற்றவர் களைப் பற்றிய இந்த அக்கறை, புரிந்து கொள் ளக் கூடியதாக உள்ளது. ஆனால் குப்பை களை பொறுக்குவது போன்ற சாதாரண விஷ யங்களிலும் இதே நிலை கடைபிடிக்கப்படு கிறது.


தூய்மைப்படுத்தும் சடங்குகள் அன்றாட வாழ்வின் அங்கமாக இருக்கின்றன. ஷின் டோ வழிபாட்டுத் தலத்திற்குள் நுழைவதற்கு முன், நுழைவாயிலில் உள்ள கல்லால் ஆன தொட்டியில் அனைவரும் கைகள் மற்றும் வாயை சுத்தம் செய்து கொள்கின்றனர். பல ஜப்பானியர்கள் தங்களின் புதிய கார்களை வழிபாட்டுத் தலத்திற்கு எடுத்துச் செல்கின்ற னர். அங்குள்ள மதகுரு இறகு போன்ற பொருளை, ஒனுசா என அவர்கள் குறிப்பிடும் பொருளை காரை சுற்றிலும் அசைத்து தூய் மை செய்கிறார். பிறகு காரின் கதவுகள், என்ஜின் பகுதி மற்றும் பின் பகுதியைத் திறந்து உள்பகுதிகளையும் தூய்மைப்படுத்து கிறார். பக்தர்களுக்கு இரு புறத்திலும் ஒனுசாவை அசைத்து அவர்களையும் மத குரு தூய்மைப்படுத்துகிறார்.

நீங்கள் ஜப்பானில் வாழ்பவராக இருந்தால், சுத்தமான வாழ்க்கை முறைக்கு சீக்கிரமாக நீங்கள் மாறிவிடுவீர்கள். பொது இடங்களில் மூக்கு சிந்துவதை நிறுத்திவிடுவீர்கள். கடை கள் மற்றும் அலுவலகங்களில் வைக்கப்பட்டி ருக்கும் சானிட்டைசர்களைப் பயன்படுத்துவீ ர்கள். வீட்டில் சேரும் குப்பைகளை மறுசுழ ற்சி செய்ய வசதியாக 10 வகையான குப்பைக ளாகப் பிரிப்பதற்கு கற்றுக் கொள்வீர்கள். 1600களில் ஜப்பானுக்கு வந்த வில்லியம் ஆடம்ஸ் மற்றும் அவருடைய குழுவினரைப் போல நீங்களும், வாழ்க்கைத் தரம் உயர் வதைக் காண்பீர்கள். நீங்கள் தாயகம் திரும் பும் போது, பொது இடத்தில் தும்முவோர் மற் றும் இருமுவோர், அழுக்கான சப்பாத்துக்க ளை வீட்டுக்குள் அணிந்து வருபவர்கள் காட் டுமிராண்டிகளாகத் தெரிவார்கள். அதைப் பார்த்து அதிர்ச்சி அடைவீர்கள். இவையெல் லாம் ஜப்பானில் நினைத்துப் பார்க்க முடியா தவை. ஆனால், இன்னும் நம்பிக்கை உள் ளது. போக்மன், சுஷி மற்றும் காமிரா செல் போன்கள் உலகெங்கும் தடம் பதிக்க சிறிது கால அவகாசம் தேவைப்பட்டது தானே!

நன்றி : பீ.பீ.சி




# எழுதுவது என்பது விரலால் சிந்திப்பது




கிட்டத்தட்ட அறுபதாண்டு எழுத்துப் பயணம் அதில் முதல் நாற்பதாண்டுகளில் சராசரியாக பத்து நாட்களுக்கு ஒரு முறை அவர் ஒரு படைப்பை பதிப்பாளருக்கு விற்றார். அடுத்த இருபதாண்டுகளில் சராசரியாக ஆறு நாட்களுக்கு ஒரு முறை ஒரு படைப்பை விற்றார் அதேபோல அந்த முதல் அறுபதாண்டுகளில் சராசரியாக நாளொன்றுக்கு அவரது 1000 வார்த்தைகள் பிரசுரமாயின. அடுத்த இருபதாண்டுகளில் சராசரியாகத் தினமும் பிரசுரமான வார்த்தைகளின் எண்ணிக்கை 1700 ஆனது. தான் வாழ்நாள் முழுவதும் எழுதிக் குவித்த உலகின் தலைசிறந்த அறிவியல் எழுத்தாளர் ஐசக் அசிமோவ் தனது வாழ்க்கை வரலாற்று நினைவுகளில் (எ மெமோறி - ஐசக் அசிமோவ்) குறிப்பிடும் தகவல்தான் இது. 1990 மேமாதம் 30ம் தேதிதன் வாழ்க்கை வரலாற்றை எழுதி முடித்த அன்று அவர் தன் டைரியில் "ஆரம்பித்த 125வது நாளில் வாழ்க்கை வரலாற்றை எழுதி முடித்துவிட்டேன். வேறு வேலைகளும் பார்த்துக் கொண்டே 125 நாட்களில் 235000 வார்த்தைகளில் சுயசரிதையை எல்லோராலும் எழுதிவிட முடியாது" என்று மிகக் கர்வத்தோடு குறிப்பிட்டார்.

ரஸ்யாவில் 1920ல் பிறந்து. 1923ல் அமெரிக்காவில் பெற்றோர் குடியேறியதால் அமெரிக்கா பிரஜையானார். அப்பா சிறிய பெட்டிக்கடை வைத்திருந்தார். அசிமோவ் தம் கடையில் தொங்கும் பத்திரிகைகள் மாத நாவல்களைப் பார்த்து பள்ளி செல்வதற்கு முன்பே எழுதப் படிக்கக் கற்றுக்கொண்ட குழந்தை மேதை . பின்னல் உதவித் தொகைகளில் படித்து இயற்பியலில் முனைவர் பட்டம் பெற்றவர். தாம் சிறுவயதிலே எழுதப்படிக்கக் கற்றுக்கொண்ட பத்திரிகைகளுக்கு எழுத ஆரம்பித்து உலகின் மாபெரும் விஞ்ஞான எழுத்தாளராக உயர்ந்தவர். அபாரமான நினைவாற்றல் அதோடு எல்லாவற்றையும் டைரியில் குறித்து வைக்கும் பழக்கமும் உள்ளவர் என்பதோடு இயல்பிலேயே திறமையான எழுத்தாளர் என்பதால் அவரது சுயசரிதை மிகநேர்த்தியாக மிக சுவாரஸ்யமாக எழுதப்பட்டிருக்கிறது. பல இடங்களில் பழைய சம்பவங்களை எழுதிவிட்டு சரிதானா என்று டையரியைப் பார்த்தால் ஏதோ டையரியைப் பார்த்துத் தான் எழுதியது போல பெயர்கள் தேதிகள் சம்பவங்கள் எல்லாம் அத்துணை துல்லியமாக இருக்குமாம். அவரே அதையும் மிகவும் பெருமையாக ஓர் இடத்தில் சொல்கிறார். எழுத்தாளனின் கதை என்பதால் அவர் எப்படி எழுதினார் என்பதோடு அவர் பேராசிரியராகப் பணியாற்றிய ஒரு முனைவர் என்பதால் சுயசரிதை நெடுக எப்படி எழுத வேண்டும் என்ற வழிகாட்டுதல்கள் வந்து கொண்டே இருப்பது இன்றைய புதியதலைமுறை எழுத்தாளர்களுக்குக் கிடைத்துள்ளமிகப் பெரியகொடை. எந்த வகைமை எழுத்தாளனும் எழுத்திற்காக மிகக் கடுமையாக உழைக்க வேண்டும் என்ற அசைக்க முடியாத கொள்ளையை உறுதிப்படுத்துகின்றது. இதயத்தில் மூன்று இடங்களில் அடைப்பு என்று பைபாஸ் செய்கிறார்கள் சிறுநீரகம் வேறுகோளாறு பைபாஸ் முடிந்து மருத்துவமனையில் இருக்கிறார். அங்கும் வழக்கமாக தான் எழும் நேரத்திற்கு அதிகாலை 5 மணிக்கு எழுந்திருக்கிறார். எட்டு மணிக்குக் காலை உணவு வரும் வரை எழுதுகிறார் அரத்த அழுத்தம் (பிபி) பார்க்க, ரத்தம் எடுக்க மாத்திரை தர எப்படி இருக்றீங்க என்று கேட்க அவ்வப் போது நர்ஸ்கள் வரும் நேரம் தவிர உறவினஉகள் நண்பர்கள் பார்க்க வரும் நேரம் தவிர மற்ற நேரங்களில் சத்தமில்லாமல் எழுதிக் கொண்டே இருக்கிறார்.

நாலைந்து நாட்களில் பெரிய தாளில் 250 பக்கங்களுக்கு மேல் எழுதிவிடுகிறார் ஒரு முறை பார்பராவால்டர்ஸ் என்ற நிருபர் அவரிடம் நீங்கள் இன்னும் ஆறு மாதங்கள் தான் உயிரோடு இருப்பீர்கள் என்று மருத்துவர் சொன்னால் என்ன செய்வீர்கள் என்று கேட்டாராம். அசிமோவ் நான் வேகமாக டைப் அடிப்பேன் என்றாராம். நிஜமாகவே வேகமாக அதை மருத்துவமனையில் செய்தும் விட்டாராம். இன்றைய எழுத்தாளர்கள் அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டிய மிகப் பெரியபாடம் இது எதை எழுதச் சொன்னாலும் அதில் மூழ்கிப் போய்விடுவார் அசிமோவ் ஒரு முறை அவரது பதிப்பாளர் 250 விஞ்ஞானிகளின் சுருக்கமான வாழ்க்கை வரலாற்றை எழுதித் தரச் சொன்னார். அசிமோவ் எழுத எழுத அது வளர்ந்து கொண்டே போனது கடைசியில் பார்த்தால் 1000 விஞ்ஞானிகளின் வாழ்க்கை பற்றியும் அதுவும் விரிவாகவே எழுதி முடித்திருந்தார். அதற்காக அவர் வளவளவென்று வார்த்தை ஜாலம் செய்து எழுது பவர் என்று நினைத்து விடவேண்டாம் தேவையற்ற வார்த்தைகள் இல்லாத நேரடியாக எழுதும் அபூர்வமான படைப்பாளி அவர் அதை அவர் கற்றுக் கொண்ட விதமும் மிகச் சுவையானது. ஆரம்பத்தில் அவரும் தேவையற்ற வர்ணனைகளுடன் வார்த்தை ஜாலம் செய்தவர் தானாம் ஆரம்ப காலத்தில் இவரது நாவல் ஒன்றைப் படித்த பிரட் என்ற அவரது பதிப்பாளர் சூரியன் மறுநாள் உதித்தான் என்பதை ஹெமிங்வே எப்படி எழுதுவார் தெரியுமா என்று கேட்டாராம், இவர் ஹெமிங்வே படித்ததில்லை தெரியவில்லையே என்றாராம் பிராட் சூரியன் மறு நாள் உதித்தான் என்று மட்டுமே ஹெமிங்வே எழுதுவார் என்றாராம்.

எழுதுவது பற்றி மிகப் பெரிய பாடத்தை பிராட் எனக்கு 10 நொடியில் கற்றுதந்தார் என்கிறார் அசிமோவ் பின்னாளில் புகழ் பெற்ற எழுத்தாளரான பிறகு வார்த்தை ஜாலங்கள் செய்து எழுதுவதை பற்றி மிகவும் விளக்கமாகக் கூறினாஉ அசிமோவ் வாஉத்தை ஜால எழுத்து டிசைன் போட்ட கலஉ கண்ணாடி ஜன்னல் (Stained Glass Window) போன்றது அழகாக இருக்கும் ஆனால் அதன் வழியே வெளி உலகைப் பாஉகக முடியாது வார்த்தை ஜால மற்ற நேரடி எழுத்து சாதா கண்ணாடி ஜன்னல் போன்றது உள்ளே இருப்பதை வெளியில் இருந்தும் வெளியில் இருப்பதை உள்ளே இருந்தும் பார்க்க முடியும் என்று விளக்கினார்.

தனது 11வது வயதிலிருந்து எழுத ஆரம்பித்த அவர் தன்னை எழுதத் தூண்டியவை எளிய பாக்கெட் நாவல்கள் தான் என்கிறார். எழுத ஆசைப்படுபவர்கள் வெகுஜன எழுத்தைப் புறக்கணிக்கக் கூடாது என்கிறார் அதேபோல எனக்கு நான்கு மணிநேரமாவது தனியாக இருக்கும் வாய்ப்பு இருந்தால் தான் எழுதமுடியும் என்று சொல்லும் எழுத்தாளர்களை கேலி செய்கிறார் எனக்கு வேறுவேலை எதுவுமின்றி பதினைந்து நிமிடங்கள் கிடைத்தால் சட்டென்று ஓரிரு பக்கங்கள் எழுதிவிடுவேன் என்கிறார். எழுத ஆரம்பிப்பதற்கு முன் என்ன எழுத வேண்டும் என்பது போல் மனதிற்குள் ஒரு கோர்வையை உருவாக்கிக் கொள்ள வேண்டாமா என்று கேட்டால் குளிப்பது சாப்பிடுவது மாதிரியான வேலைகளைச் செய்யும் போது அதெல்லாம் முடிவு செய்து வைத்துவிடுவேன் என்கிறார்.

தனிப்பட்ட முறையில் அசிமோவ் ஒரு நாத்திகர் விஞ்ஞானத்தின் மீதுமட்டுமே நம்பிக்கை வைத்தவர் பொதுவாக விஞ்ஞானப் புனைவுகள் எழுதபவர்கள் விஞ்ஞான வளர்ச்சியால் ஏற்படும் சீரழிவுகளை எழுதியபோது விஞ்ஞானத்தின் வெற்றியைக் கொண்டாடி எழுதியவர் அசிமோவ் எழுதுவது என்பது என் விரல்களால் சிந்திப்பது என்கிறார். அவரது சுயசரிதையைப் படிக்கும் எவருக்கும் விரலால் சிந்திக்கும் ஆசை வந்துவிடும் என்பது உறுதி.




# மலையகக் குறிப்புகள்

2019.12.10 செவ்வாய் கிழமை 2020 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கையை சமர்ப்பிக்கும் பிரேரணையை நுவரெலியா பிரதேச சபை தலைவர் வேலு யோகராஜ் அவர்களினால் முன்வைக்கப்பட்டது. இவ்வரவு செலவு திட்டம் மிக சிறந்த முறையில் துரிதமாக ஆராயப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளதென சபையில் கருத்து தெரிவிக்கப்பட்டது. இவ்வரவு செலவு திட்டம் தோட்ட மக்களின் நலன் கருதி அவர்களுக்கான அபிவிருத்தி பணிகளுக்கு கூடிய தொகை நிதி வரவேற்கப்பட்டது. அதன் பின் சபையில் 23 உறுப்பினர்களில் ஒருவர் சுகயீனம் காரணமாக சமூகமளிக்காத பட்சத்தில் ஏனைய உறுப்பினர்களில் 20 உறுப்பினர்களால் ஏகமனதாக வரவு செலவு திட்டம் நிறைவேற்றப்பட்டது.





★ ★ ★

அரசியல் நோக்கு மற்றும் கட்சிகளை தாண்டி மலையக மாணவ மணிகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அனைத்து கட்சி தலைவர்களும் அனைத்து அரசியல்வாதிகளும் ஒன்றிணைவதற்கான அழைப்பானது கௌரவ அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் உயரிய எண்ணத்தை பிரதிபலிக்கிறது எனலாம்.

எவ்வித அரசியல் நோக்கமுமின்றி கொடுத்த வாக்கை செவ்வனே நிறைவேற்றுவதே கௌரவ அமைச்சரின் நோக்கம் என மதிப்புக்குரிய முன்னாள் இராஜாங்க அமைச்சர் பி.பி. தேவராஜ் அவர்களின் கருத்தின் மூலம் நன்றாக புலப்படுகின்றது.

மலையகத்திற்கான பல்கலை கழகம் சாத்தியப்படுமா என கேட்ட போது அவர் அந்த பொறுப்பு அளிக்கப்பட்டது எனக்கு மகிழ்ச்சியை தருவதாகவும், மலையக பகுதிகளில் பாடசாலைகள், கல்வியற் கல்லூரிகள் என்பன காணப்படுவதால் மலையகத்திற்கான பல்கலைகழகமும் சத்தியப்படும் என தெரிவித்தார்.

★ ★ ★

தலவாக்கலை பார்மாவின் அலமப்பின் முதலாம் வருட பூர்த்தியை முன்னிட்டு 08.12.2019 அன்று இடம்பெற்ற கௌரவிப்பு விழாவில் கலந்து கொண்டார். மலையக மக்கள் முன் ன ணியின் பிரதி செயலாளர் நாயகமும் சட்டத்தரணியுமான அனுஷா சந்திரசேகரன்

தலவாக்கலை பார்மாவின் அமைப்பின் முதலாம் வருட பூர்த்தியை முன்னிட்டு 08.12.2019 அன்று இடம்பெற்ற கௌரவிப்பு விழாவில் கலந்து கொண்டார். மலையக மக்கள் முன்னணியின் பிரதி செயலாளர் நாயகமும் சட்டத்தரணியுமான அனுஷா சந்திரசேகரன்.

மேலும் இவ்வமைப்பானது மலையக முன்னேற்றத்தை மையமாகக் கொண்டு மலையக இளைஞர்களால் மலையகத்தில் சிறந்த பிரஜைகளை உருவாக்கும் முகமாக ஸ்தாபிக்கப்பட்டு செயற்பட்டுவரும் ஒரு அமைப்பாகும். இதன் மூலம் மலையகத்தின் கலை, கலாச்சார, விளையாட்டு சமய ரீதியிலான வளர்ச்சிக்கு தங்களது பங்களிப்பை வழங்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

இவ்வாறான இளைஞர்களை கௌரவப்படுத்த எனக்கொரு வாய்ப்பை ஏற்படுத்தியமைக்கு நன்றிகளும், உங்கள் பணி தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்களும், எம் சமூகத்தின் ஆரோக்கியமான மாற்றத்திற்காக தொடர்ந்தும் இணைந்து பயணிப்போம் எனவும் அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.














★ ★ ★

கினிகதேன எபடின் நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்காக சென்ற ஒருவர் இறந்துள்ளார் என கினிகதேன பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு குளிக்க சென்று இறந்தவர் பலாங்கொட அங்கரெல்ல பகுதியில் வசிக்கும் 20 வயதுடைய இளைஞர் மகேஸ் என்பவராவர். இறந்த நபர் கினிகதேன பிரதேசத்தில் உள்ள அவர்களது உறவினர் இல்லத்திற்கு வந்திருந்த போது அவர்களது நண்பர்கள் மூவருடன் எபடின் நீர்வீழ்ச்சியில் குளிக்க சென்ற போது அங்கிருந்த கற்கள் மீது சென்ற போது வழுக்கி விழுந்து இறந்ததாக கினிகத்தேன பொலிஸார் கூறினர்.

இறந்த இளைஞரின் சடலம் கினிகதேன வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பிரேத பரிசோதனை மேற்கொள்ளபட உள்ளது. மேலதிக விசாரணையை பொலிஸார் தொடர்கின்றனர்.



★ ★ ★

## உனக்கு நீ மட்டுமே உறவு !

அன்பை கேட்டு வாங்காதீர்கள் !
அக்கறையை சொல்லி பெறாதீர்கள் !
காதலை பிச்சை எடுக்காதீர்கள் !
இவை எல்லாம் கிடைக்காத
இடத்தில் இருக்காதீர்கள் !
திமிர் கொள்ளுங்கள் !
தனிமையில் நிறையுங்கள் !
திறமையை செதுக்குங்கள்!
தன்னம்பிக்கை வளருங்கள் !
யார் இல்லாவிட்டாலும் பூமி சுற்றும் !
உன் விதி உள்ள வரை
பயணம் கிட்டும் !
மரணம் வரை வருபவர்கள்
யாரும் இல்லை இவ்வுலகில் !
உனக்கு நீ மட்டுமே உறவு !

# கிரக நிலையும் இராசி பலனும் இந்த வாரம்

## டிசம்பர் 15 முதல் 21 வரை (கார்த்திகை 29 முதல் 05 வரை)



கணித்தவர்
ஜோதிட மாமணி,
முனைவர் முருகு பாலமுருகன்
Dip in astro, B.L, M.A.astro. PhD in Astrology.
No: 19/33 வடபழனி ஆண்டவர் கோயில் தெரு,
தபால் பெட்டி எண் - 2255. வடபழனி,
சென்னை - 600 026 தமிழ்நாடு. இந்தியா.
cell: 0091 7200163001, 9383763001.

**கிரக மாற்றம்**

**15-12-2019 மகரத்தில் சுக்கிரன் மாலை 05.58 மணிக்கு**
**16-12-2019 தனுசில் சூரியன் மாலை 03.28 மணிக்கு**

**இவ்வார சந்திரன் சஞ்சரிக்கும் ராசிகள்**

- **கடகம் 14-12-2019 இரவு 11.15 மணி முதல் 17-12-2019 அதிகாலை 02.45 மணி வரை.**
- **சிம்மம் 17-12-2019 அதிகாலை 02.45 மணி முதல் 19-12-2019 அதிகாலை 05.40 மணி வரை.12-2019 மாலை**
- **கன்னி 19-12-2019 அதிகாலை 05.40 மணி முதல் 21-12-2019 காலை 08.25 மணி வரை.**
- **துலாம் 21-12-2019 காலை 08.25 மணி முதல் 23-12-2019 பகல் 11.50 மணி வரை.**

**இவ்வார சுப முகூர்த்த நாட்கள்**

**15.12.2019 கார்த்திகை 29 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை சதுர்த்தி திதி பூசம் நட்சத்திரம் சித்த யோகம் காலை 09.00 மணி முதல் 10.30 மணிக்குள் மகர இலக்கினம். தேய்பிறை**

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| | திருக்கணித கிரக நிலை | | சந்திரன் |
| | | | |
| சனி கேது குரு சுக்கி | சூரியன் புதன் | செவ்வாய் | |



**மேஷம்**

**மேஷம், அசுவனி, பரணி, கிருத்திகை 1ஆம் பாதம்.**

நல்ல வாக்கு சாதுர்யமும், சிறந்த அறிவாற்றலும் கொண்ட மேஷ ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 9-ல் குரு, கேது, 10-ல் சுக்கிரன் சஞ்சரிக்க இருப்பதாலும் வரும் 16-ஆம் தேதி முதல் சூரியன் 9-ல் சஞ்சரிக்க உள்ளதாலும் சகல விதத்திலும் அனுகூலமான பலன்களை அடைவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் செலுத்துவது நல்லது. திருமண சுபகாரிய முயற்சிகளில் முன்னேற்றம் உண்டாகும். தேவையற்ற பயணங்களை தவிர்த்து விடுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதிர்பார்க்கும் உயர்வுகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் அமையும். உயரதிகாரிகளின் ஆதரவுகள் மகிழ்ச்சியை அளிக்கும். பெரிய தொகைகளை எளிதில் ஈடுபடுத்த முடியும். மாணவர்களுக்கு கல்வியில் மந்த நிலை உண்டாக கூடும் என்பதால் அதிக கவனம் எடுத்து கொள்வது நல்லது.

**வெற்றி தரும் நாட்கள் -19, 20, 21.**



**ரிஷபம்**

**ரிஷபம், கிருத்திகை 2,3,4 ஆம் பாதங்கள் ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ஆம் பாதங்கள்.**

சாமர்த்தியமாகவும், வேடிக்கையாகவும், பேசும் ஆற்றல் உடையவர்களாக விளங்கும் ரிஷப ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 6ல் செவ்வாய், 7ல் புதன் சஞ்சரிப்பது சற்று சாதகமான அமைப்பு என்றாலும் மாத கோளான சூரியன் வரும் 16ஆம் தேதி முதல் 8ல் குரு, சனி சேர்க்கைப் பெற்று சஞ்சரிப்பதால் நீங்கள் எதிலும் கவனத்துடன் இருப்பது நல்லது. அசையும் அசையா சொத்துக்களால் அனுகூலம் உண்டாகும். கொடுக்கல்- வாங்கலில் கவனம் தேவை. உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்பாராத இடமாற்றம் ஏற்பட்டு சற்றே அலைச்சல்கள் ஏற்படும். பிறர் செய்யும் தவறுகளுக்கு பொறுப்பேற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பதால் பணியில் கவனமுடன் செயல்படுவது நல்லது. தொழில் வியாபாரம் செய்பவர்கள் போட்டிகளை சமாளித்தே ஏற்றம் பெற முடியும். மாணவர்கள் கல்வியில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது.

**வெற்றி தரும் நாட்கள் - 15, 16, 21.**



**மிதுனம்**

**மிதுனம் மிருகசீரிஷம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்.**

நிதானமான அறிவாற்றல் இருந்தாலும் சமயத்திற்கு ஏற்றார் போல குணத்தை மாற்றிக் கொள்ளும் மிதுன ராசி நேயர்களே. உங்களுக்கு குருபார்வை ஜென்ம ராசிக்கு இருப்பதால் பொருளாதார நிலை மிக மிகச் சிறப்பாக இருக்கும். மாத கோளான சூரியன் 16ஆம் தேதி முதல் 7ல் கேது, சனி சேர்க்கைப் பெற்று சஞ்சரிப்பதால் குடும்ப வாழ்வில் கணவன்- மனைவியிடையே கருத்து வேறுபாடு ஏற்படலாம் என்பதால் எதிலும் பொறுமையுடன் செயல்படுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதிர்பார்க்கும் உயர்வுகள் கிடைக்க சற்று தாமத நிலை உண்டாகும். புதிய வேலை தேடுபவர்கள் கிடைப்பதை தற்சமயம் பயன்படுத்தி கொள்வது உத்தமம். தேவையற்ற பயணங்களை தவிர்த்து விடுவது உத்தமம். மாணவர்கள் எதிலும் சற்று கவனமுடன் இருப்பது நல்லது.

**வெற்றி தரும் நாட்கள் - 17, 18.**



**கடகம்**

**கடகம் புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.**

சுறுசுறுப்பாக செயல்பட்டு எதையும் திறமையுடன் செய்து முடிக்கும் ஆற்றல் கொண்ட கடக ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு ருணரோக ஸ்தானமான 6-ல் மாத கோளான சூரியன் வரும் 16-ஆம் தேதி முதல் சனி, கேது சேர்க்கைப் பெற்று சஞ்சரிப்பதால் நீங்கள் நினைத்ததெல்லாம் நடக்ககூடிய இனிய வாரமாக இவ்வாரம் இருக்கும். கொடுக்கல்- வாங்கலில் சரளமான நில்ல இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்-கு வேலைபளு குறையும். சிலருக்கு வெளிநாடுகளில் பணிபுரியும் வாய்ப்பு அமையும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை நீங்கி புதிய வாய்ப்புகள் கிடைக்கப் பெற்று லாபம் பெருகும். கடன்களும் சற்று குறையும். பயணங்களால் அனுகூலங்கள் உண்டாகும். மாணவர்கள் எதிர்பார்த்த மதிப்பெண்ணை பெற கடின உழைப்பு தேவை.

**வெற்றி தரும் நாட்கள் - 15, 16, 19, 20.**



**சிம்மம்**

**சிம்மம் மகம், பூரம். உத்திரம் 1 ஆம் பாதம்.**

சூது வாது இல்லாமல் அனைவரையும் எளிதில் நம்பிவிடும் குணம் கொண்ட சிம்ம ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 3-ல் செவ்வாய், 4-ல் புதன், 5-ல் குரு சஞ்சரிப்பது சகல விதத்திலும் அனுகூலத்தை தரும் அமைப்பாகும். எடுக்கும் முயற்சியில் வெற்றி, குடும்பத்தில் மங்களகரமான சுபகாரியங்கள் கைகூடக்கூடிய யோகம் உண்டாகும். கடன்களும் சற்று நிவர்த்தியாகும். கொடுக்கல்- வாங்கல் போன்றவற்றில் பெரிய தொகைகளை எளிதில் ஈடுபடுத்தி லாபம் காண முடியும். தொழில் வியாபாரம் செய்பவர்களுக்கு கூட்டாளிகளும் தொழிலாளர்களும் ஆதரவாக நடந்து கொள்வார்கள். நல்ல வாய்ப்புகள் கிடைக்கப் பெறுவதால் அபிவிருத்தியும் ஓரளவுக்கு பெருகும். உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்த்த உயர்வுகளைப் பெறமுடியும். மாணவர்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

**வெற்றி தரும் நாட்கள் - 17, 18, 21.**



**கன்னி**

**கன்னி உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்.**

சூழ்நிலைக்கு தக்கவாறு தங்களை மாற்றி அமைத்துக் கொள்ளும் குணம் கொண்ட கன்னி ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 2ல் செவ்வாய், மாத கோளான சூரியன் வரும் 16ஆம் தேதி முதல் 4ல் சனி, கேது சேர்க்கைப் பெற்று சஞ்சரிப்பதால் தேவையற்ற அலைச்சல், இருப்பதை அனுபவிக்க இடையூறு உண்டாகும். பண வரவில் நெருக்கடி, குடும்பத்தில் சிறு சிறு நிம்மதி குறைவுகள் ஏற்படலாம். கணவன்- மனைவி அனுசரித்து நடந்து கொள்வது, உறவினர்களிடம் தேவையற்ற வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது. உடல் ஆரோக்கிய பாதிப்புகளால் சிறு சிறு மருத்துவ செலவுகளை செய்ய நேரிடும் என்பதால் ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவை. கொடுக்கல்- வாங்கலில் சிந்தித்து செயல்பட்டால் மட்டுமே அனுகூலப்பலனைப் பெற முடியும். தொழில் வியாபாரத்தில் ஓரளவுக்கு முன்னேற்றம் இருக்கும்.

**வெற்றி தரும் நாட்கள் - 15, 16, 19, 20.**



**துலாம்**

**துலாம் சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3ஆம் பாதங்கள்.**

நேர்மையே குறிக்கோளாக கொண்ட துலா ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு முயற்சி ஸ்தானமான 3-ல் சூரியன் வரும் 16-ஆம் தேதி முதல் சனி, கேது சேர்க்கைப் பெற்று சஞ்சரிப்பதால் எல்லா வகையிலும் ஏற்றமிகுந்த பலன்களை அடைவீர்கள். பணம் கொடுக்கல்- வாங்கல் போன்றவற்றில் பெரிய தொகைகளை எளிதில் ஈடுபடுத்தி லாபம் காண முடியும். தொழில் வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். புதிய வாய்ப்புகள் கிடைக்கப்பெற்று லாபம் அதிகரிக்கும். கூட்டாளிகள் மற்றும் தொழிலாளர்களின் ஒத்துழைப்பு மகிழ்ச்சியை அளிக்கும். உத்தியோகஸ்தர்கள் பணியில் கவனமுடன் செயல்பட்டால் உயரதிகாரிகளின் பாராட்டுதல்களை பெறமுடியும். மாணவர்களுக்கு கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**வெற்றி தரும் நாட்கள் -15, 16, 17, 18, 21.**



**விருச்சிகம்**

**விருச்சிகம் விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை.**

நியாய அநியாயங்களை பயமின்றி தெளிவாக எடுத்துரைக்கும் ஆற்றல் கொண்ட விருச்சிக ராசி நேயர்களே, உங்களுக்கு ஜென்ம ராசியில் புதன், 2ல் குரு சஞ்சரிப்பதால் நல்ல வாய்ப்புகள் உங்களை தேடி வரும். பண வரவுகள் சிறப்பாக அமைந்து உங்களது தேவைகள் பூர்த்தியாகும். கூட்டாளிகள் ஓரளவுக்கு அனுகூலமாக இருப்பார்கள். வெளியூர் வெளிநாட்டு தொடர்புடைய வாய்ப்புகளும் தேடி வரும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணிகளில் எதிர்பார்க்கும் கௌரவமான பதவி உயர்வுகளை அடையகூடிய சந்தர்ப்பங்கள் அமையும். முடிந்த வரை தேவையற்ற பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. பணம் கொடுக்கல்- வாங்கல் சரளமாக நடைபெறுவதால் எதிர்பார்த்த லாபத்தை பெற முடியும். கொடுத்த கடன்களையும் வசூலிக்க முடியும். மாணவர்கள் எதிர்பார்க்கும் அரசு உதவிகள் கிடைக்கும்.

**வெற்றி தரும் நாட்கள் - 17, 18, 19, 20.**



**தனுசு**

தனுசு மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்.

பல சாதனைகளைப் படைக்கும் வல்லமை கொண்ட தனுசு ராசி நேயர்களே, ஜென்ம ராசியில் சனி, கேது சஞ்சரிப்பதால் தேவையற்ற நெருக்கடிகள் ஏற்படும் என்றாலும் செவ்வாய் லாப ஸ்தானத்தில் இருப்பதால் எந்தவித பிரச்சினைகளையும் எதிர்கொள்ள கூடிய ஆற்றல் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் பொருளாதார நிலை சற்று மந்தமாக இருந்தாலும் பொருட் தேக்கம் ஏற்படாது. எடுக்கும் முயற்சிகளில் சற்று சிந்தித்து செயல்படுவது நல்லது. உத்தியோகஸ்தர்களுக்கு பணியில் நிம்மதியான நிலையிருக்கும். அசையும் அசையா சொத்துக்கள் வாங்கும் முயற்சிகளில் சிறு தடை தாமதத்திற்கு பின் அனுகூலப்பலன் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் சிறுசிறு பாதிப்புகள் தோன்றினாலும் அன்றாட பணிகளில் திறம்பட செயல்பட முடியும். உறவினர்கள் அனுகூலமாக இருப்பார்கள். மாணவர்கள் கல்வியில் சிறப்புடன் செயல்படுவார்கள்.

**வெற்றி தரும் நாட்கள் - 19, 20, 21.**



மகரம்

**மகரம் உத்திராடம் 2,3,4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2-ஆம் பாதங்கள்.**

எத்தனை துன்பங்கள் ஏற்பட்டாலும் அதை பொருட்படுத்தாமல் தைரியமாக அவற்றை எதிர்கொண்டு வாழக்கூடிய ஆற்றல் கொண்ட மகர ராசி நேயர்களே. உங்கள் ராசிக்கு சூரியன் வரும் 16ஆம் தேதி முதல் 12ல் சனி, கேது சேர்க்கைப் பெற்று சஞ்சரிப்பதால் வரவுக்கு மீறிய செலவுகள், நிம்மதி குறைவு ஏற்படலாம் என்பதால் எதிலும் பொறுமையுடன் இருப்பது நல்லது. ஆரோக்கியத்தில் அக்கறை எடுத்துக் கொள்வது உத்தமம். பணவரவுகள் ஏற்ற இறக்கமாக இருந்தாலும் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். தொழில் வியாபாரம் செய்பவர்கள் கிடைக்கும் வாய்ப்புகளை நழுவ விடாமல் பயன்படுத்தி கொள்வது உத்தமம். பெரிய முதலீடு கொண்டு செய்ய நினைக்கும் காரியங்களில் சிந்தித்து செயல்பட்டால் வீண் விரயங்களை தவிர்க்கலாம். உத்தியோகஸ்தர்கள் பிறர் விஷயங்களில் தலையீடு செய்வதை தவிர்த்து தங்கள் பணிகளில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. மாணவர்கள் கல்வியில் அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

**வெற்றி தரும் நாட்கள் - 15, 16, 21.**



கும்பம்

**கும்பம் அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள் சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்.**

அன்பும் சாந்தமும் அமைதியான தோற்றமும் கொண்ட கும்ப ராசி நேயர்களே. உங்கள் ராசியதிபதி சனி, குரு, கேது சேர்க்கைப் பெற்று 11ல் இருப்பதும் சூரியனும் 11ல் சஞ்சரிக்க இருப்பதும் மிகவும் அற்புதமான அமைப்பாகும். உங்களது செயல்களுக்கு பரிபூரண வெற்றி கிடைக்கும். தாராள தனவரவுகளால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தேவைகள் அனைத்தும் பூர்த்தியாவதுடன் கடன்களும் சற்று நிவர்த்தியாகும். உடல் ஆரோக்கியம் ஓரளவு சிறப்பாக இருக்கும். சுப காரியங்களுக்கான முயற்சிகளில் அனுகூலப்பலன்கள் உண்டாகும். முடிந்தவரை பெரிய தொகைகளை கடனாக கொடுப்பதை தவிர்ப்பது உத்தமம். உத்தியோகஸ்தர்கள் பணியில் நிம்மதியுடன் செயல்பட முடியும். உயரதிகாரிகளின் ஆதரவுகள் மகிழ்ச்சி அளிக்கும். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள்.

**வெற்றி தரும் நாட்கள் - 15, 16, 17, 18.**



மீனம்

**மீனம் பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி .**

பொறுமையும் தன்னம்பிக்கையும் கொண்டு திறமைசாலிகளாக விளங்கும் மீன ராசி நேயர்களே. உங்கள் ராசிக்கு 4ல் ராகு, 8ல் செவ்வாய் சஞ்சரிப்பதால் உடல் நிலையில் உஷ்ண சம்பந்தபட்ட பாதிப்புகள் தோன்றி மருத்துவ செலவுகள் செய்ய நேரிடும். ஆரோக்கியத்தில் அக்கறை எடுத்துக் கொள்வது நல்லது. பணவரவுகள் தேவைகேற்றபடி இருக்கும். சுக்கிரன் 11ல் சஞ்சரிப்பதாலும் வரும் 16ஆம் தேதி முதல் சூரியன் 10ல் சஞ்சரிக்க இருப்பதாலும் எதிர்பாராத உதவிகள் சில கிடைத்து தேவைகள் பூர்த்தியாகும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். தொழில் வியாபாரம் செய்பவர்களுக்கு சிறப்பான லாபம் கிடைக்கும் என்றாலும் பெரிய தொகைகளை ஈடுபடுத்தி செய்யும் காரியங்களில் சற்று சிந்தித்து செயல்படுவது நல்லது. கூட்டாளிகளையும் தொழிலாளர்களையும் அனுசரித்து செல்வது உத்தமம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணியில் கௌரவமான உயர்வுகள் உண்டாகும். பணம் கொடுக்கல்- வாங்கலில் கவனம் தேவை. மாணவர்களின் விருப்பங்கள் நிறைவேறும்.

**வெற்றி தரும் நாட்கள் -17, 18, 19, 20.**



# 2020-ம் ஆண்டில் இருந்து வாட்ஸ் அப் இயங்காத ஸ்மார்ட் போன் பட்டியல் தெரியுமா?




இன்னும் சில நாட்கள்தான் 2020-ம் ஆண்டில் இருந்து வாட்ஸ் அப் இயங்காத ஸ்மார்ட் போன் பட்டியல் தெரியுமா? 2020-ம் ஆண்டில் இருந்து குறிப்பிட்ட ஆண்ட்ராய்ட் ஸ்மார்ட் போன்களிலும், ஐபோன்களிலும் வாட்ஸ் அப் செயலி தனது செயல்பாட்டை நிறுத்தப்போவதாக அறிவித்துள்ளது. 2020-ம் ஆண்டு பிப்ரவர் 1-ம் தேதியில் இருந்து பழைய மாடல் ஆண்ட்ராய்ட் ஸ்மார்ட் போன்கள், மற்றும் ஐபோன்கள், விண்டோஸ் மொபைல் போன்களில் வாட்ஸ் அப் இயங்காது. அதன்படி, ஆண்ட்ராய்ட் 2. 3.7 ஆகிய வெர்சன்களில் வாட்ஸ் அப் இயக்காது. ஐபோன்களில் ஐஓஸ் 8 பிரிவிலும் வாட்ஸ் அப் செயலி அடுத்த ஆண்டில் இருந்து இயங்காது. இந்த மாடல் ஸ்மார்ட் போன்களில் புதிய வாட்ஸ்அப் கணக்குகளைத் தொடங்க முடியாது, ஏற்கெனவே இருக்கும் வாட்ஸ் அப் கணக்குகளையும் அப்டேட் செய்யவும் முடியாது. விண்டோஸ் ஸ்மார்ட் போன்களிலும் டிசம்பர் 31-ம் தேதி இரவில் இருந்து வாட்ஸ் அப் செயலி இயங்காது. விண்டோஸ் 10 ஓஎஸ் செயலியில் இயங்குவதற்கு வாட்ஸ் அப் அளித்து வந்த ஆதரவைத் திரும்பப் பெறுவதால் வரும் 31-ம் தேதிக்குப் பின் வாட்ஸ் அப் இயங்காது. ஒருவேளை விண்டோஸ் ஸ்மார்ட் போன் வைத்திருப்பவர்கள் தங்களுடைய சாட் தகவல்கள் அனைத்தையும், எக்ஸ்போர்ட் ஆப்ஷன் மூலம் சேமித்துக் கொள்வது உத்தமம். ஜியோ போன், ஜியோ போன்2 ஆகியவற்றில் செயல்படும் கேஏஐஎஸ் 2.5.1 ஆகிய ஆப்ரேட்டிங் சிஸ்டத்திலும் வாட்ஸ் அப் இயங்காது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் ஆண்ட்ராய்ட் 4.0.3, அதற்கு அதிகமான வெர்ஷன்களிலும், ஐபோன் ஐஓஸ்9 அதற்கு அதிகமான வெர்ஷன்களிலும் வாட்ஸ் அப் தன்னுடைய மேம்படுத்தப்பட்ட சேவைகளை வழங்கும். ஜியோ போன் மற்றும் ஜியோ போன்2 ஆகியவற்றில் இயங்கும் கேஏஐஓஎஸ் 2.5.1, அதற்கு மேம்பட்ட வெர்ஷன்களில் வாட்ஸ் அப் இயங்கும்.




# இனி வாட்ஸ் அப்பை உங்கள் கைரேகை இன்றி யாரும் திறக்க முடியாது

ஆண்டராய்டு போன் வாடிக்கையாளர்களுக்காக புதிய வசதி அறிமுகம் பயன்பாட்டாளர்களின் பாதுகாப்புக்காக கைரேகை வைத்து செயலியை திறக்கும் (fingerprint authentication) வசதியை வாட்ஸ் அப் அறிமுகப்படுத்தியுள்ளது. ஆண்ட்ராய்டு ஃபோன்களில் இந்த வசதியைப் பெறலாம். உலகளவில் பெருமளவில் வாடிக்கையாளர்களை தன்வசப் படுத்தி வைத்துள்ள வாட்ஸ் அப் செயலியை ஃபேஸ்புக் நிறுவனம் வாங்கியதில் இருந்தே பல்வேறு புதுமைகளை அதில் புகுத்தி வருகிறது. அந்த வரிசையில் பயன்பாட்டாளர்களின் பாதுகாப்புக்காக கைரேகை வைத்து செயலியை திறக்கும் (fingerprint authentication) வசதியை வாட்ஸ் அப் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த வசதி முன்னரே ஐஓஎஸ் போன்களில் வந்துவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது ஆண்ட்ராய்டு போன்களில் இதனை கொண்டுவந்துள்ளனர். இது குறித்து வாட்ஸ் அப் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், "ஆண்ட்ராய்டு போன்களுக்காக ஃபிங்கர் பிரின்ட் வசதியை அறிமுகம் செய்துள்ளோம். இதன்மூலம் பயன்பாட்டாளர்கள் ஹேக்கர்கள், குடும்ப உறுப்பினர்கள், பிரிந்து சென்ற காதல் உறவுகளிடமிருந்து தங்களின் உரையாடல்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம். முன்னதாக இந்த ஆண்டின் தொடக்கத்தில் டச் ஐடி, ஃபேஸ் ஐடி வசதியை ஐஃபோன் பயன்பாட்டாளர்களுக்காக அறிமுகப்படுத்தினோம். தற்போது ஆண்ட்ராய்டு வாடிக்கையாளர்களுக்காக கைரேகை பாதுகாப்பு வசதியை அறிமுகப்படுத்துகிறோம். வாடிக்கையாளர்கள் வாட்ஸ் அப் புதிய வெர்சனை டவுன் லோட் செய்தால் போதும் இந்த வசதியைப் பெறலாம். செட்டிங்க்ஸ்க்குச் சென்று, அக்கவுன்ட் பகுதியை க்ளிக் செய்து அதில் ப்ரைவசி என்பதை க்ளிக் செய்தால் ஃபிங்கர் பிரின்ட் லாக் என்ற ஆப்ஷன் இருக்கும். அதைத்தேர்வு செய்தால் போதும் உங்கள் வாட்ஸ் அப் செயலியை உங்களைத்தவிர யாரும் திறக்க இயலாது (tap Settings> go to Account> then Privacy and Fingerprint Lock. Turn on Unlock with fingerprint, and confirm your fingerprint)" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வளர்ந்துவரும் விஞ்ஞான உலகில் ஒருவரது அந்தரங்கம் பாதுகாக்கப்படுவது சிரமமான ஒன்று. வாட்ஸ் ஆப் பயனாளர்கள் அதிகம் கொண்ட இந்தியா போன்ற நாடுகளில் பாதுகாப்பாக வாட்ஸ் அப்பை பயன்படுத்த இந்த வசதி பெரிதும் உதவும் என பயனாளர்கள் தெரிவிக்கின்றனர்

# இலங்கை இனத்துவ முரண்பாட்டுஅரசியலில் கேலிச்சித்திரங்கள்

## இராசிபுரம் கிருஷ்ணசுவாமி லக்ஷ்மன் (R.K Lakshman)



இந்தியக் காட்டூன் உலகில் பிரபலம் பெற்றவர் ஆர்.கே.லக்ஷ்மன் ஆவார். இவரது காட்டூன்கள் சிந்தனையைக் கவருபவை. "You said it" (நீயே சொன்னாய்) எனும் தலைப்பில் காட்டூன் வரையத் தொடங்கினார். இவரது You said வை காட்டூன் கதாநாயகன் திருவாளர் பொதுசனம் தான்.

இவர் 24.10.1921 இல் இந்தியாவின் மைசூரில் பிறந்த பிரபல காட்டூன் கலைஞராவார். இவர் புகழ் பெற்ற எழுத்தாளர் ஆர். கே. நாராயணனின் இளைய சகோதரர். இவர் பல்வேறு பத்திரிகைகளில் கேலிச்சித்திரம் வரைந்து பிரபல்யம் பெற்றவர். இவர் முதன்முதலில் கன்னட நகைச்சுவை இதழான "கோரவஞ்சி" க்காகக் கேலிச்சித்திரங்கள் வரைந்தார். பின்னர் "Times of India" வில் "லுழர ளயனை வை" என்ற தலைப்பில் திருவாளர் பொதுஜனம் (Common man) என்கின்ற கதாபாத்திரத்தை 1951 முதல் அறுபதாண்டு காலமாக வரைந்ததன் மூலம் பட்டி தொட்டி எங்கும் பேசு பொருளாக மாறினார்.




சென்னையில் ஜெமினி ஸ்ரூடியோவில் ஆறு மாதம் பணிபுரிந்தார். பின் மும்பைக்குச் சென்று பிளிட்சு இதழில் பணி புரிந்தார். 1946 ஆம் ஆண்டு "Free press journal" இல் சேர்ந்தார். அங்கு பணியாற்றும்போது அதன் சார்பு இதழான "பாரதஜோதி" , வார இதழான "State's people supplemeny" இலும் காட்டூன்களை வரைந்தார். அங்கு நிர்வாகத்துடன் ஏற்பட்ட பிணக்குக் காரணமாக அங்கிருந்து வெளியேறி 1947 இல் "Times of India" எனும் பத்திரிகையில் இணைந்தார். 1952 இல் Common man Times of India வின் முதற்பக்கத்தில் இடம் பிடித்தது.

இவர் பிரிபிரிசு சனலில் பணியாற்றிய போது இவருடன் சிவசேனாவின் நிறுவுனர் "பால்தார்கரோ" வும் கேலிச்சித்திரக் காரராகப் பணியாற்றினார். Times of India வின் ஒன்றரை நூற்றாண்டு முடிவடைந்த நிலையில் ஊழஅஅழெ அயெ நினைவாக ஒரு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது. ஆர். கே. நாராயணனின் "மால்குடி நாட்கள்" எனும் தொலைக்காட்சித் தொடருக்கான ஓவியத்தின் சொந்தக்காரர் இவரே. மற்றும் இவர் ஏசியன் பெயின்ற் நிறுவனத்தின் முத்திரை (ஆயளஉழவ) யையும் இவரே வடிவமைத்தார். அத்துடன் இவர் உருவாக்கிய திருவாளர் பொதுஜனம் எனும் கதாபாத்திரம் சிலை உருப்பெற்று இப்பொழுதும் மும்பையில் காணப்படுகின்றது.




இவர் Times of India வில் வரைந்த ஓர் காட்டூன் இந்திய அரசியலில் ஒரு பிரளயத்தை ஏற்படுத்தியது எனலாம். அதாவது "இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம்" குறித்தான இவரது காட்டூன் ஒன்று பல்வேறு அரசியல்வாதிகளைத் தாக்கத்திற்கு உள்ளாக்கியது எனலாம். இக் காட்டூனானது NCRD யின் பன்னிரண்டாம் வகுப்புப் பாடப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளமை கூடுதல் சிறப்பாகும்.




இவரின் இக் கேலிச்சித்திரம் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதாக அமைந்து காணப்படுகின்றது என்றும், தைப் பாடத்திட்டத்தில் இருந்து அகற்ற வேண்டும் என்றும் பல்வேறு அரசியல் தலைவர்கள் கோரியுள்ளமையும் இங்கு கவனிக்கத்தக்கது. ஏனெனில் இக் காட்டூனின் வெளிப்பாடானது இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டக் காரர்களுக்கு ஆங்கிலம் தெரியாது என்றும், அவர்கள் படிப்பறிவு அற்றவர்கள் என்றும் கூறுகின்றது.

இவரின் சாதாரண இந்தியன் அபிப்பிராயங்கள் அற்ற ஒஉ அப்பாவி. இவரை அரசியல் மேடைகளிலும், வீதிகள், காரியாலயங்கள், விமான நிலையங்கள், சேரிப்புறங்கள் என எல்லா இடங்களிலும் காணமுடியும். அப்பாவித்தனமாக விளித்தபடி எல்லாமே தன் கையை மீறி நடக்கின்றன என்பதை ஒரு கையாலாகாத மௌன சாட்சியினூடாக லக்ஷ்மன் சாதாரண இந்தியனின் அபிலாஷைகளையும், கையறு நிலையையும் வெளிக்கொண்டு வருகின்றாஉ.



இவரது திருவாளஉ பொதுசனம் கால்நூற்றாண்டு வாழ்க்கையில் இதுவரை ஒருமுறை கூடப் பேசியது இல்லை. இதைப்பற்றி ஒருமுறை லக்ஷ்மனிடம் கேட்ட போது "ஒரு புத்திசாலியின் புத்திசாலித்தனமே அவனது மௌனத்தில் தான் அடங்கியிருக்கிறது. நமது அரசியல்வாதிகள் இதைப் பின்பற்றினால் இந்த நாடு எப்படி மாறிவிடும் தெரியுமா" என்றாஉ.

இவ் இந்திய கார்டூன் உலகின் மாமேதை 2015. 01. 26 இல் புனே நகரில் காலமானார்.




தொடரும்...



வாழ்க்கையில
என்ன வேணாலும்
மாறலாம்,

எப்பவேணா
மாறலாம்,

ஆனால் !

எப்பவும் எந்த
சூழ்நிலையிலும்
நாம மாறக் கூடாது.

நம்மள மாத்த விடவும்
கூடாது. . !!



# அங்கதன் பதில்கள்

கடந்த அரசினால் ஓகோ! என்று முன்னெடுக்கப்பட்ட கம்ரெலியாவிலும் ஊழலாமே?

பசுபதி. கல்லாக்கட்டுவன்

நல்லாட்சியில் ஊழல் இருக்காது என்பதற்கு எந்த உத்ரவாதமும் இல்லையே! இலங்கையில் ஊழல் என்பது ஒரு. ஜனநாயகச் செயற்படாகி வெகு காலமாகிவிட்டதே!

வருகின்ற சித்திரை 2020ற்கு முன்னர் தமிழருக்குத் தீர்வு என்கிறார் சுமந்திரன். ஏன் இப்படிக் கடன்காரன் மாதிரி ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு தவணை சொல்லுகிறார், அவஉ கந்து வண்டிப் பரம்பரையோ?

ஐ.நவகிரன், முள்ளியவளை

தவணை கேட்பதும் தவணை சொல்வதும் சட்டத்தரணிகளின் தொழில் பண்பே! சுமந்திரன் மட்டும் அதற்கு விதிவிலக்கா? என்ன!

இது பௌத்த நாடு என்று கொக்கரிப்பவர்கள் பற்றி என்ன சொல்லலாம்?

கை.வாமதேவன், கட்டுடை

நாடும் வேண்டாம் ஆட்சியும் வேண்டாம் என அன்பு மார்க்கம் தேடி ஞானி ஆன புத்தரைப் பற்றியும் அவரது மார்க்கம் பற்றியும் அறியாதவர்கள்

போற போக்கில் சிங்கள மொழியிலிருந்து தான் தமிழ் வந்ததாகச் சொல்லுவார்கள் போலிருக்கிறது.

பவளமலர் திரவியராசா, கோப்பாய்

பேரினவாத வெறி தலைக்கேறினால் யாவஉ எதை எப்படிவேண்டுமானாலும் பேசலாம் சொல்லுவார் சொன்னால் கேட்போருக்கு மதி யென்ன?

குடா நாட்டில் சைக்கிள் பாவனை அதிகமாக இருக்கிறது. ஆனால் சைக்கிள் திருத்தகங்கள் அருகி வருகின்றதற்கான காரணம்?

து.திசை நாதன், இளவாலை

சைக்கிள் புதிதாக வாங்குவதை விட திருத்தத்திற்கு ஆகும் செலவு அதிகமாகிவிட்டது!

பெருகிவரும் கட்சிகள் என்னத்தைச் சாதிக்கப் போகின்றன?

நே.தைரியநாதன், மன்னார்

தமிழினத்தின் ஒருமைப்பாட்டைச் சிதைத்துப் பலவீனப் படுத்தப் போகின்றன அவ்வளவு தான

வட மாகாணத்துக்குக் கவர்னராக நியமிக்கத் தகுதி வாய்ந்த தமிழர் இல்லை என்று சொல்லப்படுகிறதே! சூட்சுமம் என்ன?

பா. தயாளினி, சாவகச்சேரி

தகைமை வாய்ந்த தமிழரை இனம் காட்டக் கூடிய தலைமைத்துவம் கொண்ட அமைப்பு எதுவும் இல்லை என்பது ஒரு புறமிருக்க தமிழரல்லாத ஒருவரை நியமிக்க விரும்பும் அரசின் உள்நோக்கம் வேறு

இனியும் பொறுக்க முடியாது என்று ஒரு நிலை வருமரனால் ஒரு மனிதனின் அடுத்த கட்டம் என்னவாக இருக்கும்?

வி.கேதாரநாதன், நெல்லியடி

பொங்கி எழுந்து போராடி வெல்வதை விடவும் வேறு என்னவாக இருக்க முடியும்?

வெள்ளை மனதோடு இருக்க விரும்புகிறேன். அதற்கு என்ன செய்யலாம்?

எஸ்.மரியதாஸ். பண்டத்தரிப்பு

உள்ளொன்று வைத்துப்; புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்.

தமிழர் கனவுகள் எல்லாம் கானல் நீராகப் போகிறதுபோல இருக்கிறது. என்ன சொல்லுகிறீர்கள்?

வீ.மணிமலர். பரந்தன்

கனவை நனவாக்கும் வால்லமையை வளஉக்காவிட்டால் கானல் நீர் கூடக் கண்ணுக்குத் தெரியாது!

புதிய ஜனாதிபதி ஆட்சியில் கம்ரெலியா மாதிரி ஏதாவது வருமா? அரசியல்வாதிகள் சிலஉ குளிர்காய அது போல விடயங்கள் தேவைப்படுகிறதே!

பூ. மாதவன், சண்டிலிப்பாய்

எல்லா வெற்றிடங்களும் ஏதோ வொன்றால் நிரப்பப்படும் என்ற இயற்கையின் விதி அரசியலுக்கும் பொருந்தத் தானே செய்யும்

அரசியல் வாதிகளின் மீது தற்போது அடிக்கடி அவதூறானா செய்திகள் வருவது பற்றி?

அவர்கள் ஆரோக்கியமான எந்த செயல்களிலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளாமல் வெறும் அரசியல் வாதிகளாக இருப்பதால்!

ஜனாதிபதி வேட்பாளர் சிவாஜிலிங்கத்தை திடீரெனக் காணவில்லை போல் தெரிகிறது,

சி.மதி, துன்னாலை

அடுத்து வரப்போகும் தேர்தல் காலத்தில் தென்படுவார் கவலையே வேண்டாம்!

கூட்டமைப்புக்குள் ஏற்பட்டிருக்கிறது பிளவு. உண்மையா?

மா. போல்ராஜ். வட்டுக்கோட்டை

கூட்டமைப்பை உடைக்கோம் எனப் பங்காளிக் கட்சிகள் உளறத் தொடங்கியதை வைத்தே விரிசல் தொடங்கி விட்டதைப் புரிந்து கொள்ள முடியாதா? என்ன? ஒட்டுபோட்டு ஓட்டுக் கேட்கலாம்

பொருத்து வீடு என்ற விடயம் நீண்டகாலம் அரசியலாக்கப்பட்டு இழுபறி நிலையில் இருந்து வந்தது. தற்போது அது பற்றி ஒருவரும் பேசுவதில்லை. உண்மையில் அதுக்கு என்ன நடந்தது?

ஐ.மயூரன், மயிலிட்டி

அது நமக்குப் பொருந்தாத விடயம் பொருத்த மில்லாத வீடு என்று விட்டு விட்டார்களோ தெரியவில்லை

ஆட்கடத்தல் விவகாரம் கபட நாடகம் என்கிறார்கள். அப்படி சுவிஸ்காரனுக்கு என்ன வில்லங்கம் வந்துவிட்டது, நாடகமாடுவதற்கு? இதில் யார் உண்மை? யார் பொய்?

சி. பவுத்திரன், அளவெட்டி

இது வரை நாடகம் பற்றிய அறிவிப்புத் தான் வந்தது இப்போது தான் அரங்கேற ஆரம்பித்துள்ளது. உச்சக் கட்டத்தில் தான் உண்மை, பொய், முடிச்சு அவிழும்

பண்படாதவன் பண்பாட்டைப் பற்றிப் பேசுவது, எதனை ஒத்தது?

இரா.சற்குணநாதன், சுருவில்

ஒருவன் தன் பாட்டுக்குத் தனக்குச் சம்பந்தமில்லாத விடயத்தைப் பற்றி உளறுவதற்குச் சமனானது

இனவாதத்தைக் கக்கவெனப் பிறந்தவனை என்ன செய்யலாம்?

நா.திவாகரன், மட்டுவில்

விஷம் கக்கும் பாம்பை நீங்கள் என்ன செய்வீர்கள் ?

மருதாணிக் கலாசாரம் எங்கிருந்து வந்து தமிழரை எட்டியது?

மீ.தனுக்ஷா, சங்கத்தானை

அழகு படுத்தலும் ரசனை உணர்வும் மனித இனத்திடையே இயல்பாகப் புகுந்து கொள்ளும் கலாசாரப் பரிவர்த்தனையில் அம்சங்களேயாகும் !

முள்ளிவாய்க்கால் அவலத்தைப் பற்றி அடிக்கடி பேசப்படுகிறது. ஆனால் எவரும் அதிலிருந்து எவற்றையும் படித்ததாக இல்லையே. ஏன்?

பி.நித்திலா, ஒட்டிசுட்டான்.

அவல வலிகளை சுமக்காதவர்கள் தான் அதைப் பற்றி வெறுமனே தமது அரசியல் அபிலாக்ஷைகளை எட்ட பேசிப் பேசிப் பிழைப்பு நடத்துறாங்கள் பட்டறிவு அனுபவமுள்ளவர்கள் எரிமலையின் அமைதிகாத்து வாழ்கிறார்கள்



அங்கதனிடம் பதில்பெற வேண்டுவோர் உங்கள் கேள்விகளை சரியான பெயர் முகவரியுடன் தெளிவாக எழுதி newsdeepam19@gmail.com என்ற முகவரிக்கு அல்லது இல.151, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தரமான கேள்விகளை அனுப்புவோருக்கு 500 ரூபா பணப்பரிசில் வழங்கப்படும்.

பெயர் : ..................................

: ..................................

முகவரி ..................................

தொ.இல : ..................................



# அவர்கள் சொன்னதும் ஐயா சொல்வதும்

அடுத்தவர் ஐயா சம்பந்தன் அதாவது வரப் போகும் பொதுத் தேர்தலில் படித்த இளைய ஆட்களுக்கே வாய்ப்பு என்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்குத் தெரிவித்துள்ளாராம் அவர்.

அப்படியானால் ஆரோக்கியமான செய்திதான் ஆனால் சம்பந்தன் ஐயா உட்படத் தலைவர்கள் புதிய தலைமுறை இளைஞர் யுவதிகளுக்கு கூட்டமைப்பையும் தமிழ் மக்களையும் வழி நடத்தும் பொறுப்பை முழுமையாகக் கையளித்துவிட்டுக் கட்சிக்கு வெளியே இருந்து அதனை வழி நடத்தும் பொறுப்பை ஏற்றுச் செயலாற்ற வேண்டிய காலத் தேவையை சம்பந்தர் தமிழ் மக்கள் கையறு நிலையில் உள்ள இந்தக் கட்டத்தில் புரிந்து கொண்டுள்ளாரா என்ற கேள்வி எழவே செய்கிறது

அதேசமயம் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் எப்போதும் தற்காலிகக் கனவுகளில் மிதந்து கொண்டிருப்பவர்கள். ஐயாவின் இந்தமுடிவுக்கு கை தட்டி வரவேற்பார்கள் என்பது சாத்தியமாகாது என்றே தோன்றுகிறது. இன்றைய கூட்டமைப்பின் தலைவர்கள் அனைவருமே தமக்குப் பின்னால் நிற்கும் புதிய தலை முறை இளைஞர்களுக்குத் தமக்கு ஜால்ராபோடும் பண்பை மட்டும் வளர்த்து விட்டிருக்கிறார்கள்

பங்காளிக் கட்சியின் இளைஞர்களிடையே மோதலையும் முரண் நிலைகளையுமே வளர்த்து விட்டிருக்கிறார்கள் என்பது வெளிப்படை. இது ஒரு ஆபத்தான நிலையே கட்சிகள் அரசியல் அபிலாசைகள் தமிழினத்தின் அரசியல் அபிலாசைகளுக்குப் பெரும்பாலும் ஏற்புடையதாக இருந்தது கிடையாது.

கட்சித் தேர்தல்களுக்குள் இன ஒருமைப் பாட்டைச் சீரழித்த வரலாற்றையே அன்றிலிருந்து இன்றுவரை அரசியல் வியாபாரம் செய்த தமிழ் தலைவர்கள் அனைவரும் செய்து வந்த விளைவையே தமிழ் மக்கள் இன்று அறுவடை செய்கின்றனர்

எது எப்படியோ தமிழ் தலைமைகளின் பேரம் பேசும் அரசியல் மூலோபாயம் மக்கள் நலனின் பேரால் தனிநபஉ அபிலாக்ஷைகளுக்கேற்ப இது வரைகாலமும் சுய நலவெறியுடன் திட்டமிட்டதன் பின் விளைவே இன்று உரிமைகளைப் புறந்தள்ளிச் சலுகை அரசியல் சகதிக்குள் அவஉகளைத் தள்ளிவிட்டிருக்கிறது.

கடைசியாகப் பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்ட ஒரு முயற்சியை சம்பந்தன் ஐயா தலைமையிலான கூட்டமைப்பு எப்படிப் புறமொதுங்கியது என்பது மக்களுக்குத் தெரியாததல்ல.

அதே ஆட்கள் படிச்ச இளம் ஆட்களுக்கு வாய்ப்பளிக்கப் போகிறார்களாம் அதை மக்கள் நம்பவேண்டுமாம் கோவிந்தா! கோவிந்தா!

★★★



## விளையாட்டு உலகில்

# தெற்காசிய போட்டிகளில் சாதித்த இலங்கை



நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கை வரலாற்றுச் சாதனையை பதிவு செய்துள்ளது. தெற்காசிய விளையாட்டில் கலந்து கொண்ட இலங்கை குழாம் முதன்முறையாக பெருமளவு பதக்கங்களை வெற்றி பெற்ற நிலையில், நாடு திரும்பியிருந்தது.

தெற்காசிய நாடுகள் கலந்து கொண்ட இந்த போட்டியில் இலங்கை 40 தங்கம், 83 வெள்ளி, 128 வெண்கலப் பதக்கங்கள் உள்ளடகங்களாக 251 பதக்கங்களை வென்று மூன்றாமிடத்தை பெற்றிருந்தது. இதுவரை நடைபெற்ற சர்வதேச போட்டியொன்றில் இலங்கை பெற்ற அதிகூடிய பதக்கங்கள் இதுவாக கருதப்படுகின்றது. 2001ஆம் நடைபெற்ற தடகளப் போட்டியில் இலங்கை குழாம் 178 பதக்கங்களை பெற்றமையே அதி கூடியதாக இருந்தது. தற்போது அது முறியடிக்கப்பட்டு புதிய சாதனை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவர்களில் அமஷா டி சில்வா, நதீஷா ராமநாயக்க, துலஞ்சலி ரணசிங்க ஆகிய வீராங்கனை அதிகூடிய தங்க பதக்கங்களை வென்று இலங்கைக்கு பெருமை சேர்ந்துள்ளனர்.

இந்தியா 172 தங்க பதக்கங்கள், 93 வெள்ளிப் பதக்கங்கள் 45 வெண்கல பதக்கங்கள் அடங்களாக மொத்தமாக 310 பதக்கங்களை பெற்றுள்ளது. 51 தங்க பதக் கங்கள், 59 வெள்ளிப் பதக்கங்கள், 94 வெண்



கல பதக்கங்கள் அடங்களாக 204 பதக்கங்களுடன் நேபாளம் பதக்க பட்டியலில் இரண்டாம் இடத்தில் உள்ளது. பாகிஸ்தான், பங்களாதேஸ், மாலைத்தீவு மற்றும் பூட்டான் ஆகிய நாடுகள் பதக்க பட்டியலில் அடுத்த அடுத்த இடங்களில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# லா லிகா கால்பந்து தொடரின் இந்தியாவுக்கான தூதராக ரோஹித் சர்மா!

ஸ்பெயினில் நடைபெறும் கால்பந்து கழகங்களுக்கிடையிலான புகழ்பெற்ற லா லிகா கால்பந்து லீக் தொடரின், இந்தியாவுக்கான முதல் தூதராக அந்த விளையாட்டோடு தொடர்பில்லாத மற்றொரு விளையாட்டு வீரரான இந்திய கிரிக்கெட் அணியின் துணை தலைவர் ரோஹித் சர்மா நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 2017ஆம் ஆண்டிலிருந்து லா லிகா கால்பந்து லீக்கில் உள்ள பிரபல அணிகளான பார்சிலோனா, ரியல் மெட்ரிட் கழக அணிகள் இந்தியாவில் கால்பந்து விளையாட்டைப் பரப்ப பல்வேறு முயற்சிகளை எடுத்து வரும் நிலையில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் அலுவலகத்தைத் திறந்து மக்களிடம் கால்பந்து விளையாட்டைப் பரப்ப நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன் ஒருபகுதியாக ரோஹித் சர்மாவைத் தூதராக நியமித்து கால்பந்து விளையாட்டைப் பரப்பத் திட்டமிட்டுள்ளது குறித்து ரோஹித் சர்மா கூறுகையில், "இந்தியாவில் கால்பந்து விளையாட்டுக்கு உலகளாவிய வளர்ச்சி இருக்கிறது, மக்களிடம் வரவேற்பும் இருக்கிறது. கடந்த 5 ஆண்டுகளாக இந்தியாவில் கால்பந்து விளையாட்டுக்கான வளர்ச்சி அதிகரித்து வருவதுடன் அதன் மோகமும் இளைஞர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது. லா லிகா கால்புந்து தொடரின் இந்தியத் தூதராக நான் நியமிக்கப் பட்டது எனக்குப் பெருமையாக இருக்கிறது. ஸ்பெயின் நாட்டுக் கால்பந்து அணியின் நட்சத்திர வீரர்களைப் பார்ப்பதும் எனக்கு ஊக்கமாக அமையும். இருந்தபோதிலும் இந்தியாவில் உள்ள கால்பந்து ரசிகர்களை லா லிகாவின் தூதராகச் சென்று சந்திப்பதில் ஆர்வமாக இருக்கிறேன்.இந்திய கிரிக்கெட் அணி வீரர்களான லோகேஷ் ராகுல், ஹர்திக் பாண்ட்யா, ஸ்ரேயாஸ் ஐயர் உள்ளிட்டோர் கால்பந்து போட்டிகளை தீவிரமாக பார்ப்பார்கள். மனம் கவர்ந்த கால்பந்து நட்சத்திரங்களின் 'ஹேர் ஸ்டைலை' இவர்களும் பின்பற்றுவர். ரியல் மெட்ரிட் கழக அணி மிகவும் பிடிக்கும். அணியில் அனைத்து வீரர்களும் ஒன்றிணைந்து செயற்படுவது, கால்பந்து மீதான ஆர்வம் என பல விடயத்தில் ரியல் மெட்ரிட் போட்டிகளை இரசித்துப்பார்ப்பேன். டோனி முதற்தர இந்திய அணியில் போட்டிகளுக்கு தயாராகும் போது, கால்பந்து விளையாடுவோம். நான் மத்திய கள வீரராக செயற்பட விரும்புவேன். கால்பந்தில் இந்த இடம் மிகவும் கடினமானது. நமது அணியில் டோனி தான் 'நம்பர் 1' கால்பந்து வீரர். கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவில் கால்பந்து அசுர வளர்ச்சியை எட்டி உள்ளது.இந்திய அணி விளையாடும் போட்டிகள், ஐ.எஸ்.எல், லீக் போட்டிகளை பார்த்து இதை தெரிந்து கொள்ளலாம். கிரிக்கெட்டிற்கு ஐ.பி.எல், போல, இளம் கால்பந்து வீரர்களுக்கு ஐ.எஸ்.எல், தொடர் வாய்ப்பு அளிக்கிறது' என கூறினார்.





சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை பல மொழிகளுக்கான உரையாடல் மையத்தின் ஊடாக Topaz நிறுவனமானது முதல் கட்டமாக நிவாரண பொதிகளை வழங்கி உதவியுள்ளது.













## யாழ்ப்பாணம்

227&6 கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம். (மதவடி அருகில்)
021 224 2022, 071 454 6956

முதலாம் கட்டைச்சந்தி,
பருத்தித்துறை.
021 492 3201, 071 154 6961

36, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (கச்சேரி அருகில்)
021 222 6699, 071 777 6969

ஓம்பிளாசா, பருத்தித்துறை வீதி,
ஆவரங்கால்.
021 222 6688, 071 454 6969

கண்டி வீதி, சாவகச்சேரி.
(நீதிமன்றம் அருகில்)
021 227 0700, 071 454 6957

கே.கே.எஸ் வீதி,
தெல்லிப்பளைச்சந்தி தெல்லிப்பளை.
021 224 3737, 071 454 6959

பிரதான வீதி, (பொலிஸ் நிலையம் முன்பாக), நெல்லியடி.
021 300 6550, 071 454 6958

இராமநாதன் வீதி, திருநெல்வேலி
(பல்கலைக்கழகம் முன்)
021 221 4488, 077 722 7740

பிரதான வீதி, காரைநகர்,
சித்தங்கேணி.
021 225 2500,
076 212 1299

## கிளிநொச்சி

புளியமடிச்சந்தி, முல்லை வீதி,
விசுவமடு.
021 320 1515,
077 858 5263

ஏ9 வீதி, கிளிநொச்சி
(கச்சேரி முன்பாக)
021 228 5505,
071 454 6955

நாச்சிக்குடா சந்தி,
மன்னார் வீதி,
முழங்காவில்.
021 300 6544,
070 333 6161

வாடியடிச்சந்தி, பூநகரி.
021 320 1818,
070 333 7171

## வவுனியா

216, ஏ9 வீதி, வவுனியா.
(வசந்தி திரையரங்கு முன்பாக)
024 222 7777,
0777 100 444

## மன்னார்

94, பிரதான வீதி, மன்னார்.
023 225 1656,
077 847 2732

- விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்
- இரவு நேர வாகனப் பயிற்சி
- தவணைமுறைக் கட்டணங்கள்
- சகல கிளைகளிலும் வாகனப் பயிற்சி
- விசேட பரீட்சை ஒழுங்குகள்

**இல.226 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 4353, 021 492 3200, 071 454 6960**

தீபம் பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிக்கு அனைத்து மாவட்டங்களிலிருந்தும் விளம்பர முகவர்கள் தேவைப்படுகின்றார்கள். உடன் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் **077 198 9445**


இந்தப் பத்திரிகை இல. 151, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தால் 15.12.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.